ජාතික ප්‍රතිපත්ති, ආර්ථික කටයුතු, නැවත පදිංචි කිරීම් හා පුනරුත්ථාපන, උතුරු පළාත් සංවර්ධන සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு

Ministry of National Policies, Economic Affairs, Resettlement & Rehabilitation, Northern Province Development and Youth Affairs

# 2018

# කාර්යසාධන වාර්තාව

# செயற்திறன் அறிக்கை

# Performance Report

# කාර්යසාධන වාර්තාව
# செயற்திறன் அறிக்கை
# Performance Report

# 2018

ජාතික ප්‍රතිපත්ති, ආර්ථික කටයුතු, නැවත පදිංචි කිරීම් හා පුනරුත්ථාපන, උතුරු පළාත් සංවර්ධන සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, மற்றம் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு

Ministry of National Policies, Economic Affairs, Resettlement and Rehabilitation, Northern Province Development and Youth Affairs

# அமைச்சின் மேற்பார்வையின் கீழ் வரும் நிறுவனங்கள்

2019.03.18 ஆம் திகதியிடப்பட்ட 2115/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவாக தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கீழ் பின்வரும் திணைக்களங்கள்/ நியதிச் சட்டசபைகள் மற்றும் நிறுவனங்கள் காணப்படுகின்றன.

**திணைக்களங்கள்**

தேசிய திட்டமிடல் திணைக்களம்

**நியதிச் சட்டசபைகள் மற்றும் நிறுவனங்கள்**

தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி சபை
தேசிய தொழிற்பாடுகள் சபை
நட்ட ஈட்டுற்கான அலுவலகம்
புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம்
பனை அபிவிருத்திச் சபை
வரையறுக்கப்பட்ட வடக்கு கிழக்கு
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
தேசிய இளைஞர் படையணி
தேசிய இளைஞர் விருதுகள் அதிகார சபை
வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு
தலைமைத்துவ செயற்திறற்கான பிரதேச அபிவிருத்தி பிரிவு

# பொருளடக்கம்


கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரின் செய்தி ...... XII

கௌரவ இராஜாங்க தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், அமைச்சரின் செய்தி ...... XVI

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளரின் செய்தி ...... XX

**அத்தியாயம் 1 - தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு**

1.1 அறிமுகம் ...... 97
1.2 பிரதான பணக்கூறுகள் ...... 98
1.3 அமைச்சின் நிறுவனரீதியான அமைப்பு ...... 99

**அத்தியாயம் 2 – தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**

2.1 அமைச்சின் தூர நோக்கு, நோக்கம் மற்றும் குறிக்கோள் ...... 101
2.2 அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு ...... 102

**அத்தியாயம் 3 – தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு பிரிவின் முக்கியக கருத்திட்டங்கள் /பணிகளின் செயற்திறன்**

3.1 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித் திட்டம் 2018 ...... 111
3.2 கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2018 ....... 113
3.3 மதம்சார் நிலையங்களை அபிவிருத்தி செய்வக்கான நிகழ்ச்சித்திட்டம் - 2018 ...... 115
3.4 கம்பெரலிய–துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ...... 118
3.5 திட்டமிடல் மற்றும் கொள்கை அமுலாக்கலுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் ...... 120
3.6 1990 சுவசெறிய மன்றம் வைத்தியசாலைக் கவனிப்புக்கு முந்திய அவசர அம்பியூலன்ஸ் சேவை கருத்திட்டம் - கட்டம் II ...... 129
3.7 மத்திய நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவப் பிரிவு (CPMU) ...... 130
3.8 பொருளாதார விவகாரங்கள் பிரிவின் முன்னேற்றம் - 2018 ...... 135
3.9 சிறப்பு அபிவிருத்தித் திட்டங்கள் ...... 144
3.10 தேசிய திட்டமிடல் திணைக்களம் ...... 152

**அத்தியாயம் 4 – மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு மற்றும் வடமாகாண அபிவிருத்தி பிரிவினது செயலாற்றுகை**


| | | | |
|---|---|---|---|
| 4.1 | சுருக்கமாக மீள்குடிறேற்ற செயற்திறன் | …… | 159 |
| 4.2 | புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் | …… | 167 |
| 4.3 | ஆட்களையும், ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை | …… | 174 |
| 4.4 | வரையறுக்கப்பட்ட வடக்கு கிழக்கு | …… | 178 |
| 4.5 | பனை அபிவிருத்திச் சபை | …… | 186 |


**அத்தியாயம் 5 - இளைஞர் விவகாரங்கள் பரிவின் செயற்திறன்**


| | | | |
|---|---|---|---|
| 5.1 | அறிமுகம் | …… | 191 |
| 5.2 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | …… | 195 |
| 5.3 | தேசிய இளைஞர் படையணி | …… | 196 |
| 5.4 | சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி | …… | 197 |
| 5.5 | தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம் | …… | 198 |


**அத்தியாயம் 6 – செயற்திறனிற்கான பிரதேச அபிவிருத்தி பிரிவு**


| | | | |
|---|---|---|---|
| 6.1 | மூலதன முதலீடு | …… | 199 |
| 6.2 | இலங்கை ஹதபிம அதிகார சபை | …… | 199 |
| 6.3 | பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | …… | 200 |
| 6.4 | பன்முகப்படுத்தப்பட்ட மூலதன வரவுசெலவுத் திட்டநிகழ்ச்சித் திட்டம் | …… | 201 |
| 6.5 | 2019ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கான உத்தேச நிகழ்ச்சித் திட்டங்கள் | …… | 201 |


இணைப்புக்கள் – செலவு அறிக்கைகள்


இணைப்பு I: தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் பிரிவு

இணைப்பு II: மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு மற்றும் வடமாகாண அபிவிருத்தி பிரிவு

இணைப்பு III: இளைஞர் விவகாரங்கள் பிரிவு

இணைப்பு IV: பிரதேச அபிவிருத்தி பிரிவு

# கௌரவ பிரதம மந்திரி மற்றும் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்



தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அரசாங்கத்தின் தூரநோக்கு 2025 இல் குறிப்பிடப்பட்டவாறு 2018 இல் பல்வேறு முன்னேற்றங்களை பெருமளவில் போட்டித்தன்மை மற்றும் அறிவை மையமாகக் கொண்ட சமூக சந்தைப் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரதமாக மாற்றுவதில் பெற்றுள்ளது. இலங்கையின் நீண்டகால இலட்சியமாக இந்து சமுத்திரத்தின் புவி-பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதன் மூலம் பழைய மகிமையை மீண்டும் பெறுவதாகும். இக்குறிக்கோளுடன், இலங்கை முழுவதுமாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த பொருளாதார சீர்திருத்தங்களின் ஒரு தொடர்ச்சியை நாம் அறிமுகப்படுத்த முயல்கின்றோம். தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சானது இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கினை வகித்துவருகின்றது. அமைச்சு முதலீட்டு நட்புறவான நிலையான பேரண்டப்பொருளாதார கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு அடியெடுத்து வைத்துள்ளது.

தேசிய நல்லிணக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உயர்ந்த மட்டத்திற்கு பொருளாதாரத்தை எடுத்துச்செல்லும் பயணத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. சர்வதேச மட்டத்தில் இலங்கையின் விம்பத்தைப் புதுப்பித்தல் பொருட்டு அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டமூலம், சுயாதீன ஆணைக்குழுவை அமைத்தல், தகவலைப் பெறுவதற்கான சட்டத்தின் முழுமையான அமுலாக்கம், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை மீளமைத்தல், முன்மொழியப்பட்டுள்ள நல்லிணக்கப் பொறிமுறை மீதான பொது ஆலோசனைகள், அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் நல்லாட்சிக் கலாச்சாரத்தை வழிகாட்டும் அரசியலமைப்புச் சபையைக் கட்டமைத்தல் என்பன குறிப்பிடக்கூடியது.

2020 ஆண்டில் மொத்த உள்நாட்டுற்பத்தியில் 79.3 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக கடன் விகிதத்தைக் குறைப்பதற்கான சிறந்த கடன் முகாமைத்துவ தந்திரோபாயத்தை அறிமுகப்படுத்தியது. குடிமக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் பொருட்டு அனைத்து வழிகளிலும் நடவடிக்கைகளை எடுத்த அதேவேளை வாழ்க்கைச் செலவை இலகுபடுத்தவும் எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தர உயர்வு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் துரிதப்படுத்தல் ஆகியவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் உடனடி மற்றும் துரித அமுலாக்கத்தின் செயற்படுத்துதலின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை 'கம்பெரலிய' எனும் பெயரில் எமது அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் யூலை 2018 இல் துரிதகதியில் நாடுபூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டிறுதி வரை தொடரும். ரூபா. 19,883 மில்லியன் பெறுமதியான 51,509 மொத்த கருத்திட்டங்கள் அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம (DCB'), கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (RISP), மதம்சார் நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம், மற்றும் 'கம்பெறளிய' துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆகியன எனது அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, 2018 இல் 46,266 சிறியளவு கருத்திட்டங்கள் அடங்கிய 16,913 DCB கருத்திட்டங்கள், 3,742 RISP கருத்திட்டங்கள், 361 மதம்சார் நிலையங்கள் மற்றும் 25,250 கம்பெறளிய கருத்திட்டங்கள் கிராமமட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இக்கருத்திட்டங்களின் மொத்த முதலீடானது ரூபா. 16 பில்லியனைத் தாண்டியுள்ளது.

வளர்ந்து வரும் பூகோள சூழ்நிலையுடன் எமது நாடு, ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றைக் கொண்டிருப்பதுடன் ஒரு நவீன நாட்டை உருவாக்குவதனை நோக்கி அணிவகுத்து நிற்பதனையிட்டு பெருமிதமடைவதுடன் இக்குறிப்பை நிறைவுசெய்கின்றேன்.

இந்த முன்னேற்றத்தை பெறுவதன் பொருட்டு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கிய தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் ஆளுகையின் கீழ்வரும் நிறுவனங்களது உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.



ரணில் விக்கிரமசிங்க
கௌரவ பிரதம மந்திரி மற்றும் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள இராஜாங்க அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு 2018 ஆம் ஆண்டில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து எனது வாழ்த்தினை தெரிவிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை நான் பெற்றதொரு பாக்கியமாக கருதுகின்றேன்.

அரசியல் ரீதியாகவும் சமூக மற்றும் பொருளாதார ரீதியாகவும் பல சவால்களை வெற்றிக் கொண்ட திடமான அபிவிருத்தியை நோக்கி நமது தேசத்தை முன்நோக்கிச் செல்வதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளதோடு சில சந்தர்ப்பங்களில் உருவாகும் இடையூருகளை நிவர்த்தி செய்து அவ் இலக்கை நோக்கிச் செல்லும் பயணத்தின் ஆரம்பம் கிராம மக்களை மையமாகக்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களே என்பதை நமது அரசாங்கம் நன்கறிந்துள்ளது.

கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தல் மற்றும் வாழ்க்கை நிலையை உயர் மட்டத்திற்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளவேண்டிய அடிப்படை வசதிகளை அபிவிருத்திச் செய்வதை பிரதான நோக்கமாகக் கொண்டு எமது அமைச்சு திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

தேசிய பொருளாதார இலக்குகளை அடைவதோடு, அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்கள் அடையும் வேளையில் கௌரவ பிரதமரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பல துறைகளிள் அபிவிருத்தி திட்டங்களை மிகச் சிறந்த முறையில் பூர்த்திச்செய்துள்ளது என்பதற்கு கிராம மக்களே சிறந்த ஆதாரமாகும்.

எதிர் நோக்கும் சவால்களுக்கு சிறந்த முறையில் முகம்கொடுத்து அபிவிருத்தியை மையமாகக்கொண்ட நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுச்செல்லும் கௌரவ பிரதமர் மற்றும் பொருப்பேற்ற அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு கௌரவமழிப்பதற்கு இதனை சிறந்த வாய்ப்பாக நான் கருதுகின்றேன். அத்துடன் அமைச்சின் செயளாலர் மற்றும் பணியாற்றும் ஊழியர்கள் வழங்கும் ஒத்துழைப்பையும் பாராட்டுவதுடன் கிராம மக்களின் வாழ்க்கை வலுப்படுத்துதல், சிறிய, நடுத்தர மற்றும் பாரிய திட்டங்கள் காலத்திற்கு ஏற்ற வகையில் மேற்கொள்வதையும் தெளிந்த முறையை கொண்ட பொருளாதார திட்டத்தை உருவாக்குவதன் மூலம் சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கு வேண்டிய சக்தியை எமது அரசாங்கத்திற்கும் அரசு சேவைக்கும் கிடைக்குமாரு இறைவனை பிரார்த்திக்கின்றேன்.



நிரோஷன் பேரேரா
இராஜாங்க அமைச்சர்
தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு

## தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளரின் செய்தி



தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் 2018 ஆம் ஆண்டின்போது பெறப்பட்ட முன்னேற்றங்கள் அடங்கிய 2018ம் ஆண்டின் செயலாற்று அறிக்கையை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

செயலாற்றுகையின் ஆரம்பத்திலிருந்து, தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு ஆனது நாட்டின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதன் பொருட்டு கொள்கைகளை அறிமுகப்படுத்தவும், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்தவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தேசிய கொள்கைகள் தயாரித்தல் செயன்முறைக்குப் பொறுப்பான முக்கிய அமைச்சாகவிருப்பதனால், பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், மற்றும் ‘கம்பெறளிய’ துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றில் செலுத்தும் விசேட கவனத்துடன், இவ்வமைச்சானது தனது ஆளுகைக்குக் கீழான நிறுவனங்களை ஒருங்கிணைத்து அவற்றின் குறிக்கோள்களை அடைய வசதிப்படுத்துவதில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

மேலதிகமாக, இளைஞர் விவகாரங்கள் என்பவற்றிற்கான முக்கிய அமைப்பாகவிருப்பதனால், இவ்வமைச்சு பாடசாலையிலிருந்து வெளியேறியோரின் தொழிற்பயிற்சி மற்றும் திறன்களை உயர்த்துவதற்கும் வேலைவாய்ப்பு சந்தையை அணுகுவதற்குரிய அதிக வாய்ப்புக்களை வழங்குவதற்கும் முக்கிய பங்காற்றுகின்றது.

இந்த அமைச்சின் நடவடிக்கைகளின் வெற்றிகரமான அமுலாக்கலுக்கலை நோக்கி தலைமைத்துவம் மற்றும் திறமையான வழிகாட்டுதலை வழங்கிய இவ்வமைச்சின் கௌரவ அமைச்சர், கௌரவ இராஜாங்க அமைச்சர், மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோருக்கு நான் நன்றி தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ள விரும்புகின்றேன். மேலும், அமைச்சினதும், அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அலுவலர்களுக்கும், செயற்திறனை பெற்றுக்கொள்வதில் அவர்களின் முழுமையான ஒத்துழைப்பிற்கும் நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வே. சிவஞானசோதி**

செயலாளர்

## அத்தியாயம் 01

## தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு

### 1.1 அறிமுகம்

2018.12.28 ஆம் திகதிய 2103/33 இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் முன்னைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் இடத்திற்குப் பதிலாக தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு 2018 மார்கழி மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. 18.03.2019 ஆம் திகதிய 2115/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் அமைச்சின் பெயர் தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சாக திருத்திப்பட்டுள்ளது. அதற்கமைய அமைச்சின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களும் அவற்றின் தொழிற்பாடுகளும் திருத்தப்பட்டுள்ளன.

இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கும் உயர்த்துவதற்கும் இவ்வமைச்சானது பணியாற்றுகின்றது. அமைச்சானது மக்களின் வருமான மட்டத்தினை உயர்த்தும் நோக்கிலும் மற்றும் பாடசாலை / தொழிற்பயிற்சி / பல்கலைக்கழக கல்வியினை நிறைவு செய்த பின்னர் இளைஞர்களிற்கு அதிக வருமானம்பெறும் தொழில் வாய்ப்பை வழங்கும் அதேவேளை இலங்கையை ஒரு அறிவு மையமாக மாற்றுதல். இது எதிர்கால சவால்களிற்கு முகம்கொடுக்கும் வகையில் இளைஞர்களின் இயலுமையை அதிகரிப்பதுடன் தொடர்புபடுகின்றது அதேளை அவர்களற்கான கௌரவமான வாழ்கை முறைக்கான வழியினை உறுதிசெய்கின்றது. அதற்கு மேலதிகமாக, இந்த அமைச்சுக்குப் பொறுப்பான விடயமாக முப்பது வருடங்களிற்கு மேலாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்கு பொறுப்பாகவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களிற்கான மீள்குடியேற்றம், மனிதாபிமான தேவைகளை வழங்குதல், அத்துடன் அவர்களிற்கான ஏனைய தேவைகள், தவறாக வழிநடத்தப்பட்ட மக்களிற்கான மீள்-ஒருங்கிணைப்பு, அவர்களின் உரிமையை பாதுகாத்தல் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக கலாச்சார விழிமியங்களைப் பாதுகாப்பதுடன் சமுதாயத்தில் நல்ல குடிமக்களாக இணைத்துக்கொள்ளுதல் ஆகியன இவ்வமைச்சின் பிரதான கடமைப்பொறுப்பாகும்.

மேலும், நாட்டினுடைய கிராமிய பொருளாதாரத்தினை நவீனப்படுத்துவதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்குமான தேசிய கொள்கைகளிற்கு அமைவான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல். தனியார், அரச, மற்றும் பொதுமக்கள் பங்களிப்பினை ஊக்குவித்தலுடன் அபிவிருத்தியின் பிரதேச ரீதியான சமத்துவத்தினை உறுதிசெய்யும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலை உறுதிசெய்யும் வகையில் இவ்வமைச்சினால் கருத்திற்கொள்கின்றது. நல்லாட்சிக்கு ஏற்றவகையில் பொதுமக்களின் சமூக பொருளாதார நல்வாழ்வினை அடைந்து கொள்ளுதல், நீண்டகால சுபீட்சம் மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகிய நோக்கில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. பின்வரும் கொள்கை வழிகாட்டல்களின் பிரகாரம் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

I. 2015 ஜனாதிபதி தேர்தலுக்கான “மைத்திரி பாலனய” கொள்கை விளக்கம்

II. அரசாங்கத்தின் ஐந்து அம்ச தந்திரோபாய கட்டமைப்பு “60 மாதங்களில் புதியதொரு நாடு : ஐந்து அம்ச செயற்றிட்டம்” ஆனது பிரதானமாக அடையப்பட வேண்டிய ஐந்து இலக்குகளான பொருளாதாரத்தை விருத்தி செய்யும் செயற்றிட்டம், ஊழலை பூண்டோடு

ஒழிக்கும் செயற்றிட்டம், சுதந்திரத்தை உறுதி செய்யும் செயற்றிட்டம், உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீட்டுச் செயற்றிட்டம், மற்றும் கல்வியை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம், என்பனவற்றை வலியுறுத்துகின்றது.

III. பிரதம மந்திரியின் அலுவலகத்தினால் 2017 தைமாதம் பிரசுரிக்கப்பட்ட " ஒரு சக்திவாய்ந்த இலங்கை" கையேடு.

IV. "தூர நோக்கு 2025 " செழுமைப்படுத்தப்பட்ட ஒரு நாடு – ஒரு நவீன பொருளதாதாரத்தின் தோற்றப் பண்புகளின் மாற்றம்" ஆவணம் 04.09.2017 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது.

V. பிரதம மந்திரியினால் பாரளுமன்றத்திற்கு 2015 கார்த்திகை மாதம் 5ம் திகதியும், 2016 ஐப்பசி மாதம் 27ம் திகதியும், 2017 ஐப்பசி மாதம் 20 ஆம் திகதியும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொள்கை அறிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளும்.

VI. பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020

## 1.2 பிரதான பணிக்கூறுகள்

- தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் கீழ் வரும் இந்த விடயப் பரப்புக்களுடன் தொடர்புபட்ட, மற்றும் இவ்வமைச்சுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும் விடயப்பரப்புக்களை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- தேசிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக தேசிய கொள்கைகளை உருவாக்குதல்.
- தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல்.
- பொருளாதார அபிவிருத்திக்கு தனியார் துறை பங்கேற்பிற்கு வசதியளிப்பதற்கு அரச மற்றும் தனியார் துறைகளிற்கிடையே இணைப்பினை ஏற்படுத்துதல்.
- மேற் குறித்த கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக தேசிய திட்டமிடல் திணைக்களம் அதிகாரிகளினால் ஒப்புக்கொள்ளப்பட்டதன் படி தேசிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வரவு செலவுத்திட்ட வள ஒதுக்கீடுகளிற்கு அமைவாக அமுல்படுத்துதல்.
- வளங்களின் சிறந்த முகாமைத்துவத்துடன் அரச கொள்கைகளை அமுல்படுத்துவதனை உறுதிசெய்வதுற்கு நவீன முகாமைத்துவ நுட்பங்களை பின்பற்றும் வகையில் பொருத்தமான தந்திரோபாயங்களை உருவாக்குதல்.
- பொருளாதார அபிருத்திக்காக சர்வதேச ஒருங்கிணைப்புத் தொடர்புகளைப் பாதுகாத்தல் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல்.
- பிராந்திய அபிவிருத்தித் திட்டம் உள்ளடங்கலாக மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்
- வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைக்கும் நோக்கமாகக்கொண்ட கொள்கைகளை உருவாக்குதல்.
- யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்கான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக வழிகாட்டல் மற்றும் அமுலாக்கல்.
- யுத்தத்தினால் உடல் மற்றும் உள ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களிற்கான புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்திற்கான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல்.

- மீள்குடியேற்ற செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கத்திற்கும், கொடை வழங்கும் நிறுவனங்களிற்கும், அரசசார்பற்ற நிறுவனங்களிற்கும் மற்றும் பொது அமைப்புக்களிற்கிடையேயும் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல்.
- இடம்பெயர்ந்த மக்களிற்கான அத்தியாவசிய சேவைகளை வழங்கும் செயற்பாடுகள் தொடர்பாக ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல்.
- யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் மக்களின் புனர்வாழ்வுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட நபர்களை மீளவும் பொது மக்களின் வாழ்க்கையின் பிரதான ஓட்டத்தில் ஒருங்கிணைப்பதற்குத் தேவையான தந்திரோபாயங்களை அமுல்படுத்துதல்.
- இளைஞர் விவகாரங்கள் தொடர்பான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவது, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்வது.
- இளைஞர்களை சரியான திசையில் சேர்ப்பதற்கான மனப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிபதற்கான அவற்றை உருவாக்குவதும் அமுல்படுத்துவதும்.
- இளைஞர்களை மையப்படுத்தி சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- வேலையற்ற இளைஞர்களை மையப்படுத்தி திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- இளைஞர் நிறுவனஙடகள் தொடர்பான செயற்பாடுகள்.
- இளைஞர் சமுதாயத்திற்கான தன்னார்வ நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.
- இந்த அமைச்சின் அதிகார வரம்பின்கீழ் வரும் நிறுவனங்களின் ஏனைய அனைத்து விடயப்பரப்புக்களும்.
- இந்த அமைச்சின் அதிகார வரம்பின்கீழ் வரும் நிறுவனங்களின் மேற்பார்வை

## 1.3 அமைச்சின் நிறுவனரீதியான அமைப்பு

இந்த அமைச்சானாது பின்வரும் பிரதான பிரிவுகளை உள்ளடக்கியதாகவும் இதன் அதிகார வரம்பின்கீழ் வரும் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அமைச்சிற்கு வழங்கப்பட பணிகளை திறமையுடன் அமுல்படுத்தல்.

- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் பிரிவு
- மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடமாகாண அபிவிருத்திப் பிரிவு
- இளைஞர் விவகாரங்கள் பிரிவு
- பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

# அத்தியாயம் 02

# தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு பிரிவு

## 2.1 அமைச்சின் தூர நோக்கு, நோக்கம் மற்றும் குறிக்கோள்

**தூர நோக்கு**

நிலையானதும் சாத்தியமானதுமான தேசிய கொள்கைகள் ஊடாக சகலரதும் பங்கேற்புடனான பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுபீட்சம்

. .

**நோக்கம்**

சகலரதும் பங்கேற்புடனான பொருளாதார அபிவிருத்தியின் நிமித்தம் தேசிய கொள்கைகள் மற்றும் பலமான பொருளாதார மூலோபாயங்கள் ஊடாக சகல பிரஜைகளுக்கும் அபிவிருத்தியின் நன்மைகளை உறுதிப்படுத்தல்.

**குறிக்கோள்கள்**

- பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்ளல்.
- வறுமையை ஒழித்தல்.
- தொழில் வாய்ப்பின்மை மற்றும் குறை தொழில் வாய்ப்பை ஒழித்தல்.
- தேசிய சேமிப்பை அதிகரிப்பதன் ஊடாக முதலீட்டை விருத்தி செய்தல்.
- பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
- நியாயமான வர்த்தகத்திற்கு ஊக்குவிப்பளித்தல்.
- இளைஞர் சமூகத்தின் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் மிக்க மனித வளமொன்றைத் தோற்றுவித்தல்.

## 2.2. அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு




தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் பிரிவு அதன் பணிகளை மென்மையான செயற்பாட்டுக்கள் ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஆவை பின்வருமாறு

- நிர்வாகம்
- திட்டமிடல்
- பொருளாதா விவகாரம்
- அபிவிருத்தி மற்றும் செயற்திட்டம்
- உள்ளகக் கணக்காய்வு
- நிதி

கூடுதலாக, தேசிய திட்டமிடல் திணைக்களமும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் பிரிவின் கீழ் வருகிறது.

### 2.2.1 நிருவாகம் பிரிவு

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் பிரிவின் நிருவாகப் பிரிவானது அமைச்சின் அனைத்து உள்ளக நிருவாக விடயங்களுடனும், மற்றும் அதனது அனைத்து ஊழியர்களினதும் ஸ்தாபன விவகாரங்களுடனும் சம்பந்தப்பட்டுள்ளது. அமைச்சின் அதிகார வரம்பின்கீழ் வரும் நிறுவனங்களின் (எண்ணிக்கையடிப்படையில் 20) அனைத்து நிருவாகம் தொடர்பான விடங்களையும் ஒருங்கிணைப்புச் செய்வதுடன், இந்தப் பிரிவினால் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**
**நிர்வாகப் பிரிவு**

### 2.2.1.1 அலுவல்கள்

- அமைச்சின் சகல உள்ளக நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் அதன் பணியாட் தொகுதியின் அனைத்து தாபன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்
- அமைச்சின் கீழ் நிலவும் நிறுவனங்களுடன் தொடர்பான நிர்வாக மற்றும் தாபன ரீதியிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்களை அளித்தல் மற்றும் ஆலோசனைக் குழு, பொது மனுக் குழு, அரசாங்க கணக்குக் குழு, பொது முயற்சிகள் குழுவுக்கு ஆகியவற்றிற்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் சம்பந்தமான நடவடிக்கைகள்
- அமைச்சிற்கான அனைத்து கொள்வனவுச் செயன்முறைகளும்

| இல. | அலுவல் | முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | பணியாட் தொகுதியின் தனிப்பட்ட கோவைகள் சம்பந்தமான அலுவல்கள் (தனிப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை - 228) | தனிப்பட்ட கோவைகள் சம்பந்தமான நிர்வாக மற்றும் ஏனைய சகல நடவடிக்கைகள் வினைத்திறனுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.<br><br>ஆண்டுக்கான வேதன அதிகரிப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் வழங்குவதற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் , பொருத்தமான பதவி உயர்வுகள் வழங்குவதற்கான தீர்மானங்களை மேற்கொள்வதகாக அவற்றினை பொதுநிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |
| 2 | ஓய்வூதியத்தை தயாரித்தல் | ஓய்வூதியத்தை தயாரித்தல் சம்பந்தமாக சகல அலுவல்களும் தாமதமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை - 02) |
| 3 | விடுமுறை, மேலதிக நேர வேலை, பயணச் செலவுகள் மற்றும் புகையிரத ஆணைச் சீட்டு தொடர்பான அலுவல்கள் | அமைச்சின் பணியாட் தொகுதியைச் சேர்ந்தவர்களின் விடுமுறை, மேலதிக நேர வேலை, பயணச் செலவுகள் மற்றும் புகையிரத ஆணைச் சீட்டுக்கள் வழங்குதல் மற்றும் அமைசச்சர், இராஜாங்க அமைச்சர், பிரதியமைச்சர் ஆகியோரின் தனிப்பட்ட பணியாட் தொகுதி மற்றும் அந்த அமைச்சுக்களின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் மேலதிக நேர வேலை, பயணச் செலவுகள் தொடர்பான அனைத்து அலுவல்களும் தாமதமின்றி மற்றும் வினைத்திறனுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| 4 | கடன் தொடர்பான அலுவல்கள் | அமைச்சின் உத்தியோகத்தர்களது கடன் தேவைகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| | | பண்டிகைக் கால முற்பணம் - 292 |
| | | இடர் கடன் - 103 |
| | | விசேட முற்பணம் - 41 |

| | | |
|---|---|---|
| 5 | வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகள் / உள்நாட்டு பயிற்சிப் பாடநெறிகள் நடவடிக்கைகள் (மனித வளங்கள் அபிவிருத்தி) | அமைச்சின் உத்தியோகத்தர்களதும், திணைக்களங்களின் உத்தியோகத்தர்களினதும் மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் அலுவல் ரீதியிலான வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் உள்நாட்டு பயிற்சிப் பாடநெறிகளுடன் தொடர்பான அலுவல்கள் வினைத்திறனுடன் மற்றும் தாமதமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது (அலுவல் ரீதியிலான வெளிநாட்டு விஜயங்கள் - 353, உள்நாட்டு பயிற்சிகள் - 28) |
| 6 | சலுகை அடிப்படையில் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் | அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் பணியாட் தொகுதிக்காக சலுகை அடிப்படையில் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகள் தாமதமின்றி வினைத்திறனுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. 102 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.) |
| 7 | போக்குவரத்துப் பிரிவின் அலுவல்கள் | |
| **i.** | கௌரவ அமைச்சர் / கௌரவ இராஜாங்க அமைச்சர் / கௌரவ பிரதியமைச்சர் / உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்குதல் | 104 வாகனங்களும் சரியாக முகாமைப்படுத்தப்பட்டுள்ளது |
| **ii.** | ஒதுக்கப்பட்ட போக்குவரத்து வசதிகளை வழங்குதல் | |
| **iii.** | வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு | |
| 8 | **<u>அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் தொடர்பான நிர்வாக மற்றும் தாபன ரீதியிலான அலுவல்களை ஒருங்கிணைத்தல்</u>** | வினைத்திறனுடன் மற்றும் தாமதமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது |
| | தேசிய திட்டமிடல் திணைக்களம் | |
| | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | |
| | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் | |
| | உணவு ஆணையாளர் திணைக்களம் | |
| | ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோப்ரேஷன் லிமிட்ட் | |
| | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு | |
| | மனித வளங்களின் அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை | |
| | கொள்கைகள் கற்கை நிறுவகம் | |

| | | |
|---|---|---|
| 9 | அமைச்சின் கீழ் காணப்படும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்காக தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபையை நியமனம் செய்தல் | சட்டங்களின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனங்களும் தாபக்கப்பட்டு நியமனங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 10 | பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்களை தயாரித்து சமர்ப்பித்தல் | தாமதமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது |
| 11 | ஆலோசனைக் குழுக்கள் / பொது மனுக் குழு /அரச கணக்குகள் குழு / பொது முயற்சிகள் குழு ஆகியவற்றுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுடன் தொடர்பான அலுவல்கள் | விடயங்கள் தொடர்பாக உரிய நிறுவனங்களிடமிருந்து பதில்களைப் பெற்று உரிய திகதிக்குள் பாராளுமன்றத்திற்கு மற்றும் உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **12** | **கொள்முதல் பிரிவின் கடமைகள்** | |
| | அமைச்சிற்கான பொருட்கள், சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் ஏனைய கொள்வனவுகள் தொடர்பான அனைத்துக் கொள்முதல் செயற்பாடுகள் | அமைச்சின் நிருவாகப்பிரிவு மற்றும் கணக்குகள் பிரிகளிற்கான புதிய அலுவலக வளாகம் வாடகைக்குப் பெறப்பட்டது. (முகவரி இல.35, லேக்கவுஸ் கட்டிடம், 02 வது மாடி, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு -10) |
| | | நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் - மேசைகள் -26, கதிரைகள் 60, இரும்பு அலுமாரிகள் , இறாக்கைகள் 07) |
| | | 09 பிறின்ரர்கள், 18 மடிக்கணினிகள், நிழல் பிரதியாக்கி இயந்திரமங்கள், 04 ரப்ஸ்கள் |
| | | 02 ஸ்கானர்கள், 02 றீரைலெர்கள், 01 பேப்பர் கட்டர் , 01 தொலைக்காட்சிப் பெட்டி |
| | | 05 மேசை விளக்குகள், 01 தொலைநகல் இயந்திரம், 05 இடைவடாது மின் செலுத்தும் உபகரணம், 20 பென் டிறைவ் |
| | | வெகுசன உபகரணங்கள் - 01 றைப்போட்,01 மெமறி காட் றீடர், மைக்றோபோன் சிஸ்ரம். 7 “ பைல் மொனிற்றர் வயர்லெஸ் கிளிப், |
| | | நிலையான கண்ணாடியுடனான கமரா தொகுதி மற்றும் தொலைநோக்கு கண்ணாடி 01, ஒளி குவிப்புக்கருவி, மற்றும் கமராவிற்கான பற்றறிகள் 02, வீடியோ கமரா 01 |

| | | |
|---|---|---|
| | | * ஊவா மாகாணம், வட மாகாணம் வட மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம், மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றில் " சுவ சரிய" நோயாளர் காவு வண்டிச் சேவை ஆரம்பித்தல் தொடர்பான புதினப் பத்திரிகை விளம்பரம் மேற்கொண்டமை. |
| | | *அமைச்சிற்கான குடி நீர், பாதுகாப்பு , சுத்திகரிப்பு பராமரிப்புச் சேவைகளிற்கான வழங்குவதற்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. |
| **13** | **தகவல் தொழில்நுட்பப் பிரிவின் கடமைகள்** | |
| | வேலையற்ற பட்டதாரிகளினை பயிலுனர்களாக ஆட்சேர்ப்பு தொடர்பான பணியில் ஈடுபடுதல் | வேலையற்ற பட்டதாரிளைப் பயிலுனர்களாக ஆட்சேர்க்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017.09.08 முடிவடையும் காலப்பகுதி வரை 56280 விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. |
| | | அதன்பிரகாரம் 3614 பட்டதாரிகளுக்கு 2018.08.20 ஆம் திகதி அன்று நியமனங்கள் வழங்கப்பட்டது |
| | | புகுமுகப் பயிற்சியில் உள்ள பட்டதாரிகள் 3614 |
| | | பட்டதாரிளைப் பயிலுனர்களில் 106 பேர் ராஜினாமாச் செய்துள்ளனர் |
| | | பட்டதாரிளைப் பயிலுனர்களாக தற்போது 3508 பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றனர் |
| | கொழும்பு பல்கலைக்கழக தொழிலுக்கு வழிகாட்டல் பிரிவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிற்சந்தை நிகழ்ச்சித்திட்டல் அமைச்சு பிரதிநிதித்துவப்படுத்தியமை | 2017 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழக தொழிலுக்கு வழிகாட்டல் பிரிவினால் அழைப்பு விடுக்கப்பட்டதன்பிரகாரம் அதற்கு அமைச்சு பிரதிநிதித்துவத்தினை வழங்கியிருந்தது அத்துடன் தொடர்ந்தும் 2018 ஆண்டிலும் அதன் ஆதரவினை முழுமையாக வழங்கியது (பட்டதாரி மாணவர்கள் மற்றும் பட்டம்பெற்றுள்ள மாணவர்கள், அவர்களில் 2018 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பினை நிறைவு செய்தோருக்கு அரச துறை சேவைகள் தொடர்பாக அறிவை வழங்குதல்) |

### 2.2.2 திட்டமிடல் பிரிவு

நாட்டிற்கான பயனுள்ள மற்றும் இணக்கமான தேசிய கொள்கைகள், கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை தயாரிப்பதற்கு வசதியளிப்பதும் மற்றும் ஒருங்கிணைப்பதும் திட்டமிடற்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள்:

- அரச முதலீட்டு வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்திட்ட ஒருங்கிணைப்பு
- விசேட, கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம், கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்,

தெரிவு செய்யப்பட்ட சமய நிலையங்களின் அபிவிருத்தி, ஆகியவற்றினுடைய முன்னேற்றங்களை கண்காணித்தல், அவற்றை மீளாய்வு செய்தல், அவற்றின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்று பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் அவற்றிற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்

- கம்பெரலியா - விரைவான கிராமப்புற அபிவிருத்தித்திட்டம்
- தேசிய அளவிலான கொள்கை முடிவுகளை பெறுவதற்கு அமைச்சரவை பத்திரங்கள் அல்லது அமைச்சரவை அவதானிப்புகளை ஒருங்கிணைத்து வழங்குதல்.
- கௌரவ பிரதம மந்திரி தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் அமைச்சரினாலும் தலைமைதாங்கி நாடாத்தப்படும் வாராந்தர கூட்டங்களை ஒருங்கிணைத்தல்
- பொருளாதார அபிவிருத்தி மீதான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவிற்கு தேவையான உள்ளீடுகளை வழங்குதல்
- அமைச்சினுடைய வருடாந்த செயற்திட்டங்கள், செயற்திறன் அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல்.
- அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் நிறுவனங்களினது முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

### 2.2.3 பொருளாதா விவகாரம் பிரிவு

பொருளாதார விவகாரங்கள் பிரிவின் பிரதான பொறுப்புக்களாவன: பெறுபேறுகளை அடைந்துகொள்ளும் வகையில் அமைச்சின் வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சகல பொருளாதார கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பனவற்றை மேற்பார்வை செய்தல். தேசிய பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்கள் முதலானவற்றை உருவாக்குவதும் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பொறுப்பாகவுள்ளது. அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள்/ செயற்பாடுகள் தொடர்பான இணைப்பினை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பகவிருத்தல், காப்புறுதி கைத்தொழில் மற்றும் அதுதொடர்பான சட்டங்கள் என்பனவற்றி இலகுபடுத்திக்கொடுத்தல்.

பின்வரும் பெயர்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களான இலங்கை மத்திய வங்கி, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை கடன் தகவல் பணியகம், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மற்றும் இலங்கைத் தேசிய மனித வளங்கள் அபிவிருத்திச் சபை ஆகியன 2018 வைகாசி 12 ஆம் திகதி வரை பொருளாதார விவகாரங்கள் பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

எனினும், 2018 வைகாசி 12 ஆம் திகதிகளில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் பின்வரும் நிறுவனங்கள் பொருளாதார விவகாரங்கள் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது

i இலங்கைப் பொது பயன்பாடுகள் ஆணைக் குழு
ii இலங்கைத் தேசிய மனித வளங்கள் அபிவிருத்திச் சபை
iii இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்:

அ) சினோ லங்கா ஹோட்டல் மற்றும் ஸ்பா பிறைவெற் லிமிற்டெட்
ஆ) கன்வில் ஹோல்டிங் பிறைவெற் லிமிற்டெட் - கிறாண்ட் ஹயட் கொழும்பு
இ) லங்கா ஹொஸ்பிற்றல்ஸ் கோப்பிறேசன் பி எல் சி

- லங்கா *ஹொஸ்பிற்றல்ஸ் ஒரு நட்சத்திர தரத்திலான சிறந்த மருத்துவர்களையும் மற்றும் அதி நவீன மருத்துவ உபகரணங்களையும் கொண்டுள்ளதுடன் இலங்கை மக்களிற்கு மிகவும் சிறந்த மருத்து பராமரிப்புக்களை வழங்கி வருகின்றது. அதன் பங்குகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்* இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வசம்முள்ளது.

- மேலும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் அதன் வர்த்தக நடவடிக்கையினை விஸ்தரிக்கும் வகையில், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அதிகளவில் வளர்ந்து வரும் ஓய்வு நேரப் பொழுதுபோக்குத் துறையாகிய ஓய்வு விடுதி மற்றும் *ஸ்பா* முயற்சிகளினை மேற்கொண்டுள்ளது. மேலும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமானது, *இலங்கையில்* உலகப் பிரசித்திபெற்ற *ஹோட்டல்ப் பிணைப்பபான கிறாண்ட் ஹயட் கருத்திட்டத்திற்கான முதலீட்டினை*
- *மேற்கொண்டுள்ளது.*

### 2.2.4 அபிவிருத்தி மற்றும் செயற்திட்டம் பிரிவு

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின், அபிவிருத்தி மற்றும் கருத்திட்டங்கள் பிரிவின் பிரதான பொறுப்புக்களாக, கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல், பல்துறை கருத்திட்டங்களை அமுல்படுத்தும் வேறுபட்ட நிறுவனங்கள் மற்றும் நிதியளிப்பு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் என்பனவாகும். அவ்வாறே நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவை அபிவிருத்தி மற்றும் கருத்திட்டங்கள் பிரிவின் பிற செயற்பாடுகள் ஆகும்.

மேலும், இவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களினை மீளாய்வு செய்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுடன் ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சு போன்ற நிறவனங்களுக்குக் கொள்கைத்திட்டங்களைத் தயாரித்தலின் பொருட்டு முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பது என்பன அபிவிருத்தி மற்றும் கருத்திட்டங்கள் பிரிவின் ஏனைய செயற்பாடுகளாகும்.

மேலதிகமாக, இந்த பிரிவானது சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க உதவி நிறுவனம் (யு.எஸ்.எயிட்), உலக உணவுத் திட்டம், உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் கீழே அமுல்படுத்தப்படும் தொடர்புபட்ட கருத்திட்டங்களின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான ஒருங்கிணைத்தலையும் முன்னெடுத்துள்ளது.

மேலும் இந்த பிரிவானது, உள்ளுர் நிதியளிப்புடனான வடக்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணி, மற்றும் கொள்கைத் தீர்மானங்களின் கீழான வடக்கு மாகாண அபிவிருத்தித் தேவைகளை இனங்காணல் போன்ற சமூக மற்றும் பொருளாதார பிரச்சனைகள் தொடர்பான முடிவுகளை எடுப்பதில் ஈடுபடுகின்றது.

### 2.2.5 உள்ளகக் கணக்காய்வு

#### 2.2.5.1 பிரிவின் பங்கு

- அமைச்சு மற்றும் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களினுள் நடைமுறைப்படுத்தப்படும் உள்ளக சோதனைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமை ஆகியன அவற்றின் உருவாக்கம் மற்றும் உண்மையான செயற்றிறன் ஆகியவற்றிற்கேற்ப சிறந்த வினைத்திறனான விளைவுகளுடன் சிறப்பாக இயங்குவதை உறுதிப்படுத்தும்பொருட்டு ஆய்வு மேற்கொள்ளல்.
- கணக்குகள் மற்றும் ஏனைய அறிக்கைகளின் உண்மைத் தன்மை மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் கணக்கியல் முறைகள் ஊடாக சரியான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துக்கொள்வதற்குத் தேவையான தகவல்கள் போதுமானதாக வழங்கப்படுகின்றதா என்பதனைக் கண்டறிதல்.
- பணியாட் தொகுதியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நிறைவேற்றும்போது அவர்களது செயலாற்றுகையின் தரத்தை மதிப்பீடு செய்தல்.
- அமைச்சு மற்றும் அமைச்சிற்குரிய நிறுவனங்களின் கீழ் காணப்படும் சொத்துக்களுக்கு ஏதாவது சேதம் அல்லது பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காகப் போதுமான அளவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டள்ளமையைக் கண்டறிதல்.
- தாபனக் கோவை, நிதிப் பிரமாணக் கோவை, பொது நிர்வாக அமைச்சு மற்றும் திறைசேரியினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் அறிவுரைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை கண்டறிதல்.
- வீண் விரயம், செயலற்ற நிலைக் கொள்ளளவு மற்றும் நிதியை மீறிய செலவுகளை தடுப்பதற்கும் வெளிப்படுத்திக் கொள்வதற்கும் செயற்பாட்டிலுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறை வினைத்திறனாக உள்ளமை பற்றிக் கண்டறிதல்.
- அமைச்சு மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களின் கணக்கு நடைமுறைகள் மற்றும் செலவுக்கு காரணமான செயற்பாடுகளைச் சோதனையிடல் என்பவற்றுடன் அமைச்சு மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களின் சொத்துக்கள் மற்றும் ஆதனங்களை பாதுகாப்பாகவும் சிக்கனமாகவும் முறையாக பயன்படுத்தப்படுகின்றதா என்பதனை கண்டறிதல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் விசேட விசாரணைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சின் கீழவரும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை மூன்று மாதத்திற்கொரு முறை நடாத்துதல்.

#### 2018.12.31 ஆம் திகதியன்று செயற் திறன்

- அமைச்சின் 2018ஆம் ஆண்டிற்கான ஆரம்ப அறிக்கை.
- இவ்வமைச்சின் 2017 டிசம்பர் மாத வங்கி கூற்று சரிபார்த்தல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களம் - அரச ஊழியர்களின் முற்பண 'பீ' 2017 கணக்கை பரீட்சித்தல்.
- வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் - நிலையான சொத்துக்களின் பதிவோடு மற்றும் இருப்பு புத்தகத்தை சரிபார்த்தல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களம் - நிர்வாக விவகாரம் மற்றும் பற்றுச்சீட்டுக்களை சரிபார்த்தல்.
- இயைளுர் படையணியின் சிரேஷ்ட அலுவல்கள் போக்குவரத்து உரிமத்தை ஆய்வு செய்தல்.
- இவ்வமைச்சின் மேலாதிக பற்றாக்குறை கணக்கெடுப்பு அறிக்கையை சரிபார்த்தல்.
- இவ்வமைச்சின் வெளிநாட்டு நிதி கருத்திட்டங்களின் நிதி முன்னேற்ற அறிக்கையை ஆய்வு செய்தல்.
- தினசரி ஒட்டுனர் அட்டையுடன் மாதாந்த முன்னேற்ற அறிக்கையை சரிபார்ப்பதற்காக கணக்காய்வு ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல்.

- இவ்வமைச்சின் 2018 யூலை வங்கி கணக்கு கூற்றை ஆய்வுசெய்தல்.
- இவ்வமைச்சின் 2018 பேரேடு மற்றும் 2017 ஓதுக்கீட்டு கணக்கினையும் சரிபார்த்தல்.
- இவ்வமைச்சின் 2018 மாச் மற்றும் ஏர்ப்பில் மாதத்திற்கான காசேடு மற்றும் பற்றுச்சீட்டினையும் சரிபார்த்தல்.
- இவ்வமைச்சின் 2018 மே மற்றும் யூன் மாதத்திற்கான காசேடு மற்றும் பற்றுச்சீட்டினையும் சரிபார்த்தல்.
- இவ்வமைச்சின் மாதிரி கேள்வி கோரல் கோவைகளை ஆய்வுசெய்தல்.
- இவ்வமைச்சின் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவகுழு முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. இவ்வமைச்சின் கீழ் திணைக்களமும் நிறுவனங்களும் உள்ளன.

**2.2.6 நிதி**

நிதிப் பிரிவின் முக்கிய அலுவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- அமைச்சின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டறிக்கையை தயாரித்தல்.
- அமைச்சின் சம்பளம் மற்றும் ஏனைய செலவுகளுக்கான செலுத்துகை நடவடிக்கைகள்.
- அமைச்சின் இறுதிக் கணக்கறிக்கையைத் தயாரித்தல்.
- வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு உட்பட அமைச்சின் சொத்துக்களின் முகாமைத்துவம்.
- உரிய தரப்பினருக்கு செலவு விபரங்களை வழங்குதல் மற்றும் அவற்றைக் குறித்துக் கொள்ளல்.
- அமைச்சின் பெறுகை (கேள்வி) நடவடிக்கைகளை அமுல்படுத்தல்.
- அமைச்சிற்கான தீர்மானங்களை எடுப்பதற்காக முக்கியத்துவம் வாய்ந்த நிதிசார் தகவல்களை வழங்குதல்.

# அத்தியாயம் 03

# தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரகள் அமைச்சு பிரிவின் முக்கிய கருத்திட்டங்களின் / பணிகளின் செயற்திறன்.

## 3.1 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் (DCB) 2018

சமுதாயத்தின் சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்தல் எனும் குறிக்கோளுடன் 2016ம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கென ரூபா.10.0 மில்லியன் ஒதுக்குவதற்கு கொள்கைத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. அதன்படி, 2018 ஆம் ஆண்டில் ரூபா.2,250 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா.2,186.78 மில்லியன் பெறுமதியான 17,514 கருத்திட்டங்கள் அனுமதியளிக்கப்பட்டு மாவட்ட செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக, 2017 இல் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் நிலுவையிலிருந்த கொடுப்பனவுகளைச் சீர்ப்படுத்துவதற்கென ரூபா.249.24 மில்லியன் விடுவிக்கப்பட்டது.

அனுமதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரங்களும் அவை சார்ந்த துறை நிதி ஒதுக்கீடுகளும் அட்டவண 3.1 இல் அறிக்கையிடப்பட்டுள்ளன.

| துறைசார் வகை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | சதவீதம் (%) | நிதியொதுக்கீடு (ரூபா.மில்லியன்) | சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| கிராமிய நீர் விநியோகம் | 304 | 1.7 | 62.93 | 2.9 |
| கிராமிய மின்சாரம் | 133 | 0.8 | 14.71 | 0.7 |
| கிராமிய பாதை | 2900 | 16.6 | 692.51 | 31.7 |
| பொருளாதார உட்கட்டமைப்பு | 156 | 0.9 | 44.00 | 2.0 |
| கிராமிய நலன்புரி | 753 | 4.3 | 102.37 | 4.7 |
| சமுதாய அபிவிருத்தி | 1945 | 11.1 | 267.60 | 12.2 |
| சிறு நீர்ப்பாசனம் | 105 | 0.6 | 22.51 | 1.0 |
| சமூக நலன்புரி | 8611 | 49.2 | 674.36 | 30.8 |
| சமூக சேவைகள் | 2289 | 13.1 | 267.34 | 12.2 |
| சமுதாய பாதுகாப்பு | 48 | 0.3 | 7.42 | 0.3 |
| வாழ்வாதார அபிவிருத்தி | 178 | 1.0 | 15.24 | 0.7 |
| கிராமிய பொருளாதாரம் | 92 | 1.7 | 15.79 | 0.7 |
| **2018 கருத்திட்டங்கள்** | **17,514** | **100.0** | **2186.78** | **100.0** |
| 2017 ம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் நிலுவைக் கொடுப்பனவுகளைச் சீர்ப்படுத்துவதற்கான ஒதுக்கீடு | | | 249.24 | |
| மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு | | | 2,436.02 | |

**அட்டவணை 3.1 அனுமதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களும் அவற்றிற்கான நிதியொதுக்கீட்டு விபரங்களும்**

இதற்கமைய, 17,514 அனுமதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களில் 16,913 முழுமையாகவும் 119 கருத்திட்டங்கள் பகுதியளவிலும் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் அவற்றின் பௌதீக முன்னேற்றம் 97.24 சதவீதமாகவும் உள்ளது. ஆண்டின் இறுதியில், 2018 ஆம் ஆண்டுக்குரிய நிலுவைக் கொடுப்பனவு உட்பட ரூபா. 2,331.63 மில்லியன் ஆனது செலவீனமாக அறிகையிடப்பட்டதுடன், நிதி முன்னேற்றமானது 95.64 சதவீதமாக உள்ளது.

இரத்தினபுரி மாவட்டம்-பலாங்கொட பிரதேசசெயலகம செயலகம் பூஜாப்பிட்டிய கிராம வீதி அபிவிருத்தி




களுத்துறை மாவட்டம்-பலாங்கொட பிரதேச வீரவர்த்தன வீதி அபிவிருத்தி



திருகோணமலை மாவட்டம் - மூதூர் பிரதேச செயலகம ஜெபால் நகர் பேருந்து தரிப்பிட நிர்மாணம்



குருநாகலை மாவட்டம்-அளவ்வ பிரதேச செயலகம் சரனந்தவிற்கு பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கல்



## 3.2 கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்-2018

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (RIDP) அறிமுகம் ஆனது மாவட்ட மட்டத்தில் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டு 2017, 2018 ஆண்டுகளிலும் தொடர்ந்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளானது கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதனூடாக நேரடியான மற்றும் நேரடியற்ற மேம்பட்ட வருவாயைப் பெற்று வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதனூடாக, கிராம மற்றும் நகரப்பகுதிகளுக்கான வித்தியாசங்களைக் குறைத்தல் எதிர்பார்க்கப்பட்டது.

கருத்திட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டு கிராமிய பாலங்கள் மற்றும் மதகுகளின் அபிவிருத்தி அல்லது நிர்மாணம், வீதிகளின் நிர்மாணம் அல்லது முன்னேற்றம், சிறிய நீர்ப்பாசன வாய்க்கால்களின் அபிவிருத்தி, நீர் விநியோகத்திட்டங்கள், இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டவற்றின் மறுசீரமைப்பு கருத்திட்டங்கள், சந்தைகளின் நிர்மாணம், பொருட்களுக்கு உயர்ந்த கோரிக்கை மற்றும் விலையைப் பெற்றுக் கொடுக்கும் வாராந்த சந்தைகள் மற்றும் பொருளாதார நிலையங்கள், கட்டட நிர்மாணம், விவசாய அபிவிருத்தி போன்ற துறைகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.

2018 ஆம் ஆண்டில், RIDP நிகழ்ச்சித்திட்டம் ஆனது இரண்டு உபநிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித்திட்டம் - நிலை II எனும் பெயர்களில் அமுல்படுத்தப்பட்டன. 2018 இல் அனுமதியளிக்கப்பட்டு நிதியொதுக்கீடு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 2018 ம் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக 2017ம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்கான நிலுவையிலிருந்த கொடுப்பனவினைச் சீர்ப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களுக்கு ரூபா.4,591.19 மில்லியன் நிதியொதுக்கீடு விடுவிக்கப்பட்டது.

| துறை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | சதவீதம் (%) | நிதியொதுக்கீடு (ரூபா) | சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி | 5192 | 71% | 7,293,527,961.51 | 74% |
| குடிநீர் விநியோகம் | 442 | 6% | 509,465,320.05 | 5% |
| கிராமிய மின்சாரம் | 5 | 0.1% | 2,200,000.00 | 0.2% |
| நீர்ப்பாசனமும் விவசாயமும் | 214 | 3% | 335,359,575.55 | 3% |
| பொருளாதார உட்கட்டமைப்பு | 20 | 0.3% | 44,400,000.00 | 0.4% |
| கல்வி | 221 | 3% | 219,406,131.77 | 2% |
| சுகாதாரம் | 88 | 1% | 114,000,000.00 | 1% |
| மலசலகூடம் (துப்புரவு) | 77 | 1% | 91,961,272.79 | 1% |
| விளையாட்டு | 277 | 4% | 195,500,000.00 | 2% |
| பிற | 786 | 11% | 1,086,007,421.25 | 11% |
| **மொத்தம்** | **7322** | **100.0** | **9,891,827,682.92** | **100.0** |
| **2017 ம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் நிலுவைக் கொடுப்பனவுகளைச் சீர்ப்படுத்துவதற்கான ஒதுக்கீடு** | | | 4,591,186,195.46 | |
| **மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு** | | | **14,483,013,878.38** | |

அட்டவணை 3.2. RIDP இன் கீழ் 2018 இல் அனுமதியளிக்கப்பட்டு நிதியொதுக்கீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

இருப்பினும், நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் 23.11.2018 ம் திகதிய அமைச்சரவைப்பத்திரம் இலக்கம்:18/2783/905/019 ன் வழிகாட்டுதலுக்கமைய, 28.11.2018 ஆம் திகதிய கடித இலக்கம்:MF/EA/PLN/SP2018/general இன் மூலம் மாவட்ட செயலாளர்கள் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படாத மற்றும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படாத கருத்திட்டங்களின் அமுலாக்கத்தை நிறுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டனர். மாவட்ட செயலாளர்களின் அறிக்கைகளின்படி, ரூபா. 3,015.90 மில்லியன் பெறுமதியான 2,884 கருத்திட்டங்கள் நிறுத்தப்பட்டன.

அதன்படி, 2018 இல் 3,741 கருத்திட்டங்கள் முழுமையாக நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் பௌதீக முன்னேற்றமானது 51.10 சதவீதமாக உள்ளது. ஆண்டின் இறுதியில், 2018 ஆம் ஆண்டுக்குரிய நிலுவைக் கொடுப்பனவு உட்பட ரூபா.9,208.45 மில்லியன் ஆனது செலவீனமாக அறிகையிடப்பட்டதுடன், நிதி முன்னேற்றமானது 63.49 சதவீதமாக உள்ளது.

திருகோணமலை - பட்டினமும் சூழலும் பிரதேசசெயலகம்
சாரதாபுர-கன்னியா வீதி அபிவிருத்தி



கொழும்பு - மகரகம பிரதேச செயலகம்
கணனி பயிற்சி நிலைய நிர்மாணம்




.

கொழும்பு – சிறீ ஜயவர்த்தனபுர கோட்டே பிரதேசசெயலகம்
ஜயவர்த்தனபுர கோட்டே ஆண்கள் பாடசாலையின் திறன் வகுப்பறை அபிவிருத்தி




நுவரெலியா - ஹங்குராங்கெத்த பிரதேசசெயலகம் ஓகன்டகல தேவாலய வீதி அபிவிருத்தி



### 3.3 மதம்சார் நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் - 2018

மதம்சார் நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டமானது 2018 இல் தொடர்வதுடன் ரூபா.250 மில்லியன் நிதியானது இந்நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோளானது சமுதாயத்தின் தார்மீகச் சீரழிவைத் தடுப்பதுடன் சமய வளர்ப்புடன் கூடிய ஒரு நாகரிக சமூகத்தை உருவாக்கலுக்கான ஒரு சமயப் பாதையை வழங்குவதுமாகும்.

அறநெறிப் பாடசாலை கட்டடங்கள், மடங்கள், வாகனத் தரிப்பிடங்கள், பல்நோக்கு மண்டபங்கள், நிர்மாணம் மற்றும் திருத்தம், சமய மையங்களின் தங்குமிடங்கள் மற்றும் பிரிவேனாக்கள், நூல்நிலையக்கட்டங்கள், அணுகும் பாதைகளின் அபிவிருத்தி, மின்விநியோகம், நீர் மற்றும் சுகாதார வசதிகள், தார்மீக அபிவிருத்திக்கான உபகரண விநியோகம் ஆகியன இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையாளப்படுத்தப்பட்ட மதம்சார் நிலையங்களில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் ஆகும்.

அதன்படி, 380 கருத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டதுடன் ரூபா.190.89 மில்லியன் நிதியொதுக்கீடு உரிய மாவட்ட செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டுக் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. 2018 இல் அனுமதியளிக்கப்பட்டு நிதியொதுக்கப்பட்ட கருத்திட்டங்களின் சராம்சம் கீழே தரப்படுகின்றன. 2018 நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக, ரூபா.58.86 மில்லியன் நிதியொதுக்கீடு உரிய மாவட்டங்களுக்கு 2017 ஆம் ஆண்டின் நிலுவைக் கொடுப்பனவுகளை சீர்செய்வதற்கு விடுவிக்கப்பட்டது.

| தெ ா. இ | மாவட்டம் | அனுமதிக்கப் பட்ட கருத்திட்டங்கள் | நிறைவடைந்த கருத்திட்டங்கள் | கருத்திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) | 2017 நிலுவைக் கொடுப்பனவிற்கான ஒதுக்கீடு | விடுவிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | 50 | 50 | 15,000,000.00 | | 15,000,000.00 |
| 2 | அனுராதபுரம் | 13 | 13 | 6,478,200.00 | | 6,478,200.00 |
| 3 | பதுளை | 28 | 26 | 14,000,000.00 | 1,173,477.77 | 15,173,477.77 |
| 4 | கொழும்பு | 40 | 38 | 20,000,000.00 | 5,054,117.20 | 25,054,117.20 |
| 5 | காலி | 19 | 19 | 9,300,000.00 | 5,627,754.72 | 14,927,754.72 |
| 6 | கம்பகா | 21 | 19 | 10,500,000.00 | 2,178,055.96 | 12,678,055.96 |
| 7 | அம்பாந்தோட்டை | 1 | 0 | 500,000.00 | 291,227.21 | 791,227.21 |
| 8 | யாழ்ப்பாணம் | 1 | 1 | 500,000.00 | | 500,000.00 |
| 9 | களுத்துறை | 10 | 8 | 5,000,000.00 | 4,317,118.10 | 9,317,118.10 |
| 10 | கண்டி | 46 | 46 | 32,279,820.22 | | 32,279,820.22 |
| 11 | கேகாலை | 40 | 37 | 19,800,000.00 | 461,365.40 | 20,261,365.40 |
| 12 | குருநாகலை | 16 | 12 | 8,225,955.11 | 21,307,838.95 | 29,533,794.06 |
| 13 | மாத்தளை | 40 | 40 | 20,000,000.00 | | 20,000,000.00 |
| 14 | மாத்தறை | 8 | 5 | 3,883,366.00 | 9,430,991.37 | 13,314,357.37 |
| 15 | மொனராகலை | 3 | 3 | 1,500,000.00 | | 1,500,000.00 |
| 16 | நுவரெலியா | 10 | 10 | 5,000,000.00 | | 5,000,000.00 |
| 17 | பொலனறுவை | 5 | 5 | 2,500,000.00 | 1,141,268.90 | 3,641,268.90 |
| 18 | புத்தளம் | 14 | 14 | 8,924,750.00 | 1,346,325.57 | 10,271,075.57 |
| 19 | இரத்தினபுரி | 13 | 12 | 6,500,000.00 | 5,849,616.10 | 12,349,616.10 |
| 20 | திருகோணமலை | 2 | 2 | 1,000,000.00 | 676,838.42 | 1,676,838.42 |
| | **மொத்தம்** | **380** | **360** | **190,892,091.33** | **58,855,995.67** | **249,748,087.00** |

அட்டவணை 3.3 மத அபிவிருத்தி நிலையம்

மாவட்ட செயலாளர்களின் முன்னேற்ற அறிக்கையிடலுக்கமைய, 380 கருத்திட்டங்களில் 360 கருத்திட்டங்கள் முற்றாக நிறைவேற்றப்பட்டதுடன் பௌதீக முன்னேற்றமானது 94.73 சதவீதமாகவுள்ளது. 2018 ம் ஆண்டின் இறுதியில், நிலுவைக் கொடுப்பனவுகள் உட்பட ரூபா.235.93 மில்லியன் செலவீனம் அறிக்கையிடப்பட்டதுடன் நிதி முன்னேற்றமானது 94.47 சதவீதமாகவுள்ளது.

அனுராதபுர மாவட்டம் - தலாவ பிரதேச செயலகம் வெகரகல விகாரையின் தாதுகோப நிர்மாணம்



மாத்தறை மாவட்டம்-மலிம்பொட பிரதேச செயலகம் சிறி இந்திரராம தகம் பாடசாலை கட்டட நிர்மாணம்



கொழும்பு மாவட்டம்-கடுவெல பிரதேச செயலகம் சீலசுமனராமயவின் அபிவிருத்தி



.பதுளை மாவட்டம்-சோரனாதோட்ட பிரதேச செயலகம் சைலவிம்வராமயவின் அபிவிருத்தி



## 3.4 கம்பெறளிய–துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018

2018.07.03 ம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, அரசாங்கம் நாட்டின் தரமான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அதேவேளை, மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தர உயர்வு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் துரிதப்படுத்தல் ஆகியவற்றிற்கு உதவும் பொருட்டு துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை (RRDP) அமுல்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. அதன்படி, கம்பெறளிய நிகழ்ச்சித்திட்டம் நாடு பூராகவும் துரிதகதியில் நடைமுறைப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தொடங்கப்பட்டதுடன், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்குத் திட்டமிடப்படுகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்தை ஏல்லா மாவட்டங்களிலும் அமுல்படுத்துவதற்கென 2018 செப்டம்பர் மாத இறுதிப்பகுதியில் ரூபா.20,003.5 மில்லியன் ஆனது இந்த அமைச்சிற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. 2018 இல் ரூபா.19,882.455 மில்லியன் பெறுமதியான 51,509 கருத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 51,509 அனுமதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களில் 7237 முழுமையாகவும் 171 கருத்திட்டங்கள் பகுதியளவிலும் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன். ஆண்டின் இறுதியில், 2018 ஆம் ஆண்டுக்குரிய நிலுவைக் கொடுப்பனவு உட்பட ரூபா 5,068.17 மில்லியன் ஆனது செலவீனமாக அறிகையிடப்பட்டதுடன்.

அனுமதிக்கப்பட்ட மாவட்ட ரீதியான கருத்திட்டங்களின் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளன.

| தொ .இ | மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அம்பாறை | 665.19 | 1226 |
| 2 | அனுராதபுரம் | 873.138 | 3710 |
| 3 | பதுளை | 1713.16 | 3010 |
| 4 | மட்டக்களப்பு | 596.4 | 704 |
| 5 | கொழும்பு | 1630.37 | 3622 |
| 6 | காலி | 1276.246 | 2560 |
| 7 | கம்பகா | 1944.095 | 7100 |
| 8 | அம்பாந்தோட்டை | 524.02 | 818 |
| 9 | யாழ்ப்பாணம் | 394.82 | 408 |
| 10 | களுத்துறை | 1219.336 | 2464 |
| 11 | கண்டி | 1365.851 | 3792 |
| 12 | கேகாலை | 1689 | 4192 |
| 13 | கிளிநொச்சி | 100 | 73 |
| 14 | குருநாகலை | 1493.67 | 2187 |
| 15 | மன்னார் | 148.81 | 308 |
| 16 | மாத்தளை | 398.39 | 721 |
| 17 | மாத்தறை | 698.98 | 2525 |
| 18 | மொனராகலை | 360.5 | 411 |
| 19 | முல்லைத்தீவு | 138.4 | 127 |
| 20 | நுவரெலியா | 302.85 | 2451 |
| 21 | பொலனறுவை | 299.67 | 3954 |
| 22 | புத்தளம் | 565.409 | 1292 |
| 23 | இரத்தினபுரி | 884.91 | 3083 |
| 24 | திருகோணமலை | 497.75 | 468 |
| 25 | வவுனியா | 101.99 | 303 |
| | **மொத்தம்** | **19882.955** | **51509** |

அட்டவணை 3.4 அனுமதிக்கப்பட்ட மாவட்ட ரீதியான கருத்திட்டங்களின் சாராம்சம் 31.12.2018

3.4.1 துறைசார் ரீதியாக அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் சாரம்சம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| துறை | அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| கிராமிய குளங்கள், அணைக்கட்டுகள் புனரமைப்பு | 1,232 | 1,024.60 |
| கிராமிய பாதைகள் (தார்,கொங்ரீட்,கிரவல்) | 16,298 | 12,616.70 |
| பாடசாலை துப்பரவேற்பாட்டுவசதிகள் (புதுப்பித்தல்/ புதியநிர்மாணம்) | 1,572 | 829.11 |
| பாடசாலை விளையாட்டு மைதானம் | 1,196 | 873.80 |
| “வாராந்த சந்தை”அபிவிருத்தி | 208 | 79.84 |
| மின்சாரவசதி தேவையுடைய குடும்பங்களுக்கு வசதியளித்தல் | 5,224 | 160.60 |
| கோயில்/விகாரை/தேவாலயம்/பள்ளிவாசல் புனரமைப்பு | 4,165 | 2,203.95 |
| சுற்றுலா கவர்ச்சி புவிச்சரிதவியல் இடம் புனரமைப்பு | 158 | 59.10 |
| கிராமிய மற்றும் நகர மட்டத்தில் வீடமைப்பு | 21,398 | 1,957.02 |
| காணி உறுதிகளை வழங்குதல் | 1 | 1.00 |
| “ஹரித்த உத்யான” நிகழ்ச்சித்திட்டம் | 57 | 77.23 |
| மொத்தம் | **51,509** | **19,882.96** |

அட்டவணை 3.5 துறைசார் ரீதியாக அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் சாரம்சம் 31.12.2018




அட்டவணை **3.1: அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் சாராம்சம்**

## 3.5. திட்டமிடல் மற்றும் கொள்கை அமுலாக்கத்துடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள்

### 3.5.1 அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல்

2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான காலப்பகுதியின் போது அமைச்சு பின்வரும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பித்தது.

| தொ.இ | அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் | விடயம் |
|---|---|---|
| 1 | MNPEA/2018/002 | ஆஸ்திரிய சலுகைக் கடன் திட்டத்தின் கீழ் கொழும்பு மாநகர சபைக்கு தீயணைப்பு வாகனங்கள் / உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல். |
| 2 | MNPEA/2018/003 | கணக்கெடுப்பு அலகுகளை பட்டியலிடல். |
| 3 | MNPEA/2018/004 | தல்பிட்டிகல நீர்த் தேக்கத் திட்டம் - ஒப்பந்தத் தொகையின் 15% இனை நிதியீடு செய்வதற்கான கடன் வசதி. |
| 4 | MNPEA/2018/005 | இலங்கையின் காப்புறுதித் துறையில் நடைமுறைப்படுத்தப்படும் மீள்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 30% ஆக இருந்த கட்டாய மீள்காப்பீடுகளை ஒதுக்கீடு செய்வதற்காக 2018.01.01 ஆம் திகதி முதல் 2018.12.31 ஆம் திகதி வரை (அந்த 02 தினங்களும் உள்ளடக்கப்படும் வகையில்) ஒரு வருட காலத்திற்கு மீள்காப்பீட்டை பெற்றுக்கொள்ளல். |
| 5 | MNPEA/2018/006 | அரச கடன் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான பொறுப்புக்கள் முகாமைத்துவம். |
| 6 | MNPEA/2018/007 | யொவுன்புர வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 500 கூடாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் |
| 7 | MNPEA/2018/009 | திறன்கள் சார்ந்த துறைகளை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வரவு செலவை நிதியீடு செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியடமிருந்து மேலதிக கடனுதவியைப் பெற்றுக்கொள்ளல். |
| 8 | MNPEA/2018/010 | தனியார் துறையின் ஊடாக அரிசியை இறக்குமதி செய்தல். |
| 9 | MNPEA/2018/011 | டி சொய்சா மகப்பேறு வைத்தியசாலையில் குழந்தை மற்றும் பிரசவ ஆய்வு நிலையமொன்றை தாபிக்கும் திட்டத்திற்கு நிதியுதவி பெற்றுக்கொள்ளல். |
| 10 | MNPEA/2018/012 | நியதிச் சட்ட நிறுவனங்களின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல் - இலங்கை கொள்கை ஆய்வு நிறுவகம் - 2015 ஆண்டறிக்கை. |
| 11 | MNPEA/2018/013 | உள்நாட்டு வங்கிகள் ஊடாக நிதி வழங்கப்படும் முன்னுரிமை நீர் வழங்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் - கிரிதர நீர் வழங்கல் திட்டம். |
| 12 | MNPEA/2018/014 | தேசிய காப்புறுதி நிதியச் சபையின் தலைமை அலுவலகத்தை மீளமைப்பதற்காக கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல். |
| 14 | MNPEA/2018/015 | கொழும்பு பங்குச் சந்தை பரிவர்த்தனை விகிதச் சட்டத்தை ஏட்டுரைப் பகுதியுடன் தயாரித்துள்ள சட்டமூலம் |
| 15 | MNPEA/2018/016 | உள்நாட்டு வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியைப் பயன்படுத்தி ஹுசலக்க நீர் விநியோகத் திட்டத்தை செயற்படுத்தல். |
| 16 | MNPEA/2018/017 | உள்நாட்டு வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியைப் பயன்படுத்தி இரத்தினபுரி பெரிய நீர் விநியோகத் திட்டத்தின் விநியோகக் கட்டமைப்புக்கு ஏனைய பாகங்கள் மற்றும் பொருத்தும் |

| | | |
|---|---|---|
| | | பாகங்கள், Specials, DI வால்வு, HDPE/DI குழாய்களை வழங்கல் மற்றும் பரத்துதல். |
| 17 | MNPEA/2018/018 | மத்திய அதிவேகப் பாதையின் 3 ஆவது பகுதியை (CEP III) நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தப் பணியை வழங்குதல் - பொதுஹெர முதல் ரம்புக்கணை ஊடாக கலகெதரை வரை. |
| 18 | MNPEA/2018/019 | ஷங்கிரீ - லா கலப்பு அபிவிருத்தித் திட்டத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். |
| 19 | MNPEA/2018/020 | வட மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3 - II தரத்திற்கு இணைத்துக்கொள்ளல். |
| 20 | MNPEA/2018/021 | வட மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3 - II தரத்திற்கு இணைத்துக் கொள்ளல். |
| 21 | MNPEA/2018/022 | பொருளாதார ஒப்படைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பாகமொன்றாக சுற்றாலா ஒப்படைப்பு ஆய்வுகூடமொன்றில் அமுலாக்கத்திற்கான வெளிவாரி ஆலோசனை உதவியினை பெற்றுக்கொள்ளல். |
| 22 | MNPEA/2018/023 | பொதுவான கல்வி நவீனமயப்படுத்தல் திட்டத்திற்கு உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி இணை நிறுவனத்திடமிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்ளல் |
| 23 | MNPEA/2018/024 | இலங்கை துரித திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கியின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் ஊடாக 115 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்ளல். |
| 24 | MNPEA/2018/025 | கிராமப்புறப் பாலங்களை நிர்மாணித்தல். |
| 25 | MNPEA/2018/026 | ஒருகொடவத்தை அம்பத்தலே வீதி அபிவிருத்தித் திட்டத்துடன் இணையான வகையில் குழாய் நீர் கட்டமைப்பை மேம்படுத்தல். |
| 26 | MNPEA/2018/027 | நியதிச் சட்ட நிறுவனங்களின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல் - மனித வளங்கள் அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை - 2016 ஆண்டறிக்கை |
| 27 | MNPEA/2018/029 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர் திரு.அத்துல ஏ.செனெவிரத்ன அவர்களின் சேவைக் காலத்தை நீடித்தல். |
| 28 | MNPEA/2018/030 | திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் ஊடாக 115 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளல் |
| 29 | MNPEA/2018/031 | இலங்கையில் அவசர வைத்தியசாலைக்கு முன்னரான சிகிச்சை சேவை 1990 சுவசெரிய அமைப்பு கட்டம் II நடைமுறைப்படுத்தல். |
| 30 | MNPEA/2018/032 | ஐக்கிய அமெரிக்க குடியரசுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் மற்றும் வரி மீளச் செலுத்தல் |
| 31 | MNPEA/2018/033 | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் இயந்திரங்களை வழங்குதல். |
| 32 | MNPEA/2018/034 | பாதுகாப்பான பரிவர்த்தனைகளின் கீழ் தயாரிக்கப்பட்ட சட்ட மூலம் |
| 33 | MNPEA/2018/035 | மத்திய அதிவேகப் பாதையின் 3 ஆவது பகுதியை (CEP III) (32 கிமீ)நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தப் பணியை வழங்குதல் - பொதுஹெர முதல் ரம்புக்கணை ஊடாக கலகெதரை வரை. |
| 34 | MNPEA/2018/036 | 2018 ஆம் அண்டிற்கான அந்நியச் செலாவணி தவணை நிதி வசதியைப் பெற்றுக்கொள்ளல் |

| | | |
|---|---|---|
| **35** | MNPEA/2018/037 | பெரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின் - 2 ஆம் கட்டம் (OCH - 2) இற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜப்பான்சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) கடன் தொகையில் பயன்படுத்தப்படாத மீதியை பெரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின் 1 ஆவது கட்டத்தின் (OCH - 1) மாகும்புர பல நோக்கு நிலையத்தின் உத்தேச செயற் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்தல் |
| **36** | MNPEA/2018/038 | இலங்கையில் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 64.31 கி.மீ. நீளமான வீதியை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் 13 பாலங்களை மீள நிர்மாணித்தல் |
| **37** | MNPEA/2018/039 | தர விருத்திக்காக அதிகளவிலான மூலதன நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்ய முடியுமான வகையில் அரச துறையில் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் அரச - தனியார் கூட்டு முறையின் கீழ் தனியார் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளல் |
| **38** | MNPEA/2018/040 | சுகாதார மற்றும் மருத்துவ சேவைகளை மேம்படுத்தல் திட்டம் |
| **39** | MNPEA/2018/041 | பட்டங்களை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பட்டப் பாடநெறிகளைப் பயிலுவதற்காக வட்டியின்றிய கடன் திட்டம் |
| **40** | MNPEA/2018/042 | பாரியளவிலான பெறுகைகள் மற்றும் அரச - தனியார் கூட்டுச் செயற் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனை துரிதப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் |
| **41** | MNPEA/2018/043 | இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் |
| **42** | MNPEA/2018/044 | அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் ஊடாக (SFD) களு கங்கை அபிவிருத்திக்காக மேலதிக நிதியீடு |
| **43** | MNPEA/2018/045 | அரசாங்க பிணைப் பத்திர வியாபாரம், தீர்த்தல் மற்றும் மத்திய வைப்பு முறையுடன் தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் முறைமையொன்றை கொள்வனவு செய்தல் |
| **44** | MNPEA/2018/046 | பாதிப்புக்குட்படுபவையாக இலக்காகக்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் 2018 - 2022 காலப் பகுதிக்குள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக உணவுத் திட்டத்தின் இலங்கையுடன் தொடர்புடைய உபாய வழி முறைத் திட்டத்தை நிரல் அமைச்சுக்களின் ஊடாக செயற்படுத்தல். |
| **45** | MNPEA/2018/047 | அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் மேலதிக இயலளவை பயன்மிக்க வகையில் பயன்படுத்தல் |
| **46** | MNPEA/2018/048 | அரச கடன் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான கடன் பொறுப்புக்கள் முகாமைத்துவம் |
| **47** | MNPEA/2018/049 | மனித வளங்கள் அபிவிருத்தி புலமைப் பரிசிலுக்கான ஜப்பான் உதவித் திட்டம் - 2018 |
| **48** | MNPEA/2018/050 | மலைநாட்டு புகையிரதப் பாதையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு 09 டீசல் எஞ்சின்களைக் பெற்றுக்கொள்வதற்கான பெறுகை நடவடிக்கை, கொள்வனவு மற்றும் பகிர்ந்தளித்தல் செயற் திட்டம் |
| **49** | MNPEA/2018/051 | உத்தேச சர்வதேச இறையாண்மை பத்திரங்களை வெளியிடும் திட்டத்தில் முதலீடுகளுடன் தொடர்புடைய உள்வாரியான மற்றும் வெளிவாரியான செலுத்துகைகளை மேற்கொள்ளல் |
| **50** | MNPEA/2018/052 | மத்திய அதிவேகப் பாதை செயற் திட்டத்தின் II ஆம் பகுதியின் முற்பணத்தில் ஒரு பகுதியைச் செலுத்துவதற்காக மக்கள் வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட நிதி வசதியை மறுசீரமைத்தல் |
| **51** | MNPEA/2018/053 | ஆஸ்திரிய சலுகைக் கடன் திட்டத்தின் கீழ் களணி பழைய புகையிரதப் பாலத்தை நிர்மாணித்தல். |
| **52** | MNPEA/2018/054 | ரஜரட்ட மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களுக்கு மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் துணை மருத்துவ பீடத்திற்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கான நிதியுதவி |

| | | |
|---|---|---|
| **53** | MNPEA/2018/055 | உத்தேச கொழும்பு நகரை அண்டிய பகுதி புகையிர சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான செயற் திட்டம் - பணியாட் தொகுதிக்கான தேவை |
| **54** | MNPEA/2018/056 | ஆஸ்திரிய சலுகைக் கடன் திட்டத்தின் கீழ் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு 100 ஆம்புலன்ஸ் வண்டிகளை பெற்றுக்கொள்ளல் |
| **55** | MNPEA/2018/057 | சிறுவர்களுக்கான பகல் நேரப் பாதுகாப்பு வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல். |
| **56** | MNPEA/2018/058 | கொடுப்பனவுகளை வழங்கி அரச ஊழியர்களை ஊக்குவித்தல். |
| **57** | MNPEA/2018/059 | நியதிச் சட்ட நிறுவனங்களின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல் - இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு - 2016 ஆண்டறிக்கை. |
| **58** | MNPEA/2018/060 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர் திரு. காமினி குணரத்ன அவர்களின் சேவைக் காலத்தை நீடித்தல். |
| **59** | MNPEA/2018/061 | இலங்கையில் மத்திய வங்கி மயப்படுத்தலுடன் தொடர்புடைய சட்டங்களுக்கான திருத்தங்கள் |
| **60** | MNPEA/2018/062 | இலங்கையின் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 64.31 கி.மீ. நீளமான வீதிகளை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் 13 பாலங்களை மீள நிர்மாணித்தல் |
| **61** | MNPEA/2018/063 | சர்வதேச இறையாண்மை பத்திரங்களை வெளியிடும் திட்டம் - 2018 |
| **62** | MNPEA/2018/064 | சர்வதேச பாடசாலைகளை பதிவு செய்தல் |
| **63** | MNPEA/2018/065 | இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களை மேலதிக செயலாளர் பதவிகளில் நியமித்தல். |
| **64** | MNPEA/2018/067 | 1990 சுவசெரிய மன்றச் சட்ட மூலத்தை சட்டமயப்படுத்தல் |
| **65** | MNPEA/2018/068 | சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தினால் நிதியீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்லூரி வேலைத் திட்டம். |
| **66** | MNPEA/2018/069 | பாதிப்புக்குட்படுபவையாக இலக்காகக்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் 2018 - 2022 காலப் பகுதிக்குள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக உணவுத் திட்டத்தின் இலங்கையுடன் தொடர்புடைய உபாய வழி முறைத் திட்டத்தை நிரல் அமைச்சுக்களின் ஊடாக செயற்படுத்தல். |
| **67** | MNPEA/2018/070 | ஆரம்பநிலை சுகாதாரப் பாதுகாப்பு முறைமையை பலப்படுத்தும் திட்டத்தை செயற்படுத்துவதற்காக உலக வங்கியின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி ஊடாக 200.0 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளல். |
| **68** | MNPEA/2018/071 | சிறுவர்களுக்கான பகல் நேரப் பாதுகாப்பு வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் |
| **69** | MNPEA/2018/072 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களின்போது பாதிப்புக்குட்பட்ட குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சீமேந்து சாந்தினால் கட்டப்பட்ட நிரந்தர வீடுகளைப் வழங்கும் வேலைத் திட்டம். |
| **70** | MNPEA/2018/073 | ஒருங்கிணைப்பாளர் (விசேட கருத் திட்டங்கள்) திரு.சிரிமசிரி ஹபுஆரச்சி அவர்களின் சேவையை நீடித்தல் |
| **71** | MNPEA/2018/074 | கௌரவ திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் மீது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் மூலமான கருத்துரைகள் (2018 ஏப்ரல் 10 அன்று எடுக்கப்பட்ட 18/0574/706/042ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக |
| **72** | MNPEA/2018/075 | மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அலுவல்களை விளைதிறன்மிக்க வகையில் மேற்கொள்வதற்கான ஆற்றலை பலப்படுத்தும் செயற் திட்டம் |
| **73** | MNPEA/2018/076 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஒருங்கிணைப்பாளராக (1990 சுவசெரிய திட்டம்) திரு. எஸ்.ஏ.டீ.ஜயந்த |

| | | |
|---|---|---|
| | | ஹேமசிரி அவர்களை நியமித்தல். |
| **74** | MNPEA/2018/077 | சினமன் எயார் (தனியார்) கம்பனியினால் விமானங்கள் பராமரிப்பு அலுவல்களுக்காக விமானங்களை நிறுத்திவைப்பதற்கான கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளவில் அமைக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்குரிய காணியொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல். |
| **75** | MNPEA/2018/078 | கொடுப்பனவுகளை வழங்கி அரச ஊழியர்களை ஊக்குவித்தல். |
| **76** | MNPEA/2018/079 | நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்புத் திட்டம் தொடர்பான 2018 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்தல். |
| **77** | MNPEA/2018/080 | தேசிய கணக்காய்வு சட்டமூலம். |
| **78** | MNPEA/2018/081 | 2018 ஆம் அண்டிற்கான அந்நியச் செலாவணி தவணை நிதி வசதியைப் பெற்றுக்கொள்ளல் |
| **79** | MNPEA/2018/082 | கட்டங் கட்டமான அடிப்படையில் வேலையற்ற பட்டதாரிகளைப் பயிற்றுவித்தல் |
| **80** | MNPEA/2018/083 | ஆரம்பநிலை சுகாதாரப் பாதுகாப்பு முறைமையை பலப்படுத்தும் திட்டத்தை செயற்படுத்துவதற்காக உலக வங்கியின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி ஊடாக 200.0 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளல் |
| **81** | MNPEA/2018/084 | அரசாங்கத்தின் முதலீடுகளை தயாரிக்கும் முறையை முறைப்படுத்தல் |
| **82** | MNPEA/2018/085 | மத்திய அதிவேகப் பாதை திட்டம் - கட்டம் 1 கடவத்தை முதல் மீரிகம வரை |
| **83** | MNPEA/2018/086 | சுற்றுலாப் பயணிகளுக்காக உரிய கால அட்டவணைக்கமைய செயற்படுத்தப்படும் உள்ளக விமான சேவைகளை விருத்தி செய்தல் |
| **84** | MNPEA/2018/087 | மலைநாட்டு புகையிரதப் பாதையில் ஓடுவதற்காக இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு புகையிரத எஞ்சின்கள் மற்றும் பெட்டிகளைக் பெற்றுக்கொள்வதற்கான பெறுகை நடவடிக்கை - 12 புகையிரத எஞ்சின்களைக் கொள்வனவு செய்தல் |
| **85** | MNPEA/2018/088 | பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனை நிதியீடு செய்வதற்காக இலங்கை அரசாங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க குடியரசின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட கடன் ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ளல் |
| **86** | MNPEA/2018/089 | பிரான்ஸ் ஒத்துழைப்பின் கீழ் இலங்கையில் 06 சிறியளவிலான பால் உற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் |
| **87** | MNPEA/2018/090 | ஹில்டன் ஹோட்டல் மற்றும் கொழும்பு கிரேண்ட் ஹயட் ஹோட்டலின் பங்குகளை விற்பனை செய்தல் |
| **88** | MNPEA/2018/091 | மின் உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கான நீண்ட காலத் திட்டத்தை மீளாய்வுக்குட்படுத்தும் குழுவின் அறிக்கை |
| **89** | MNPEA/2018/092 | நியதிச் சட்ட நிறுவனங்களின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல் - வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - ஆண்டறிக்கை – 2015 |
| **90** | MNPEA/2018/093 | மத்திய செயற் திட்ட முகாமைத்துவப் பிரிவு (CPMU) 2017 மார்ச் 01 ஆம் திகதி முதல் 2018 மார்ச் 31 ஆம் திகதி வரை மேற்கொண்ட அலுவல்கள் சம்பந்தமான முன்னேற்ற அறிக்கை |
| **91** | MNPEA/2018/094 | சுற்றுலாத்துறை செயலணியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரின் ஆலோசகராக திரு.பெடீ விதான அவர்களின் சேவைக் காலத்தை நீடித்தல் |
| **92** | MNPEA/2018/095 | கட்டங் கட்டமான அடிப்படையில் வேலையற்ற பட்டதாரிகளைப் பயிற்றுவித்தல் |
| **93** | MNPEA/2018/096 | மத்திய அதிவேகப் பாதையின் 3 ஆவது பகுதியை (CEP III) |

| | | |
|---|---|---|
| | | நிர்மாணித்தல் - ஒப்பந்தப் பணியை வழங்குதல் - பொதுஹெர முதல் கலகெதரை வரை |
| **94** | MNPEA/2018/097 | உத்தேச நகர்ப்புற கருத் திட்டங்களை தயார் செய்வதற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து தொழில்நுட்ப உதவிக் கடன் |
| **95** | MNPEA/2018/098 | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து உதவிக் கடன் |
| **96** | MNPEA/2018/099 | வட மாகாண நிலைபேறான மீன்பிடி அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து உதவிக் கடன். |
| **97** | MNPEA/2018/100 | தூண்களின் மேல் நிர்மாணிக்கப்படும் அதிவேக துறைமுக நுழைவுப் பாதை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து உதவிக் கடன். |
| **98** | MNPEA/2018/102 | பெண்கள் நலனோம்புகை சம்பந்தமான ஆய்வு - 2018/2019 |
| **99** | MNPEA/2018/103 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களின் போது பாதிப்புக்குட்பட்ட குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சீமேந்து சாந்தினால் கட்டப்பட்ட நிரந்தர வீடுகளைப் வழங்கும் வேலைத் திட்டம். |
| **100** | MNPEA/2018/104 | கொழும்பு பங்குச் சந்தையில் (CSE) பொது மக்கள் பங்குரிமை சம்பந்தமான பட்டியலிடல் ஒழுங்கு விதிக்கமைய இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குரிய லங்கா ஹொஸ்பிட்டல் கோப்பரேஷன் பீஎல்சீ கம்பனியின் பங்குரிமையின் ஒரு பகுதியை விற்பனை செய்தல் |
| **101** | MNPEA/2018/105 | அரசாங்கக் காணிகளுக்காக காணி மானியப் பத்திரத்தை வழங்கும் துரித வேலைத் திட்டம். |
| **102** | MNPEA/2018/106 | நியதிச் சட்ட சபைகளின் ஆண்டிறிக்கை, இலங்கை கொள்கை ஆய்வு நிறுவகம் - ஆண்டறிக்கை – 2016 சமர்ப்பித்தல் |
| **103** | MNPEA/2018/107 | வெப்பக் கட்டுப்பாட்டுக் களஞ்சிய வசதிகளை தம்புள்ளையில் தாபித்தல். |
| **104** | MNPEA/2018/108 | கட்டங் கட்டமான அடிப்படையில் வேலையற்ற பட்டதாரிகளைப் பயிற்றுவித்தல் |
| **105** | MNPEA/2018/109 | தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் நியமித்தல். |
| **106** | MNPEA/2018/110 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) பதவியில் திரு.தமித்த குமாரசிங்க அவர்களை நியமித்தல் |
| **107** | MNPEA/2018/111 | ப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் பொதுவான காப்புறுதி நடவடிக்கைகள் சம்பந்தமான மென்பொருள் மற்றும் வன்பொருள் தீர்வுகளை வழங்குதல், தாபித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல். |
| **108** | MNPEA/2018/112 | கொழும்பு கிரேண்ட் ஹயட் ஹோட்டலின் பங்குகளை விற்பனை செய்தல் நடவடிக்கையை மேற்கொள்ளும்வரை அதன் நிர்மாணப் பணிகளை தரப்பு ரீதியாக நிதியீடு செய்வதற்காக 12 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்ளல் |
| **109** | MNPEA/2018/113 | இராஜாங்க அமைச்சர் பணியகத்தின் பகுப்பாய்வுக் குழுவில் பயிற்சி பெறுபவர்களின் / பகுப்பாய்வாளர்களின் சேவைக் காலத்தை நீடித்தல் மற்றும் பகுப்பாய்வுப் பிரிவுக்காக பகுப்பாய்வாய்வாளர் குழுத் தலைவர் பதவியை உருவாக்குதல் |
| **110** | MNPEA/2018/114 | மானியம் வழங்கப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் வரி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்தல் |
| **111** | MNPEA/2018/115 | வரிச் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்கும் திட்டம். |
| **112** | MNPEA/2018/116 | கிராமப் புறப் பாலங்களை நிர்மாணித்தல். |
| **113** | MNPEA/2018/117 | கருத் திட்டங்களைச் செயற்படுத்துவதனை துரிதப்படுத்துவதற்காக |

| | | |
|---|---|---|
| | | அமைச்சரவையினால் நியமிக்கப்படும் நிலையான கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் குழுவை அமைத்தல் |
| **114** | MNPEA/2018/118 | சிறியளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல் |
| **115** | MNPEA/2018/120 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களின்போது பாதிப்புக்குட்பட்ட குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சீமேந்து சாந்தினால் கட்டப்பட்ட நிரந்தர வீடுகளைப் வழங்கும் வேலைத் திட்டம் |
| **116** | MNPEA/2018/121 | போக்குவரத்துத் தொடர்புகள் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவத் திட்டத்தை மறுசீரமைத்தல் (TCAMP) |
| **117** | MNPEA/2018/122 | மத்திய அதிவேகப் பாதையின் 3 ஆவது கட்டத்திற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக வுழமலழ ஆவைளரடினைாை ருகுதுஇ டுவன. வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரப் பத்திரக் கடிதத்தின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்தல். |
| **118** | MNPEA/2018/123 | உயர் கல்விக்கான சிறப்பு மையத்தை தாபிப்பதற்காக இலங்கை முதலீட்டு சபைக்குரிய கேரகலவில் அமைந்துள்ள காணியை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுத்தல். |
| **119** | MNPEA/2018/124 | சிறுவர்களுக்கான பகல் நேரப் பாதுகாப்பு வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல். |
| **120** | MNPEA/2018/125 | பொதுவான சந்தை விலைப் பொறிமுறைக்குப் புறம்பாக செலவை அடிப்படையாகக் கொண்ட விலைக்கு உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்திய சுப்பர் மார்க்கட் வர்த்தக நிலையங்களுக்கு எற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்கான பிரேரணை. |
| **121** | MNPEA/2018/127 | சுகாதார முறைமைகளை மேம்படுத்தும் செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து நிதியதவியைப் பெற்றுக்கொள்ளல். |
| **122** | MNPEA/2018/129 | 1990 சுவசெரிய மன்றத்தின் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் சம்பள அளவுத் திட்டம். |
| **123** | MNPEA/2018/131 | வெப்பக் கட்டுப்பாட்டுக் களஞ்சிய வசதிகளை தம்புள்ளையில் தாபித்தல். |
| **124** | MNPEA/2018/132 | இராஜாங்க அமைச்சர் பணியகத்தின் பகுப்பாய்வுக் குழுவில் பயிற்சி பெறுபவர்களின் / பகுப்பாய்வாளர்களின் சேவைக் காலத்தை நீடித்தல் மற்றும் அந்தப் பிரிவின் பயிலுனர்கள் / பகுப்பாய்வாளர் பதவியை உருவாக்குதல். |
| **125** | MNPEA/2018/133 | சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு 2021 |
| **126** | MNPEA/2018/134 | இலங்கையில் அரச - தனியார் துறை ஒத்துழைப்பு செயற்பாட்டுக்கு உதவி வழங்குவதற்குத் தேவையான கட்டமைப்பொன்றை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியீடு செய்வதற்காக உலக வங்கியின் பனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து 25 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்ளல். |
| **127** | MNPEA/2018/135 | வெப்பக் கட்டுப்பாட்டு களஞ்சியசாலை / குளிரூட்டி வசதிகள் வலையமைப்பொன்றை தாபித்தல் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக தனியார் முதலீடுகளை ஊக்குவித்தல். |
| **128** | MNPEA/2018/136 | பசுமை சக்தி அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறனை மேம்படுத்தும் முதலீட்டுத் திட்டம் - இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளல். |
| **129** | MNPEA/2018/137 | நிரல் அமைச்சுக்களின் திணைக்களங்களில் பணியாற்றும் நாடளாவிய சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றலை இரத்துச் செய்தல். |
| **130** | MNPEA/2018/139 | இலங்கை முதியோர் உபசரணை சேவை வசதிகளைப் பலப்படுத்தல். |
| **131** | MNPEA/2018/140 | மாத்தறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிப்புக்குட்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைத்தல். |

| | | |
|---|---|---|
| **132** | MNPEA/2018/141 | வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் : 2018 நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புத் திட்டம் |
| **133** | MNPEA/2018/143 | மட்டக்களப்பு மாநகர சபைக்குரிய பொது நூலகக் கட்டிடத்தின் மீதி நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல் மற்றும் கீழ் மாடி வேலைகளைப் பூர்த்திசெய்தல். |
| **134** | MNPEA/2018/144 | அபிவிருத்தித் திட்டங்கள் / வேலைத் திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியீடு/பல்தரப்பு / இரு தரப்பு அபிவிருத்தித் தரப்பினர் மற்றும் வெளிநாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படவிருக்கும் கடன் / மானியம் / பிணை முறி அலுவல்கள் சார்ந்த ஒப்பந்தங்கள் |
| **135** | MNPEA/2018/145 | கட்டுமானக் கைத்தொழில் துறையில் நிலவும் பாரிய ஊழியத் தட்டுப்பாடு. |
| **136** | MNPEA/2018/146 | கொழும்பு சர்வதேச நிதி நிகரத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ட்ரயன் பெர்னாந்துபுள்ளே அவர்களின் சேவை நீடித்தல் |
| **137** | MNPEA/2018/147 | நியதிச் சட்ட நிறுவனங்களின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல் - வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - ஆண்டறிக்கை - 2016 |
| **138** | MNPEA/2018/149 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களின்போது பாதிப்புக்குட்பட்ட குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சீமேந்து சாந்தினால் கட்டப்பட்ட நிரந்தர வீடுகளைப் வழங்கும் வேலைத் திட்டம் |
| **139** | MNPEA/2018/150 | கிராமிய பாலங்களை நிர்மாணித்தல் |
| **140** | MNPEA/2018/152 | அமெரிக்க ஐக்கிய குடியரசின் மிலேனியம் செலேன்ஞ் கோப்பரே'ன் நிறுவனம் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையிலான ஒப்பந்தம் |
| **141** | MNPEA/2018/153 | கையடக்கத் தொலைபேசிகளின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் அழைப்புக்களின் போது அழைப்புக்கான தொடர்பு மற்றம் தரவுப் பரிமாற்றல் வினைத்திறனை மேம்படுத்தல். |
| **142** | MNPEA/2018/155 | சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக ஏற்க முடியுமான விலை அளவுகளின் கீழ் உரிய கால அட்டவணைக்கமைய செயற்படுத்தப்படும் உள்ளக விமான சேவைகள். |
| **143** | MNPEA/2018/156 | பிராந்திய அபிவிருத்தி வங்கியினை வலுப்படுத்துவதற்கான கருத்திடத்திற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான நிதி உதவி. |
| **144** | MNPEA/2018/158 | வடக்கு கிழக்கு மாகணங்களின் நல்லிணக்கதிற்கு அதிக முக்கியத்துவம் அழிக்கும் வீதி அபிவிருத்தி கருத்திட்டங்கள். |
| **145** | MNPEA/2018/159 | இறக்குமதி செய்யப்பட்ட செலவில் உணவுப் பண்டங்களை கிடைக்கச் செய்வதற்கான அரசாங்க நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்ட சிறப்பு அங்காடிகளுக்கு ஏற்பட்ட செலவினை மீளளிப்பதற்கான முன்மொழிவு. |
| **146** | MNPEA/2018/161 | உள்நாட்டு அபிவிருத்தி ஆதரவு கருத்திட்டத்திற்காக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பிடமிருந்து ஐஅடொலர் 70 மில்லியன் கடனைப் பெற்றுக்கொள்ளல். |
| **147** | MNPEA/2018/162 | காலநிலை செயற்திறன் நீர்பாய்ச்சப்பட்ட விவசாயக் கருத்திட்டத்திற்காக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பிடமிருந்து ஐஅடொலர் 125 மில்லியன் கடனைப் பெற்றுக்கொள்ளல். |
| **148** | MNPEA/2018/163 | இரணவிலையில் வொயிஸ் ஒப் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட சொத்துகள் தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| **149** | MNPEA/2018/165 | பெடரல் ஜார்மன் குடியரசு அரசாங்கத்திடமிருந்து யூரோ 0.25 மில்லியன் தொழில் நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்ளல் |
| **150** | MNPEA/2018/166 | கொழும்பு மா நகர மீளளெழுச்சிக் கருத்திட்டத்திற்கு துணையளிப்பதற்கு ஆசிய முதலீட்டு வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 200 மில்லியன் கடன் வசதி |
| **151** | MNPEA/2018/168 | சர்வதேச பாடசாலைகளை பதிவு செய்தல். |
| **152** | MNPEA/2018/169 | தெரிவு செய்யப்பட்ட இலங்கை வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகளை தரமுயர்த்தல் |
| **153** | MNPEA/2018/171 | இறக்குமதி செய்யப்பட்ட செலவில் உணவுப் பண்டங்களை கிடைக்கச் செய்வதற்கான அரசாங்க நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்ட சிறப்பு அங்காடிகளுக்கு ஏற்பட்ட செலவினை மீளளிப்பதற்கான மேலதிக ஒதுக்கீடு |

**அட்டவணை 3.6** அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம்

### 3.5.2 பேரண்ட மட்ட பொருளாதார விடயங்களுக்கான பங்களிப்பு

- 2018 இன் 18 ஆம் இலக்க “1990 சுவசெறிய மன்றம்” சட்டம் 2018.07.04 அன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.
- அரசாங்க முதலீட்டு சேவை வழங்கல் படையணி தாபிக்கப்பட்டு தொடர்புடைய அலுவலர்கள் ஆள் சேர்க்கப்பட்டனர்.

### 3.5.3 திட்டமிடல் கருமங்கள் ;

- அமைச்சின் செயலாற்றுகை அறிக்கைகள், வருடாந்த நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை உரிய காலத்தில் தயாரித்து தொடர்புடைய அதிகாரிகளுக்கு சமர்ப்பித்தல்
- அமைச்சின் கீழான நிறுவனங்களுடன் காலமுறையான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- மத்திய நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவ அலகு, உயர் கல்விக்கான சிறப்புமிக்க நிலையமொன்றினை தாபித்தல் அத்துடன் சட்டக் கட்டமைப்பொன்றை தயாரிப்பதற்காக சர்வதேச நிதியியல் நகர கருத்திட்டம் என்பவற்றிக்கு வசதியளிக்கப்பட்டது.
- அமைச்சின் மேற்பார்வையின் கீழ் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் கூட்டிணைப்புடன் பொருளாதார அபிவிருத்தி மீதான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் உள்ளீடுகளை சமர்ப்பிப்பதற்கு ஒழுங்குகள் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டன.

### 3.6 ‘1990 சுவசெறிய மன்றம்’: வைத்தியசாலை கவனிப்புக்கு முந்திய அவசர அம்பியூலன்ஸ் சேவைகருத்திட்டம் - கட்டம் II

அப்போதிருந்து தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சானது “1990 சுவசெறிய மன்றம்” இன் ஊடாக 209 அம்பியூலன்ஸ்களையும் தொடர்புடைய மருத்துவ உபகரணங்களையும் 2018 யூலை தொடக்கம் திசெம்பர் வரை வைத்தியசாலை கவனிப்புக்கு முந்திய அவசர அம்பியூலன்ஸ் கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்தது. இந்தியா அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பொருள் உதவி அளிப்பு ஒன்றின் ஊடாக கருத்திட்டத்திற்கு நிதியளிக்கப்பட்டது, 209 அம்பியூலன்ஸ்களையும் தொடர்புடைய மருத்துவ உபகரணங்களையும் இறக்குமதி செய்வதற்கு ஏற்பட்ட மொத்தசெலவினம் பின்வருமாரு:

| 2018.12.31 அன்று உள்ளவாறு ஏற்பட்ட மொத்த செலவினம் (ரூபா மில்லியன்) | |
|---|---|
| **நிதியளித்தல் குறியீடு 13** | 802.626 |
| **நிதியளித்தல் குறியீடு 17** | 217.06 |

அட்டவணை இலக்கம் 3.7 மொத்த செலவினம்



## 3.7 மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவு (CPMU)

முன்னுரிமை அபிவிருத்தி முயற்சிகள் மீது சரியான நேரத்தில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும், அவற்றை சரியான முறையில் கண்காணிப்பதற்குமான ஒரு அலகாக 2017 பங்குனி மாதம் மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவு நிறுவப்பட்டது. அதன்படி, மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்தவப் பிரிவானது இது இலங்கையின் மத்திய வருமானம், தனியார் துறை வேலைகள், முதலீடு, ஏற்றுமதி மற்றும் வரி வருமானம் ஆகிய 5 மிகமுக்கியமான பொருளாதார வெளியீடுகளை உள்ளடக்கிய இலங்கையின் வெளியீடுகளைத் துரிதப்படுத்திய 3 வருட தீவிர முயற்சியொன்றான பொருளாதார விநியோகத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சுகளுக்கு ஆதரவளிக்கின்றது. தற்பொழுது மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவு பின்வரும் பிரிவுகளில் கவனம் செலுத்துகிறது :

- சுற்றுலா
- தயாரிப்பு
- விவசாயம் (மீன்பிடி உட்பட)
- முதலீடு
- டிஜிட்டல் பொருளாதாரம்

2018 தை 1ம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரையான மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவின் வளர்ச்சியானது, தற்போது மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்தவப்பிரிவின் கீழ் கவனத்தில் கொள்ளப்படும் துறைகளுக்கு வழங்கிய ஆதரவு மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் பற்றிய சுருக்கம் கீழே வழங்கப்பட்டுள்ளது.

### 3.7.1 சுற்றுலாத் துறை

- **டிஜிட்டல் சந்தைச் செயற்பாடுகள்**

**வேகம்** 1 - சொந்த வழிமுறைகளை மேம்படுத்தல், உள்ளக திறன் மேம்பாடு ஆலோசகரின் பரிந்துரையின்படி, இலங்கையின் சுற்றுலாத்துறைக்கான புதிய இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**வேகம் 2** – ''எப்பொழுதும்'' டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தை அபிவிருத்தி செய்தல்

டிஜிட்டல் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளின் கீழ், வழிமுறைகள் மற்றும் உள்ளடக்க மூலோபாயம், சமூகத்தின்பால் செவிசாய்த்தல், ஊடக கொள்முதல் மற்றும் நுண்தளங்கள் ஆகிவற்றை வடிவமைப்பதற்கு இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இந்தியா மற்றும் சீனா ஆகிய 5 சந்தைகளுக்கும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன.

**வேகம் 3** – உலகளாவிய பிரச்சாரம்
உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தின் கீழ் 2018 கார்த்திகை மாதம் உலக சுற்றுலா மார்ட் (WTM) இலங்கைக்கான புதிய வியாபாரப்பெயர் அறிமுகப்படுத்தப்பட்டது.

- **சாகச சுற்றுலா மற்றும் பயிற்சி**

**தேசிய தகுதிகாண் தரநிலைகளின் அபிவிருத்தி (NCS)**

காற்றலை சார்ந்த NCS னை நிறைவு செய்தல்: பாய்மரக் கப்பல் ஓட்டுனல்: வானூர்தியை தரையில் போடுவதற்காக மற்றும் சேவை வழங்குவதற்கான குழு, நிலம் சார்ந்த செயற்பாடு, வான் பாய்ச்சல் சாகசம், மலையேறுதல்: மலையேறல் தொடர்பான வழிகாட்டி, படகு ஓட்டுதல்.

**TVEC மூலம் SLITHM உடன் கற்கைநெறியினை அபிவிருத்தி செய்தல்**

2018 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29ஆம் திகதி அலரி மாளிகையில் சாகச சுற்றுலா மற்றும் பயிற்சி தொடர்பான 5 பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனத்தினால் இக்கற்கைநெறிகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

**ஒழுங்குவிதிகள்**

சாகச சுற்றுலா சேவை வழங்குனர்களுக்காக ஒழுங்குவிதிகளை உருவாக்கும் பொருட்டு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்குவதற்கும் 10 விம்பக்குழுக்களை நியமனம் செய்தல் மற்றும் ஒழுங்குவிதிகளின் வரைவு தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**தரநிலைகள்**

வெளியீடு SLS ISO 211101: 2014 சாகச சுற்றுலாப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை. 2018 ஐப்பசி மாதம் 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை பாசிக்குடாவிலே தரநிலைகளை நடைமுறைப்படுத்தும் ஒரு முன்னேற்றச் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**சாகச சுற்றுலா மற்றும் பயிற்சி முன்மொழிவுகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

சேவை வழங்குனர்கள், ஒழுங்குபடுத்துபவர்கள் மற்றும் வழிகாட்டிகளை சாகச சுற்றுலா துறைகளின் தற்போதைய அபிவிருத்திகள் தொடர்பில் அறிவூட்டுவதற்காக 2018ஆம் ஆண்டு 25ஆம் திகதி லயா லெசர், குக்ளேகங்கவில் பயிற்சியாளர்களுக்கான பயிற்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

- **கோல்ப் சுற்றுலா**

2018 மார்கழிமாத இறுதி வரை கோல்ப் சுற்றுலா தொடர்பான 4 கூட்டங்கள் நடைபெற்றன. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **ஆயுர்வேத சுற்றுலா**

2018 மார்கழிமாத இறுதி வரை ஆயுர்வேத சுற்றுலா தொடர்பான 4 கூட்டங்கள் நடைபெற்றன. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **நீலக்கொடி முயற்சி ஆரம்பம்**

மொரகல கடற்கரைக்கான நீலக்கொடிச் சான்றிதழ் வழங்கும் முதலாவது கூட்டம் 2018 ஆவணி மாதம் 16ஆம் திகதி நடைபெற்றது. அது நீலக்கொடித் தரத்தினை பெற்றுக்கொள்வதற்கான இலங்கையின் முதலாவது முயற்சி இதுவாகும். அத்துடன் தீவைச் சுற்றியுள்ள ஏனைய கடற்கரைகளுக்கு விரிவுபடுத்தும் நோக்கத்துடனான ஒரு முன்னோடி செயற்றிட்டமான இது எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்டது.

## 3.7.2. முதலீட்டுப் பிரிவு

- **“துறுணு திரிய”, ஒரு கடன் திட்டம்**

ஏற்கனவே சிறிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற இளம் தொழில்முனைவோரிற்கு நிதியுதவியினை வழங்குவதற்காக, மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவின் வேண்டுகோளிற்கிணங்க இலங்கை வங்கியினால் 2018 சித்திரை மாதம் ஒரு கடன் திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்டது. பிராந்திய மட்டத்தில் உள்ளவர்களுக்கு கடன்திட்டம் தொடர்பான விழிப்புணர்வினை உருவாக்குவதற்கும், அதனை நடைமுறைப்படுத்தலில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், மத்திய நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவப் பிரிவு, பிரதேச செயலகங்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றது. இந்தக் கடன் திட்டத்தின் கீழ் 2018 டிசம்பர் 31ஆம் திகதி வரை இலங்கை வங்கி ரூ.183,800,500 பெறுமதியான 429 கடன்களை வழங்கியுள்ளது.




அட்டவணை இலக்கம் 3.2: "துறுணு திரிய" - வாராந்த முன்னேற்றம்




வுரைபடம் இலக்கம் 3.3: "துறுணு திரிய" - மாகாண கடன் வழங்கல

- **வடக்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு**

2016ஆம் ஆண்டு பிரதமர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகம், மற்றும் அரசாங்கத்தின் பல பிரிவுகளை உள்ளடக்கிய வகையிலே வடமாகாணத்தின் கிராமப்புற பொருளாதாரத்தை நவீனமயமாக்குதல், போதுமான நிதி ஏற்பாடுகளை உறுதிசெய்தல், நிகழ்ச்சிகள் அல்லது திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றின் பொருட்டு "வடக்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு" உருவாக்கப்பட்டது. 2018 சித்திரை மாதம் முதல் மத்திய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்போடு இந்தக் குழுக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் வடக்கிலுள்ள ஓர் மாவட்டத்திலும், கொழும்பிலும் என்ற வகையிலே மாறி மாறி நடைபெற்றுவருகின்றது.

### 3.7.3 டிஜிட்டல் பொருளாதார துறை

- **முன்னோடித் திட்டம் - கர்ப்பிணித் தாய்மார்களுக்கான டிஜிட்டல் வவுச்சர் நிகழ்ச்சித்திட்டம்**

பொதுமக்களின் பின்னூட்டல்களின் பிரகாரம் பொதுமக்களின் நலன்புரிக் கொடுப்பனவுகளை நேரடியாக அரசாங்கத்தினால் மக்களின் நடமாடும் பணக்கணக்கிலே வைப்பிலிடுவதன் மூலம் பங்கிடுவதற்கான ஓர் முன்னோடித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த அமைப்பு

அபிவிருத்தி செய்யப்பட்டு பாவனையாளர் ஏற்புடைமை சோதனை நிகழ்ச்சி, (UAT) 2018 ஆவணி மாதம் 24ஆம் திகதி நடாத்தப்பட்டதோடு, மகளிர் மற்றம் சிறுவர் விவகாரங்கள் அமைச்சு UAT ஆவணத்தில் கையெழுத்திட்டது. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் 3 பிரதேச செயலகத்தின் தொடர்புடைய அலுவலர்களுக்கான இந்த பயிற்சி முறைமை 05.10.2018 அன்று நடாத்தப்பட்டதோடு SL CERTS இனால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

- **இலங்கையின் டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம்**

2017ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11ஆம் திகதி அமைச்சரவை முடிவின்படி, மெக்கின்ஸி கம்பனியின் ஆலோசனை ஆதரவுடன் இலங்கைக்கான டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சரவை அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு கட்டங்கள், நோயைக் இனங்காணல் மற்றும் பகுதிகளை வடிவமைத்தல் ஆகியவை ஆலோசனை நிறுவனத்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ளன. வழங்கக்கூடிய முதல் இரண்டு கட்டங்கள் உ-ம்: இலங்கைக்கான டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம், பொதுமக்கள் நேயக்கட்டமைப்பு என்பன வடிவமைக்கப்பட்டு திட்ட மறுஆய்வுக் குழுவினால் கையெழுத்திடப்பட்டது. கைத்தெழில், விவசாயம், சுற்றுலா, டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் MODSIT ஆகிய 5 அமைச்சுக்களால் கையெழுத்திடப்பட்ட இரண்டு அறிக்கைகள் உட்பட ஒரு கூட்டு அமைச்சரவைப் பத்திரிகை, அமைச்சரவை அமைச்சின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

### 3.7.4. விவசாயப் பிரிவு

- **ஒரு நெற் பயிர்ச்செய்கை மற்றும் அறுவடை பற்றிய ஒரு தரவுத்தளத்தினை (MIS) நிறுவுதல்**

மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்தவப் பிரிவின் கோரிக்கைக்கிணங்க, களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய திட்டமிடல் திணைக்களம் தரவுத்தளமொன்றினை நிறுவுவதற்கான ஒரு செயற்றிட்டத்தினை ஆரம்பித்துள்ளது. களனிப் பல்கலைக்கழக இணையத்தளம் வேண்டுமான அபிவிருத்திகளோடு விவசாயத் திணைக்கள இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

- **தேர்ந்தெடுக்கப்பட்ட படிமுறை நீர்ப்பாசன முறைமை அபிவிருத்தி**

அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய படிமுறை நீர்பாசன முறைமை மீதான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவர்களை நடைமுறைத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளும் பொருட்டு அவை கமநல சேவைகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

- **வன மற்றும் வனஜீவராசிகள் வலயங்களை அடையாளங்காணல்**

மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பரிவு நிலஅளவை ஆணையாளர் அலுவலகத்தோடு இணைந்து ஒரு இணையம் சார்ந்த, வரைபடத்தில் அனைத்து முக்கிய இருப்புக்களையும் குறிக்கும் ஒரு விரிவான தரவுத்தளத்தை உருவாக்க தொடங்கியுள்ளது. அது முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளுக்குப் பொருத்தமான மற்றும் கிடைக்கக்கூடிய நிலங்களை அடையாளம் கண்டுகொள்ள அனுமதிக்கின்றது.

- **மாத்தளை மாவட்டத்தில் துரிதப்படுத்தப்பட்ட கொக்கோ நடுகை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அருகிலுள்ள பிரிவுகள்**

மாத்தளை, கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் கொக்கோ பயிரிடுவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது பின்வரும் கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும்.

I சிறு வியாபாரிகளுக்கு கொக்கோ பயிர்ச்செய்கையினை வீட்டுத்தோட்ட எண்ணக்கரு மூலம் அறிமுகப்படுத்தல்

ii பெரியளவிலான பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்ற அடிப்படையில் கொக்கோ பயிர்ச்செய்கையினை அறிமுகப்படுத்தல்.

- **விவசாயிகளுக்கு பயிர்களை பாதுகாப்பதற்காக துப்பாக்கி அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பான கொள்கை**

வனஜீவராசிகள் மூலம் வேளாண்மைக்கு தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் அச்சுறுத்தலின் பால் அரசாங்கத்தின் உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. விவசாயத்தைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பு அணுகுமுறையுடன் துப்பாக்கிகளை வழங்குவதன் மூலம், விவசாயிகளால் துப்பாகிகளுக்கான அணுகல் தடையினை இலகுபடுத்தல். துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களின் தற்போதைய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தளர்த்துதல் தொடர்பான ஒரு யோசனை கௌரவ பிரதம மந்திரி அவர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **தேங்காய் நிலங்களை குறுக்கீடு செய்தல்**

இலங்கையின் தேங்காய் முக்கோண வலயத்தில் குறிப்பிடத்தக்க தென்னை பயிரிடப்படும் நிலங்களை கணிசமான அளவிற்கு குறைப்பயன்பாட்டிலுள்ளது. அன்னாசி, இஞ்சி, மஞ்சள் போன்ற பல பயிர்கள் தென்னையுடன் இடைப்பயிர்களாக வளர்க்கப்படுகின்றன. பெருமளவில் இந்தப் பயிர்களை வாங்குவதற்குத் தயாராகவுள்ள தனியார் துறை உணவு உற்பத்தியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தின்படி, தேங்காய் நிலங்களில் ஊடுபயிர்கள் மீதான ஒரு முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 3.7.5. செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள்

2018 சித்திரை மாதத்திலிருந்து மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவு செயல்திறன், கண்காணிப்பு மற்றும் பல்வேறு முயற்சிகளின் செயன்முறை ஆய்வு தொடர்பான கூட்டங்களை ஒருங்கிணைப்பதில் ஈடுபட்டுள்ளதுடன் இந்த முயற்சிகளோடு தொடர்புடைய விடயங்களின் பின்னூட்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

| | ஆரம்பம் ∴ விடயம் | 31 டிசம்பர் 2019 வரை நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | LGN ஐ நடைமுறைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பான பின்னூட்டல் | 06 |
| 2 | சுற்றுலா மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பின்னூட்டல் | 05 |
| 3 | அதிவேக நெடுஞ்சாலையின் வெளிச்சுற்று வட்டம் - அதற்கான முன்னேற்ற மீளாய்வு | 02 |
| 4 | கொழும்பு புனர்வாழ்வு மற்றும் நகரப் பிரிவு வீதிகள் | 02 |
| 5 | சிகிரியா குழுக் கூட்டம் | 02 |

அட்டவணை இலக்கம் 3.8 செயற்திறன் கண்காணிப்பு மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள்

## 3.8 பொருளாதார விவகாரங்கள் பிரிவின் முன்னேற்றம் - 2018

### 3.8.1 சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறைகள் (SME)

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறைகளிற்கான கூட்டங்கள் ஒருங்கிணைப்புச் செய்யப்படுகின்றது பொருளாதார விவகாரங்கள் பிரவின் உத்தியோகத்தர்கள் கூட்டங்களிற்கு சமூகமளித்து வருகின்றனர்.

நாட்டில் ஒரு மில்லியன் வேலை வாய்ப்புக்களை 25,000 MSME பிரிவுகள் ஊடாக உருவாக்குதல் என்ற அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் தேசிய கொள்ளைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சும் இலங்கை மத்திய வங்கியும் இணைந்து புதிய கடன் வழங்கல் திட்டம் ஒன்றை வடிவமைத்து அறிமுகப்படுத்தியுள்ளன. புதிய மற்றும் பொருத்தமான தொழில் நுட்பத்தை கிராமிய பொருளாதாரத்தின் வினைத்திறன் மற்றும் போட்டிபோடும் திறன் என்பனவற்றை மேம்படுத்தி வழங்கலும், கிராமங்களில் காணப்படும் இளைஞர்களின் வினைத்திறனையும் திறமையையும் பயன்படுத்தி புதிய சந்தை தளங்களையும் இணைப்புகளையும் உருவாக்கல்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்த்துறைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் ஆகியவற்றிற்கான கடன் திட்டங்களுக்குக்காக ஓர் வழிப்படுத்தும் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்த்துறை அபிவிருத்திக்கான கடன் திட்டம் மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் தொடர்பான "புதிய MSME" க்கான நடைமுறைப்படுத்தல் வழிமுறைகள் இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்டுள்ளது, திட்டத்தின் முழுமையான முன்னேற்றம் தொடர்பாக வழிப்படுத்தும் குழுவினால் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

### 3.8.2 சுவசக்தி கடன் வசதித் திட்டம்

கிராம மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை இளைஞர்கள் ஆரம்பிப்பதற்காக இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் சுவசக்தி கடன் திட்டம் கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமத்துவத்தின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது, பத்து இலட்சம் தொழில் வாய்ப்பக்களை உருவாக்கும் அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்தின் முக்கிய கட்டமாக "இருபத்து ஐந்தாயிரம் கருத்துக்கள் இருபத்து ஐந்தாயிரம் தொழில் முயற்சிகள்" எனும் தொனிப் பொருளின் கீழ் கிராமிய மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான ஒரு முக்கியமான நிகழ்வாக அமைந்துள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வசதி 200,000.00 வரையிலான ஒரு கடன் தொகை 5.5% வட்டிக்கு வழங்கப்படுவதுடன் தொழில் முயற்சியின் ஆரம்ப கட்ட செலவுகளுக்காக மீள அறவிடப்படாத ரூபா 50,000.00 தொகை வழங்கப்படும். அதே நேரம், இந்த வட்டி வீதத்தின் கீழ் தற்போது நடாத்தப்பட்டு வரும் தொழில் முயற்சிகளை முன்னேற்றுவதற்காகவும் ரூபா 250,000.00 கடனாக வழங்கப்படும்.

இந்தக் கடன் வசதிகள் கிராமப்புறச் சூழலிலுள்ள தனித்துவமான வளங்களைப் பயன்படுத்தி வியாபார முயற்சிகள் ஆரம்பிப்பதற்கு, புதிய அபிப்பிராயங்களை கொண்டுள்ள விஷேட திறன்களை உடைய இளைஞர்கள் ஈடுபடுவதற்கும் மற்றும் தகவல் தொழில்நுட்பம் அல்லது சூழலிற்குப் பாதிப்பினை ஏற்படுத்தாத உற்பத்திப் பொருட்களினை உற்பத்தி செய்தல் ஆகிய

முயற்சிகளை மேற்கொள்வதற்காக இளைஞர்கள், பட்டதாரிகள், மற்றும் விஷேட தேவைகளையுடைய இளைஞர்களுக்கு வழங்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட கடன்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்போர்களும் சாதாரணமான வட்டி வீதத்தில் அவர்களின் வியாபரா முயற்சிகளின் வெற்றித் தன்மையின் அடிப்படையில் மேலதிகமாகக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்பம் வழங்கப்படும். இந்த விடயம் தொடர்பாக, கடன் வசதி வழங்குவதற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஒரு தொகைான 4000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது அதில் தற்போது வரை **12,938** பயனாளிகளிற்கு கடன் வசதி வழங்குவதற்காக **2,610.63** மில்லியன் ரூபாவிலான ஒரு தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது.

சுவசக்தி கடன் வசதித் திட்டதின் கீழ் கடன் வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் ஒரு 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு சுவசக்தி கடன் வசதித் திட்டதின் முன்னேற்றமானது 1,821 பயனாளிகளிற்கு 375.42 மில்லியன் ரூபா பெறுமதியான கடன் தொகை வழங்கப்பட்டது.

| மாவட்டம் | **31.12.2018** திகதியில் உள்ளவாறு நிதி விடுவிப்பு (01.01.2018 -31.12.2018 ) | |
|---|---|---|
| | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் பெறுமதி (ரூபா.மி) |
| கம்பஹா | 58 | 13.18 |
| கொழும்பு | 76 | 15.93 |
| களுத்துறை | 142 | 29.95 |
| காலி | 135 | 28.15 |
| மாத்தறை | 194 | 40.05 |
| அம்பாந்தோட்டை | 135 | 28.63 |
| மாத்தளை | 63 | 13.41 |
| கண்டி | 67 | 13.15 |
| நுவரெலியா | 38 | 8.10 |
| யாழ்ப்பாணம் | 53 | 8.84 |
| கிளிநொச்சி | 12 | 2.83 |
| மன்னார | 66 | 13.05 |
| முல்லைத்தீவு | 41 | 7.90 |
| வவுனியா | 52 | 11.09 |
| புத்தளம் | 90 | 18.77 |
| குருநாகல் | 66 | 13.67 |
| அனுராதபுரம் | 52 | 11.25 |
| பொலன்னறுவை | 40 | 8.26 |
| கேகாலை | 52 | 10.47 |
| இரத்தினபுரி | 99 | 22.41 |
| திருகோணமலை | 3 | 0.60 |
| மட்டக்களப்பு | 83 | 14.87 |
| அம்பாறை | 44 | 8.33 |
| பதுளை | 48 | 10.12 |
| மொனராகலை | 112 | 22.42 |
| மொத்தம் | **1,821** | **375.42** |

அட்டவணை இலக்கம் 3.9 சுவசக்தி கடன் வசதித் திட்டம்

### 3.8.3 அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிக்கும் வகையில் அத்வெல கடன் திட்டம் (READ)

இலங்கையில் ஆனர்த்தங்களினால் ஏற்பட்ட பேரழிவுகளைக் கருத்திற்கொண்டு, அனத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களினைக் குறைத்துக்கொள்ளும் வகையில் இனங்காணப்பட்டுள்ள தேவைகளின் கருத்திற்கொண்டு "அத்வெல" கடன் திட்டமானது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார செயற்பாடுகளை மீளவும் (READ) ஆரம்பிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. கடன் திட்டத்தின் பிரதான நோக்கமானது சலுகை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிப்பதற்காக கடன் வசதிகளை வழங்குவது ஆகும். ஏதாவது அனர்த்தம் நிகழ்ந்துள்ளமை தொடர்பாக அரசாங்கத்தினால் அறிவித்ததன் பின்னர் தகைமை வாய்ந்த உப – தரகர்களுக்கு இந்த திட்டத்தின் மூலம் நிதி வசதியளித்தல் இதன் முக்கிய நோக்கமாகும். இந்தவிடயம் தொடர்பாக் இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்தித் திணைக்களத்தில் இந்த அமைச்சினால் வழங்கப்பட்ட ஆரம்ப நிதியினைக்கொண்டு ஒரு நிதியம் இலங்கை மத்திய வங்கியினால் உருவாக்கியுள்ளது. இது ஒரு மீள்நிதியளிக்கும் கடன் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும்.

மீள்சுழற்சிக் கடனாக 20 வருடங்களில் அறவீடுசெய்து பெற்றுக்கொள்ளும் வகையில் 2017 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் ஒரு மொத்த நிதித் தொகையாக ரூபா 2000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீளத்தொடங்குதல் அல்லது மீட்டெடுப்பதற்கான மதிப்பிடப்பட்ட மீள ஆரம்பித்தற்செலவு பின்வரும் வகுதிகளின் கீழ்வரும் பொருளாதாரச் செயற்பாடுகளைக் கொண்டதாக அமையும்; விவசாயம; பெருந்தோட்டம; கால்நடை மற்றும் மீன்பிடி; வர்த்தகம் உள்ளடங்களலான சேவைகள், வியாபாரம், வேலைவாய்ப்புத் தொழில்கள், மற்றும் சயதொழில், சிறியளவிலான வியாபாரிகள் ஆகியவற்றில் விஷேட கவனம் செலுத்தும்வகையிலான ஏதாவது பொருளாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 500,000.00 வரையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்த கடன் திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 1400 மில்லியன் வழங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் மீள்நிதியாக்கச் செலவுகளை மேற்கொள்வதற்காக ஒரு தொகையாக ரூபா 533 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடன் திட்டத்தின் முன்னேற்றம் பிவருமாறு காட்டப்பட்டுள்ளது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிப்பதற்கான கடன் திட்டம் "அத்வெல" 31.12.2018 ஆம் திகதியிலுள்ளவாறு முன்னேற்றம்.

| மாவட்டம் | **31.12.2018** திகதியில் உள்ளவாறு நிதி விடுவிப்பு | |
|---|---|---|
| | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் பெறுமதி (ரூபா.மி) |
| கொழும்பு | 42 | 17.08 |
| களுத்துறை | 527 | 239.64 |
| கம்பஹா | 2 | 1.00 |
| கண்டி | 1 | 0.50 |
| காலி | 834 | 303.89 |
| மாத்தறை | 1748 | 761.39 |
| அம்பாந்தோட்டை | 126 | 59.23 |
| இரத்தினபுரி | 260 | 115.53 |
| கேகாலை | 3 | 1.50 |
| மொத்தம் | 3543 | 1,499.76 |

**அட்டவணை இலக்கம் 3.10** 31.12.2018 திகதியில் உள்ளவாறு நிதி விடுவிப்பு

### 3.8.4 வறுமை ஒழிப்பிற்கான நுண் நிதிக் கருத்திட்டம் - II மீள்சுழற்சி நிதி (PAMP II –RF)

2018 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வறுமை ஒழிப்பிற்கான நுண் நிதிக் கருத்திட்டம் - II மீள்சுழற்சி நிதி (PAMP II –RF) திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான நிருவாகச் செலவினை மேற்கொள்வதற்காக 32.45 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேற்குறித்த மீள்சுழற்சி கடன் திட்டத்திற்கான நிதியினை ஜப்பான் அரசாங்கம் - ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவரம் (JICA) வழங்குகின்றது. தற்போதுவரை 94,893 பயனாளிகளிற்கு நன்மைபயற்கும் வகையில் 7017 மில்லியன் மீள்சுழற்சி நிதிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2018.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு விரிவான கருத்திட்ட முன்னேற்ற அறிக்கை வருமாறு

| மாவட்டம் | 31.12.2017 திகதியிலுள்ளவாறு மொத்தம் | | 01.01.2018 இருந்து 31.12.2018 | | 31.12.2018 திகதியிலுள்ளவாறு முழு விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் பெறுமதி (ரூபா.மி) | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் பெறுமதி (ரூபா.மி) | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் பெறுமதி (ரூபா.மி) |
| யாழ்ப்பாணம் | 4,372 | 332 | 92 | 11 | 4,464 | 342 |
| கிளிநொச்சி | 1,967 | 155 | 4 | 1 | 1,971 | 155 |
| மன்னார் | 2,450 | 184 | 18 | 2 | 2,468 | 186 |
| வவுனியா | 2,387 | 160 | - | - | 2,387 | 160 |
| முல்லைத்தீவு | 1,092 | 102 | 15 | 2 | 1,107 | 104 |
| மட்டக்களப்பு | 19,015 | 1,229 | 277 | 27 | 19,292 | 1,256 |
| அம்பாறை | 8,127 | 552 | 88 | 7 | 8,215 | 560 |
| திருகோணமலை | 2,597 | 173 | 8 | 1 | 2,605 | 173 |
| புத்தளம் | 16,271 | 1,458 | 946 | 93 | 17,217 | 1,552 |
| அனுராதபுரம் | 9,607 | 733 | 152 | 11 | 9,759 | 744 |
| பொலன்னறுவை | 4,691 | 313 | 252 | 21 | 4,943 | 334 |
| பதுளை | 5,329 | 323 | 54 | 4 | 5,383 | 327 |
| மொனராகலை | 4,839 | 302 | 287 | 24 | 5,126 | 326 |
| இரத்தினபுரி | 8,576 | 664 | 1,380 | 132 | 9,956 | 797 |
| மொத்தம் | **91,320** | **6,681** | **3,573** | **336** | **94,893** | **7,017** |

அட்டவணை இலக்கம் 3.11 "அத்வேல" கடன் திட்டம்

### 3.8.5 புரிந்துணர்வு உடன்படிக்கைகள்

இந்த அமைச்சினால் இலங்கை அரசாங்கத்தினால் மற்றைய நாட்டுத் தலைவர்களுடன் கைச்சாத்திடப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் முன்னேற்றத்தை மீள்பார்வை செய்து ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்.

### 3.8.6 வருடாந்த அறிக்கைகளும் முன்னேற்ற அறிக்கைகளும்

முன்னேற்ற அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- இலங்கைப் பொது பயன்பாடுகள் ஆணைக் குழு - 2016 ஆண்டு
- இலங்கைத் தேசிய மனித வளங்கள் அபிவிருத்திச் சபை - 2016 ஆண்டு
- இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் - 2015 ஆண்டு

### 3.8.7. அமைச்சரவைப் பத்திரம்

இப்பிரிவிற்கு குறித்தொதுக்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக 18 அமைச்சரவைப் பத்திரங்கள் அமைச்சரவையின் அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காகச் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு 18 அமைச்சரவைப் பத்திரங்களிற்கும் அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

#### 3.8.8 பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழு

பொருளாதார அலுவல்கள் பிரிவு தொடர்கான பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழுவின் முடிவை எடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 3.8.9 அரச தரியார் துறைக் கூட்டாண்மைக் கருத்திட்டங்கள்

“அரச துறைக்குத் தேவையான கட்டிடங்களுக்கான தர மேம்படுத்தல்களுக்காக மூலதன வரவு செலவுத் திட்டத்தில் தங்கியிராது அரச தனியார் துறைக் கூட்டாண்மை (PPP) அடிப்படையில் தனியார் முதலீடுகளை பெற்றுக் கொள்ளுதல்” தொடர்பாக **MNPEA 07/2018** இலக்க சுற்றுநிருபம் வழங்கப்பட்டுள்ளது. அரச தரியார் துறைக் கூட்டாண்மைக் கருத்திட்டங்கள் தொடர்பாக அரச தனியார் துறைக் கூட்டாண்மைக்கான தேசிய முகவரம், தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் ஏனைய அமைச்சுக்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளுதல்.

### 3.8.10 பாலியல் சார்ந்த வன்முறை தொடர்பான செயற்பாட்டுத்திட்டம்.

பொருளாதார விவகாரங்களின் மீது விசேட கவனத்தை செலுத்தும் வகையில்பாலியல் சார்ந்த வன்முறை தடுப்புத்திட்டம் ஒன்றை துறைசார்ந்து உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.பாலியல் சார்ந்த வன்முறையினை விபரிக்கும் வகையில் தேசிய வேலைச்சட்டகத்தின் பொருளாதார அபிவிருத்தி திட்டமும் மற்றும் தேசிய செயற்பாட்டு திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. செயற்பாடுகள் தற்போது முன்மேற்றகரமாகக் காணப்படுகின்றது.

### 3.8.11 கூட்டங்களில் பங்குபற்றுதல்

நிர்வாகசபை கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள், கணக்காய்வு மற்றும் முகாமை கூட்டங்கள், கொள்வனவு கூட்டங்கள், தேசிய வழிப்படுத்தல் பொதுக்கூட்டங்கள், COPA மற்றும் COPE கூட்டங்களில் பொருளாதார விவகாரங்கள் பிரிவின் அலுவலர்கள் பங்குபற்றினார்கள்.

### 3.8.12 தேசிய மனிதவள மேம்பாடுச் சபை

**1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின்கீழ் இலங்கையின் மனித வள அபிவிருத்தி சபை நிறுவப்பட்டது. பல அமைச்சர்களுடன் ஒருங்கிணைந்திருந்தாலும், 2017 ஆம் ஆண்டில் அது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் வந்தது. அங்கிருந்து, சபை வடிவமைக்கப்பட்ட சட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் பொருள்களுக்கு இணங்க, தேவையான ஊழியர்களையும், கார்ப்பரேட் திட்டத்தையும் கவுன்சில் ஆட்சேபித்தது.**

**பார்வை "நம் தொழிலாளர் எதிர்கால தயார்" நமது சபை ஆண்டு 2018 போது பின்வரும் திட்டங்களை மேற்கொண்டன.**

- **இலங்கையில் திறமையான வெளிநாட்டு ஊழியர்களைக் கொண்டு வருதல் இது ஒரு சாத்தியமான விருப்பமா? கலந்துரையாடல் கருத்துக்களம்.**

**இந்த கலந்துரையாடல் மன்றம் இலங்கையின் சார்ட்டர்ட் அக்கவுண்ட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்ரீலங்கா மற்றும் சர்வதேச வர்த்தக சம்மேளனத்துடன் இலங்கையை 2 வது அக்டோபர் 2018 இல் நடாத்தியது. இந்த நிகழ்வில் 140 பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர்.**

- **பாடசாலைகளில் தொழில் வழிகாட்டலை பலப்படுத்துதல்**

**இத்திட்டத்தின் நோக்கங்கள்.**

1. தொழில் சார்ந்த புரிதலை வலுப்படுத்துதல்: வேலையின் தன்மை, அதன் பங்களிப்பு (பணம் செலுத்தப்பட்டதா, இல்லையா) இவற்றின் சாத்தியம் வாழ்நாள் முழுதும் முன்னெடுக்கப்படும்.: தொழில் உட்படுத்துவனவாக அதன் பங்களிப்பு, பொழுதுபோக்கு செயற்பாடுகள், கற்றுக்கொள்ளுதல் மற்றும் வேலை செய்தல்.

2. தொழில் ஆலோசனை திறன்களை மேம்படுத்துத.
3. தொழில் கல்வி மேம்படுத்த.
4. தொழில் தகவலை பராமரிக்க
5. தொழில் தொடர்பான அனுபவங்களை இணைக்க.
6. தொழில் மதிப்பீட்டை நடத்துவதற்கு.

முதல் நிகழ்ச்சி, ஜூன் 18 மற்றும் 19 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தில் உள்ள ஜயகொடி மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. இதில் 72 பேர் பங்கேற்றனர்.
இரண்டாவது நிகழ்ச்சி 2018 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி வன்சவல மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. இதில் 107 பேர் பங்கேற்றிருந்தனர்.
மூன்றாவது நிகழ்வு, கேகாலை, கெ.்.ரண்வல மகா வித்தியாலயத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- **தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில் ஊக்குவிப்பு திட்டம்**

1) தொழிற்சாலைகளில் / பயிற்சி நிறுவனங்களில் கிடைக்கும் வேலை வாய்ப்புகள், திறன் விருத்திப் பயிற்சி நெறிகள் பற்றி ஒரு விழிப்புணர்வு கருத்தரங்கினை தொழில் சந்தையுடன் ஒன்றிணைந்து ஒழுங்கமைத்தல். மற்றும் மாநில மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களில் கிடைக்கக்கூடிய திறன் திறன்களை விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் தொழில் நியமனம் நடத்துதல்.

2) தொழில் தேடுகின்ற இளைஞர்கள் மத்தியில் தொழில் தருனர்களிடம் உள்ள வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் பற்றி எடுத்துரைத்தல்.

3) தொழில்துறையில் வாய்ப்புகள் பற்றி இளைஞர்களுக்கு தெழிவுறுத்துதல்.

4) இளம் இளைஞர்களை தொழில் தருணர்களுடனான தொழில் உறவைப் பேணும் இணைப்பினை ஏற்படுத்துதல்.

தற்போது காலி, மாத்தளை, யாழ்ப்பாணம், மொனராகலை, புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்கள் அடங்கலாக 6 நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மொத்தம் 4435 இளைஞர்யுவதிகள் பங்கேற்றுள்ளனர், அதில் 854 பங்கேற்பாளர்கள் திறன்விருத்திப் பயிற்சியினைப் பெற தங்களை பயிற்சிக்கல்லூரிகளில் பதிவுசெய்துள்ளனர் அதுபோல், 774 பங்கேற்பாளர்கள் இந்தத்திட்டத்தின் ஊடாக வேலைகள் பெற்றுள்ளனர்.

- **பொதுத் துறையிலுள்ள போட்டித்தன்மையினை கட்டியெழுப்புதல்.-- 2018**

இந்த திட்டத்தின் நோக்கம் பொதுத்துறை முன்னேற்றத்தில் போட்டித்தன்மையினை உருவாக்குவதாகும். 2018 ஆம் ஆண்டு தே.ம.வ.அ.சபையானது பொதுவாக ஒன்பது பயிற்சி நெறிகளை பொதுப் பணித்துறையில் உள்ள முகாமைத்துவ மட்டத்தினருக்கும், பாடசாலை அதிபர்களுக்கும், பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகளுக்கும், மற்றும் தொழில் நுட்ப அதிகாரிக அதிகாரிகளுக்கும் நடாத்தியுள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்பாளர்களின் மொத்த எண்ணிக்கை 180 ஆகும்.

- **தே.ம.வ.அ.சபையின் விரிவுரை தொடர்**

பொது ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக எமது நிறுவனம் பல திறன்களை உயர்த்தும் விரிவுரைகளை ஒழுங்குபடுத்தியுள்ளது. அநேகமாக பயனாளிகள் பொதுத் துறையில் இருந்து பங்கேற்றனர் அவர்கள் நேர்மறையான பின்னூட்டல்களை வழங்கியுள்ளனர். விரிவுரையாளர்களின் தொடர்ச்சியான விரிவுரைகளினால் பொது சேவை அதிகாரிகளுக்கு, மிகச் சரியான தொழிலகத்தினை உருவாக்குதல், வேலைத்தள உற்பத்தித்திறனை அதிகரித்தல் வாடிக்கையாளர்கள் பாதுகாப்பு சேவை மற்றும் தொழிலாளர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான போன்றவை விரிவுரை வழங்கப்பட்டன. மொத்தம் 6 விரிவுரைகள் நடாத்தப்பட்டன அதில் பங்கேற்றவர்கள் 1291 ஆகும்.

- **வினைத்திறனான பாரபட்சமில்லத அரச சேவையில் உள்ளவர்களுக்கான பொதுவான போட்டித்திறன் திட்டம்**

.
இலங்கையின் தேசிய மனிதவள அபிவிருத்தி கவுன்சில் பொதுத்துறை நிறுவனங்களின் உள்ளவர்களின் போட்டித்தன்மையான திறன்களை மேம்படுத்துவதற்கான ஒரு கற்கையினை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் தேசிய மனிதவள அபிவிருத்தி கவுன்சில் நிபுணர்களின் குழுவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்காக இந்த அறிக்கையினை தயாரித்துள்ளது.

- **திண்மக் கழிவு மேலாண்மை திறனை மேம்படுத்துதல்.**

இந்த திட்டத்தின் கீழ், ஒரு பயிற்சிப் பட்டறை தொடர்பு பட்ட அதிகாரிகளுக்காக ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடாத்தப்பட்டுள்ளது.

- **புள்ளி விபர அறிக்கை**

என். ஏச். ஆர். டி. சி நிர்வாகமானது இலங்கையின் கல்வித் துறை தொடர்பாக சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடணிணைந்து தகவல் இடைவெளியை பூர்த்தி செய்ய வருடாந்த புள்ளி விபர அறிக்கையை வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அறிக்கை மிக விரைவில் வெளிடத் தயாராக உள்ளது.

- **சிறு முயற்சியாளர்களினை வலுவூட்டுவதற்கான பயிற்சிப் பட்டறை.**

கம்பஹா மாவட்டத்தில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவோர்க்கான பட்டறை நடைபெற்றுள்ளதுடன் அடுத்த பட்டறை ரத்னபுர மாவட்டத்தில் 26.10.2018 நடைபெற்றுள்ளது.

❖ **இலங்கையில் வெளிநாட்டு தொழிலாளர் குடிவரவு தொடர்பாக கலந்துரையாடல் மன்றம்**

2ம் திகதி அக்டோபர் 2018 ஆம் ஆண்டு NHRDC ஆனது இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவகத்துடன் இணைந்த வகையில் மற்றும் சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் ஒருங்கிணைப்புடன் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் 160 பேர் பங்குபற்றினர்.

- **இலங்கையில் திறமையான வெளிநாட்டு ஊழியர்களைக் கொண்டு வருதல் இது ஒரு சாத்தியமான விருப்பமா? கலந்துரையாடல் கருத்துக்களம்.**





- **பாடசாலைகளில் தொழில் வழிகாட்டலை பலப்படுத்துதல்**





- **ராகிய அருணா தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்**






- **பொதுத் துறையிலுள்ள போட்டித்தன்மையினை கட்டியெழுப்புதல் 2018**





- **விரிவுரை தொடர்**





- **திண்மக் கழிவு மேலாண்மை**





### 3.9 சிறப்பு அபிவிருத்தித்திட்டங்கள்

பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியன அபிவிருத்தி மற்றும் கருத்திட்டங்கள் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. உலக உணவுத்திட்டம் (WFP)
2. **USAID**(யு.எஸ்.எயிட்)நிதி உதவித்திட்டங்கள்
3. ஐரோப்பிய ஒன்றிய நிதி உதவித்திட்டங்கள்
4. விவசாயத்துறை நவீன மயமாக்கும் கருத்திட்டம்
5. காலநிலைத் திறன் (ஸ்மார்ட்) நீர்ப்பாசன விவசாய கருத்திட்டம்
6. "சனாதிபதியிடம் சொல்லுங்கள்" நிகழ்ச்சித்திட்டம்
7. தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டம்
8. குடும்ப சிக்கன அலகு

#### 3.9.1 உலக உணவுத்திட்டம் (WFP)

இலங்கையில் உலக உணவுத்திட்டம் (WFP) ஆனது அரசாங்கத்தின் அர்ப்பணிப்புடன் கூடிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மீதான செயற்பாடுகளுக்கு உதவுகின்றது. அரசாங்கத்திற்கும் உலக உணவுத்திட்டத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு கடிதத்திற்கமைய நாட்டின் தந்திரோபாய நிகழ்ச்சித்திட்டம் (CSP) இனை அமுல்படுத்துவதற்காக 2018 தொடக்கம் 2022 வரையான ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் குழுக்கள் வசிக்கும் வடமத்திய, வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்கள் உள்ளடங்கிய 13 மாவட்டங்களில் போசாக்குத் தேவைகள் மற்றும் உணவு வழங்கல் என்பவற்றில் கவனஞ் செலுத்துகின்றது. CSP இன் முக்கிய நான்கு தந்திரோபாய விளைவுகள் காணப்படுகின்றன.

1) நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவைக் கிடைக்கச் செய்தல்
2) வருடம் முழுவதும் உணவு பற்றாக்குறையான பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவைக் கிடைக்கச் செய்தல்
3) 2025ஆம் ஆண்டில் 5 வயதிற்கு குறைந்த பிள்ளைகள், இளம்பராயப் பெண் பிள்ளைகள், இனப்பெருக்க வயதிலுள்ள பெண்கள் ஆகியோரின் போசாக்கை மேம்படுத்தல்
4) காலமாற்ற நெருக்கடிகள், மற்றும் அதிர்வுகளில் இருந்து மக்களை தாங்கிக் கொள்ளக்கூடியதாக்கல்

## 3.9.1.1 CSP இன் கீழ் 2018 ல் அமுல்படுத்தப்பட்டுள்ள முக்கியமான செயற்பாடுகள்

### நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவைக் கிடைக்கச் செய்தல்

இந்த செயற்பாடு மிகவும் பாதிக்ககபடக்கூடிய சமூகங்கள், குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெண்கள், போதுமான போசாக்கான உணவுகளை நெருக்கடியின் போது பெற்றுக்கொள்ளுதலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அபாய நிலைமைகளின்போது அவசர உதவியின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு இலக்கு மற்றும் கண்காணிப்பு அமைப்புகளை செயற்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும். ஆரம்ப திட்டமிடல் செயன்முறையாக ரூ.1.4 மில்லியன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**பாடசாலை உணவுத்திட்டம் (SMP)**



பாடசாலை மாணவர்களின் வரவு நிலையையும் போசாக்கு நிலையையும் அதிகரிப்பது எனும் பிரதான இலக்குகளுடன், பாடசாலை உணவுத் திட்டம் வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 1-9 வரையான வகுப்புகளில் இருந்து 72,000 பாடசாலை மாணவர்களுக்கு தினமும் சத்தான உணவை வழங்குகின்றது. ஒவ்வொரு மாணவருக்கும் பருப்பு, காய்கறி எண்ணெய், தகரத்திலடைத்த மீன் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றை உள்ளடக்கியவாறு ஒவ்வொரு மாணவருக்கும் 125 கிராம் மதிய உணவு வழங்கப்படும். 2018 ஆம் ஆண்டில் 76,000 பாடசாலை மாணவர்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். 346 மெற்றிக் தொன் உணவு (பருப்பு, காய்கறி எண்ணெய் மற்றும் தகரத்திலடைத்த மீன்) ஆகியன விநியோகிக்கப்பட்டுள்ளன. ரூபா.18.7 மில்லியன் தினசரிச்சாப்பாட்டிற்காக காய்கறிகள் வழங்குவதற்காகச் செலவாகியுள்ளது. மேலதிகமாக, இந்த திட்டம் பாடசாலை செல்லும் குழந்தைகளுக்கு போசாக்கு உணர்திறன் உணவு வழங்குவதை உறுதிப்படுத்தலை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், இக்கருத்திட்டம் விசேடமாக சுகாதார அமைச்சு மற்றும் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை ஆகியவற்றின் தொழினுட்ப உதவியுடன் வலுவூட்டப்பட்ட உணவுகள் வழங்குவதற்கு ஆதரவளிக்கின்றது. இந்த நோக்கத்திற்காக (WFP) ரூ. 27.5 மில்லியன் நிதியை ஒதுக்கியுள்ளது.

### 3.9.2 அதிர்ச்சி/ இயற்கை பேரிடர் மற்றும் இடர் காலத்தின் போதான திடீர் அபாயங்கள் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் தன்மைகளை எதிர்த்து நிற்பதற்குரிய அல்லது மீளுதற்குரிய தன்மையைக் கட்டியெழுப்புதல்

இச்செயற்றிட்டம் ஊவா, வடக்கு, மத்திய, கிழக்கு மற்றும் மாகாணங்களில் காலநிலை அதிர்ச்சி பாதிப்புக்களை எதிர்நோக்கும் சமூகங்கள் மத்தியில் போசாக்குக் கூருணர்வு மற்றும் ஏற்படும் பாதிப்பைப் பாலின ரீதியாகத் தாங்கும் தன்மையை ஏற்படுத்தக்கூடியவாறான சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காணி புனரமைப்பு, நீர் சேகரிப்பு, வாழ்வாதாரத் திறன்களுக்கான பயிற்சி, உற்பத்திறனான சொத்து உருவாக்கம், பெறுமதி சேர் சங்கிலி விரிவாக்கம் மற்றும் சந்தை இணைப்புகள் போன்ற செயற் திட்டங்களை மையமாகக் கொண்டது.

இது அரசாங்கத்தின் இலக்குகளுக்கு உதவும் வகையிலும் தூரநோக்கு-2025 மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் திட்டமிடப்பட்ட வேலைகளுக்கு அமைவாகவும் பாதிக்கப்பட்ட கிராமப்புற பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும். பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உட்பட வசதிக்குறைவான குடும்பங்கள் இந்த திட்டத்தின் கீழ் பயனடைவர். இத்திட்டத்தின் கீழான பணப்பரிமாற்றமானது, உற்பத்திறனான சொத்து உருவாக்கம் மூலம் தங்கள் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளை அளவிடுவதற்கான செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

2017/2018 இல், 13 மாவட்டங்களில் (அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மாத்தளை, மொனராகலை, முல்லைத்தீவு, நுவரெலியா, பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் வவுனியா) அதிர்ச்சிக்கு

உள்ளான பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ரூ. 219 மில்லியன் ஆனது வழங்கியுதவியளிக்கப்பட்டு பின்வரும் முக்கிய நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.





- **விவசாய உற்பத்தி மேம்பாடு** 144.7 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட 57 சிறிய குளங்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு மூலம் அதிகரித்த நீர்ப்பாசன நீர் மற்றும் பரப்பளவிலான விவசாய அதிகரிப்புக் காரணமாக மேம்பட்டுள்ளது.

- **உலர் வலயங்களில் விவசாய மேம்பாடு மற்றும் வர்த்தக வீட்டுத் தோட்ட செய்கைக்கான திறன்மிகு நீர்ப்பயன்பாடு** -சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற நுண் நீர்ப்பாசனங்கள் என்பனவற்றை விதவைகள், போரினால் கணவனை இழந்த பெண்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளடங்கிய பாதிப்பிற்குள்ளனான பெண்கள் குழுவினரை இலக்காகக் கொண்டு வழங்குவதில் ஈடுபட்டுள்ளது.

- **வீட்டுமட்டத்திலான நீர் சேகரிப்பு மேம்பாடு** - வீட்டுத்தோட்டத்திற்கான மழைநீர் சேகரிப்பு அலகுகள் மற்றும் விவசாயக்கிணறுகளின் திருத்தத்தினூடாக ரூ. 52.4 மில்லியன் செலவில் மொத்தமாக 310 மழைநீர் சேகரிப்பு அலகுகள் வழங்கல் மற்றும் விவசாயக் கிணறுகளின் திருத்தத்தினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **வாழ்வாதாரத் திறன் பயிற்சியினூடாக தொழில்களை உருவாக்கல்** -பாதிப்படைந்த பெண்கள் குழுக்களுக்கும் வேலையில்லாத இளைஞர்களுக்குமானது. 245 இளைஞர், யுவதிகளுக்கு 30 பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு மூலம் 21.7 மில்லியன் ரூபாய்க்கும் மேற்பட்ட செலவிலான 13 தொழிற் பயிற்சிகூடங்களைப் புனரமைத்தல் செயற்றிட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 195 பேருக்கு 3.5 மில்லியன் செலவில் வணிகத் தொடக்க நிதி வழங்கப்படும்.

மேலும், இந்த திட்டம் WFP மற்றும் ILO ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து தயாரித்த “வட இலங்கையில் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் மூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்” எனும் திட்ட முன்மொழிவு ஐக்கிய நாடுகள் சமாதானத்தை உருவாக்குதல் நிதிக்கு CSP யினுடைய நெகிழ்திறன் கூறினுடைய பகுதியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மொத்த கருத்திட்ட நிதியாக 2,000,000 ஐக்கிய அமெரிக்க டொலர் காணப்படுகின்றது (ILO பங்களிப்பு-1,485,000 ஐக்கிய அமெரிக்க டொலர், WFP-பங்களிப்பு 515,000 ஐக்கிய அமெரிக்க டொலர்). இந்த திட்டத்தின் உள்ளூர் பங்குதாரராக முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பெண்கள் தொழில்முயற்சியாளர் கூட்டுறவு சங்கம் உள்ளது. இந்த திட்டம் ஆனது பொருளாதார வலுவூட்டல், சமூக ஒருங்கிணைப்பு, நெகிழ்வுத்தன்மை மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் பங்கெடுத்தல் போன்றவற்றை அடைவதற்காக, புதுக்குடியிருப்பு மகளிர் தொழில் முனைவோர் கூட்டுறவு சங்கத்தின் 350 முன்னாள் பெண் போராளிகள், பின்தங்கிய மற்றும் முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பெண் உறுப்பினர்களை இலக்காகக் கொண்டுள்ளது. இது முரண்பாட்டிற்குப் பின்னரான சூழலின் விளைவாக திறக்கப்பட்டுள்ள புதிய சந்தைகளுடன் கூட்டுறவு தொழில் முயற்சி பொறுப்புக்கள், வலையமைப்பு, மற்றும் வாய்ப்புக்கள் ஊடாக நிறைவேற்றப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| நிதி. இலக்கம் | 2018 ஒதுக்கீடு(ரூபா.மில்) | 2018.12.31 செலவு - மில் | முன்னேற்றம் (சதவீதம்) |
|---|---|---|---|
| 13 | 624.24 | 245.22 | 40 |
| 16 | 183.60 | 55.05 | 30 |
| 17 | 192.16 | 90.28 | 46 |
| **மொத்தம்** | **1,000.00** | **390.55** | **39** |

அட்டவணை இலக்கம் 3.12 நிதி முன்னேற்றம்

### 3.9.3 USAID நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

இலங்கை அரசாங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்பவற்றிற்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட உதவி உடன்படிக்கையின்படி USAID நிதியுதவி திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. அதன்படி, USAID நிதியுதவித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீது வரிவிலக்கு அளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. USAID நிதியுதவித் திட்டத்தின் கீழ் இரண்டு கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுவருகின்றன. அவையாவன புதிய பொருளாதார வளர்ச்சி திட்டம் (VEGA BIZ +) மற்றும் சனநாயக நல்லாட்சியையும் பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்தல் (SDGAP) ஆகும்.

### 3.9.4 புதிய பொருளாதார வளர்ச்சி திட்டம் (VEGA BIZ +)

இது வீட்டுத்தோட்டம், பாற்பொருட்கள், மீன்வளர்ப்பு, கையாளல் சேவைகள், ஆடைகள் மற்றும் கட்டுமானத் தொழில்கள் ஆகியவை உள்ளடங்கலான இலக்குசார் கைத்தொழில்களிலுள்ள முகாமைத்துவப்பயிற்சிகள் மற்றும் உற்பத்தி நடைமுறைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து பொது-தனியார் கூட்டணிக்கு துணைபோதலும், தொழினுட்ப உதவி, பயிற்சி, மற்றும் நன்கொடை வழுங்கலுமாகும். இக்கருத்திட்டங்கள் USAID மூலம் நேரடியாக அமுல்படுத்தப்படுகின்றன.

மொத்த USAID முதலீடு அமெரிக்க டொலர் 63.4 மில்லியன் ஆகும். இலக்கு மாகாணங்களாக வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா ஆகியவை உள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் 107 புதிய வேலைவாயப்புக்கள் மற்றும் வருமானம் ஈட்டும் வாய்ப்புகள் அடையப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் ரூபா. 32 மில்லியன் ஐ வரிவிலக்களிப்பிற்காக ஒதுக்கியுள்ளது.

### 3.9.5 சனநாயக நல்லாட்சி மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தல் (SDGAP)

உதவி உடன்படிக்கை 383-0126 இல் வழங்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ், சனநாயக நல்லாட்சி மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தல் கருத்திட்டம் (SDGAP) ஆனது பல முக்கிய நிறுவனங்கள் மற்றும் வரி அமைச்சுக்கள் ஊடாக அமுல்படுத்தப்படுகின்றது. பொதுமக்கள் பொறுப்புணர்வு அமைப்புகள் மற்றும் சனநாயக ஆட்சி ஆகியவற்றை அதிகரிப்பதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளித்தல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். இது 2016 அக்டோபரில் இருந்து செப்டம்பர் 2019 வரையான மூன்று வருட கருத்திட்டம் ஆகும்.

### 3.9.6 ஐரோப்பிய யூனியன் (EU) நிதியுதவி திட்டங்கள்

இந்தப்பிரிவானது, தேசிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுவரும் EU வினால் நிதியுதவியளிக்கப்பட்டுவரும் கருத்திட்டங்களை 05 சர்வதேச அரச சார்பற்ற நிதி நிறுவனங்கள் மூலம், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அவற்றின் உள்ளூராட்சி நிறுவனங்களின் உதவியுடன் ஒருங்கிணைக்கின்றது. இந்நிகழ்ச்சித்திட்டம் நலிவடைந்த மக்கள் உள்ள மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் ஊவா மாகாணத்திலுள்ள பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் ஒருங்கிணைந்த

கிராமிய அபிவிருத்திக்கு ஆதரவளிக்கின்றது. இந்நிகழ்ச்சித்திட்டம் கீழேயுள்ள ஐந்து கருத்திட்டங்களைக் கொண்டுள்ளது.

I. வணிக முயற்சி கருத்திட்டம்
II. நீர், சுகாதாரம், துப்புரவு ஆகிய கருத்திட்டங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத தோட்டங்கள் மற்றும் சூழவுள்ள சமூகங்களின் சுகாதாரம் மற்றும் போசாக்கை மேம்படுத்துதல்
III. மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தி
IV. சுற்றுச்சூழல் மற்றும் போசாக்கு அபிவிருத்தியில் சமூகங்களுக்கு உதவுதல்
V. மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் பால் சமத்துவம் உள்ளடங்கிய சமூக பொருளாதார அபிவிருத்தியை விரிவாக்கல்

தேசிய கருத்திட்ட வழிகாட்டும் குழுவின் குறிப்பு விதிமுறைகள் இறுதியாக்கப்பட்டுள்ளதுடன், கருத்திட்ட அமுலாக்கலில் காணப்படும் பிரச்சினைகளைக் கலந்துரையாடித் தீர்ப்பதற்காக இவ்வமைச்சு மாகாண மட்ட வழிகாட்டும் குழுக் கூட்டங்களில் பங்கெடுக்கின்றது.





### 3.9.7 விவசாயப் பிரிவு நவீனமயமாக்கல் கருத்திட்டம்

விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் நோக்கங்களாக, விவசாய உற்பத்தித்திறன், சந்தை வாய்ப்பை மேம்படுத்துதல் மற்றும் கருத்திட்டப் பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகள் மற்றும் விவசாய வணிகத்தின் மதிப்பு அதிகரிப்பு என்பன ஆகும். இக்கருத்திட்டம் பிரதான மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாவது பகுதியாக, வர்த்தக மற்றும் ஏற்றுமதி நோக்கிலான விவசாயத்தை முன்னெடுப்பதன் பொருட்டான விவசாய மதிப்புச் சங்கிலி அபிவிருத்தி, உயர் தரமான விவசாய உற்பத்தி மற்றும் மதிப்புச் சேர்த்தல் என்பவற்றிற்காக விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் விவசாய வணிகங்களிலிருந்து அந்நிய முதலீட்டைக் கவருதல், சலுகைகள், இணை உதவித்தொகை, தொழினுட்ப உதவி, வர்த்தக வங்கித்துறையினுடனான தொடர்புகள் மற்றும் பகுதிக் கடன் உத்தரவாதம் என்பவற்றினூடாக முதலீடுகளுக்கான நிதியைப் பெறும் வசதிகள் கொண்ட சாத்தியமான சூழலை ஏற்படுத்தல் என்பன உள்ளது. இரண்டாவது பகுதியாக, உற்பத்தித்திறன் விரிவாக்கம் மற்றும் பல்தரப்பட்ட செயல் விளக்கங்கள், போட்டித் தன்மையுள்ள மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய உணவுகளை உற்பத்தி செய்ய சிறியளவிலான விவசாயிகளுக்குத் துணைசெய்வதை இலக்காக்கல், சந்தை தேவைகளுக்கு ஏற்ற வகையில் அவர்களின் இயலுமையை மேம்படுத்தல், அதிகரித்த வர்த்தகமயமாக்கலை நோக்கி நகரச் செய்தல் என்பனவாகும். மூன்றாவது பகுதியாக, கருத்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றுடன் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் பங்களிக்கும் மாகாணங்களில் உள்ள கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளுக்கு உதவி செய்தல் என்பனவாகும்.

இந்த அமைச்சானது நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் பொருட்டும், சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் கொள்கைத் தீர்மானங்களைத் தயாரிப்பதன் பொருட்டும் மத்திய கருத்திட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்குத் தலைமை வகிக்கின்றது.

### 3.9.8 காலநிலைத் திறன் (SMART) நீர்ப்பாசன விவசாய கருத்திட்டம்

ஆறு மாகாணங்களிலுள்ள, பதினொரு நிர்வாக மாவட்டங்களில் (அம்பாந்தோட்டை, மொனராகலை, குருநாகல், புத்தளம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, அனுராதபுரம், பொலன்னறுவை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு) உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வெப்பப்பகுதிகளில் விவசாய உற்பத்தித்திறன் மற்றும் சிறு விவசாயிகளின் காலநிலையைத் தாங்கக்கூடிய இயலுமையை மேம்படுத்துதல் என்பனவாகும். காலநிலைத் திறன் நீரப்பாசன விவசாய கருத்திட்டத்தின் பகுதிகளாக (அ) விவசாய உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் (ஆ) விவசாயத்திற்கான நீர் (இ) கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் (ஈ) நிச்சயமற்ற அவசரநிலைக்கான பதிலளிக்கை என்பன உள்ளன.

இவ்வமைச்சானது காலநிலை சிறப்பு நீர்ப்பாசன விவசாய கருத்திட்டத்தை ஒருங்கிணைக்கிறது. கருத்திட்ட மதிப்பீடு, நிதியொப்பந்தம் மற்றும் கொள்முதல் திட்டம் ஆகியவை கருத்துக்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இக்கருத்திட்டத்திற்கான 140 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மொத்த நிதியில், IDA (சர்வதேச அபிவிருத்தி சங்கம்) 125 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், இலங்கை அரசாங்கம் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் மற்றும் பயனாளிகள் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் செலுத்தும்.

### 3.9.9 “சனாதிபதியிடம் சொல்லுங்கள்” நிகழ்ச்சித்திட்டம்

“சனாதிபதியிடம் சொல்லுங்கள்” நிகழ்ச்சித்திட்டத்திற்காக, சனாதிபதி செயலகத்தால் மேம்படுத்தப்பட்ட தரவுத் தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களால் பல்வேறு வகையான கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள், இலத்திரனியல் தரவுத் தளத்தினூடாகச் இந்த அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள், கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள் தொடர்பான விடயங்களை உடனடியாகச் செயற்படுத்த அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரையான முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| அமைச்சினால் பெறப்பட்ட மொத்த கோரிக்கைகள் அல்லது மனக்குறைகள் | 413 |
|---|---|
| தீர்க்கப்பட்ட கோரிக்கைகள் அல்லது நடவடிக்கைகள் | 378 |

அட்டவணை இலக்கம் 3.13“சனாதிபதியிடம் சொல்லுங்கள்” நிகழ்ச்சித்திட்டம்

### 3.9.10 தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத்திட்டம் (NHRAP)

இலங்கை முழுவதும் நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் ஆனது, தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத்திட்டம் (NHRAP) 2017 - 2021 ஐ ஒருங்கிணைக்கின்றது. NHRAP இன் கண்காணிப்பானது அமைச்சுக்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பிரிவு ஆனது NHRAP இன் அத்தியாயம் 07 இல் விளக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார, மற்றும் கலாச்சார உரிமைகள் இற்குப் பொறுப்பாக உள்ளது. இப்பிரிவினால் அத்தியாயம் 07 ன் முன்னேற்றமானது பங்கெடுக்கும் நிறுவனங்களுடன் மாதாந்த முன்னேற்ற மீளாய்வு நடாத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுகின்றது. முன்னேற்றம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| செயற்பாடுகள் | மொத்தம் | பூர்த்தியானவை | பகுதி -முன்னேற்ற நிலை | குறைந்த முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| குறுங்காலம் | 24 | 23 | 1 | |
| நடுத்தர காலம் | 89 | 24 | 61 | 4 |
| நீண்ட காலம் | 58 | 12 | 46 | |
| அனைத்து செயற்பாடுகள் | 171 | 59 | 108 | 4 |

**அட்டவணை இலக்கம் 3.14 மாதந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்**

## 3.9.11 குடும்ப சிக்கன அலகு (FBU)

குடும்ப சிக்கன அலகு ஆனது வாழ்க்கைச் செலவினத்தின் பாதிப்பை குறிப்பிடுவதற்கும், வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம் வழங்குவதற்கும் ஏதுவாக அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய தாபிக்கப்பட்டுள்ளது. இக்குடும்ப சிக்கன அலகின் பிரதான நோக்கம் ஆனது குடும்பங்களுக்கு மலிவு விலையில் அத்தியாவசிய பொருட்களின் ஒட்டுமொத்த விநியோகத்தை மீளாய்வு செய்தலாகும். வாராந்தம் உணவுப் பொருட்களின் விலைகளை கண்காணித்தல் மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு மற்றும் CCEM இற்கு அறிக்கையிடல், காலநிலை கணிப்பு மற்றும் உணவுற்பத்தி மேலான அதன் தாக்கம், மற்றும் லங்கா சதோசா, நெல் சந்தைப்படுத்தும் சபை, பிராந்திய பொருளாதார நிலையங்கள் மற்றும் தனியார் துறையுடன் இணைந்து உணவு விநியோக சங்கிலியை ஒருங்கிணைத்தல் என்பன பிரதான செயற்பாடுகளாகும்.

பின்வரும் செயற்பாடுகள் குடும்ப சிக்கன அலகு மூலம் நடத்தப்படுகின்றன.

### 3.9.11.1 பிற நாடுகளிலிருந்தான தேங்காய் இறக்குமதிக்கான தட்டுப்பாடும் திடீர் விலையுயர்வும் பற்றிய பிரச்சினை

2017 ஆம் ஆண்டிலிருந்து தேங்காய் இறக்குமதி பற்றிய நடைமுறை சிக்கல்கள், வாழ்க்கைச் செலவுக் குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு வந்துள்ளன. இதற்கமைய, எந்தவித பிரச்சினையும் இன்றி துரிதமாக தேங்காய் இறக்குமதி செய்யப்படுதலை உறுதிப்படுத்துவதற்காக இறக்குமதி செயல்முறைகளை கண்காணிக்கும் ஒரு குழுவானது நியமிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் உதவுவதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் கமத்தொழில் அமைச்சு ஆகியன பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், அவுஸ்ரேலியாவில் பின்பற்றப்படும் தொற்றொதுக்க பொறிமுறைகளை அறிந்துகொள்ளும்படியும் அதே பொறிமுறையை இலங்கையில் அமுல்படுத்துவதற்கு அவுஸ்ரேலியாவின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறியும்படியும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### 3.9.11.2 வரட்சி அல்லது வெள்ள நிவாரணத்திற்கான உணவுப் பொருட்களைத் தரையிறக்கிய பெறுமதியில் கிடைக்கச் செய்வதற்கான அரசாங்க நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்ட பல்பொருள் அங்காடிகளின் இழப்பீடுகளை ஈடுசெய்தல்

அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு, சீனி, நெத்தலி, வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் மீன் ஆகியவை கொண்ட ஒரு சிக்கனப் பொதியைத் தனியார் பல்பொருள் அங்காடி சங்கிலிகள், சதோசா மற்றும் பிற தனியார் கடைகளினூடாக விநியோகிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பங்கெடுத்த நிறுவனங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களின் கடை மையங்களுக்கு 50 சதவீத உள்நாட்டு வரி விலக்களிப்பு சலுகையை வழங்க அரசாங்கம் இணங்கியுள்ளது.

### 3.9.11.3 சீனாவில் இருந்தான தகரத்திலடைத்த மீன் இறக்குமதி பற்றிய பிரச்சினை (சட்டக்கருத்தின்படியான பின்பற்றல் நடவடிக்கை)

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தகரத்திலடைத்த மீனில் ஒட்டுண்ணிகளின் பிரசன்னத்தை இலங்கை சுங்கத் திணைக்களம் கண்டறிந்துள்ளது. இதற்கமைய, இப்பிரிவினால்

இப்பிரச்சினையானது உரிய தீர்வைக் காண்பதன் பொருட்டுக் கையாளப்பட்டுள்ளது. சட்டமா அதிபரிடமிருந்து சட்டரீதியான ஆலோசனையைக் கோரியதுடன், பெறப்பட்ட அபிப்பிராயங்கள் இலங்கை சுங்கத் திணைக்களம், இலங்கை கட்டளைகள் நிறுவனம் மற்றும் உணவு ஆலோசனைச் சபை ஆகியவற்றுடன் பகிரப்பட்டுள்ளன. இதற்கமைய, மேற்கூறிய நிறுவனங்கள் சட்ட அபிப்பிராயத்தை முன்னெடுப்பதற்கும், உரிய அறிக்கைகளை முன்னேற்றத்தைப் கண்காணிப்பதன் பொருட்டு இப்பிரிவிற்கு சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன.

**3.9.11.4 சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கான நிவாரணம் வழங்கல் தொடர்பான பிரச்சினை**

கடந்த நான்கு பருவங்களில் நெல் உற்பத்தியின் வீழ்ச்சி காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலையாளர்கள் தமது கடந்த கால கடன்களை செலுத்துவதில் நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இதன் காரணமாக வங்கிகளின் சட்ட நடவடிக்கைகளை எதிர்நோக்கியுள்ளனர். இந்நிலையில், ஆலை உரிமையாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தொடர்பான வங்கிகளுடன் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இக்கலந்துரையாடல்களின் விளைவாக, வங்கிகள் தற்காலிகமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதல் நிறுத்தி வைக்கப்படுவதற்கும் கடன்களை மீளச் செலுத்தும் பொருட்டு ஒவ்வொரு சூழ்நிலைக்கும் வழங்கப்படக்கூடிய சலுகைகள் பற்றியும் கருத்தில் எடுப்பதற்கு இணங்கியுள்ளன.

**3.9.11.5 பழங்கள் மற்றும் காய்கறிகளைச் களஞ்சியப்படுததுவதற்கான இலங்கையில் மிகப்பெரிய குளிரூட்டல் அறை களஞ்சிய நிர்மாணம் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை**

கௌரவ கலாநிதி. ஹர்ஷ டி சில்வா அவர்களினால் தெளிவுபடுத்தியதற்கமைவாக, தம்புள்ளையில் உள்ள பொருளாதார நிலையத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகளின் தரத்தை பராமரிக்க மிகப்பெரிய அளவிலான குளிர் சேமிப்பு (5000 மெ.தொன்) கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை ரூபா 300 மில்லியன் நிதிக்கொடை இந்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

## 3.10. தேசிய திட்டமிடல் திணைக்களம்

### 3.10.1 தூர நோக்கு

நாட்டின் அபிவிருத்தியில் ஆலோசகராகவும் வசதியளிப்பவராகவும் இருத்தல்.

### 3.10.2 நோக்கம்

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அணுகுமுறைகளைப் பின்பற்றிக் கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்த பட்ச தொழில் வல்லமையைப் பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களைத் தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.

### 3.10.3 பிரதான தொழிற்பாடுகள்

- தேசிய மற்றும் துறை ரீதியான கொள்கைகளை வகுப்பதில் உதவுதல்
- நடுத்தரகால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் : பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (பொ.மு.நி)
- கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்
- அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புகளை வழங்குதல்
- துறை ரீதியான அணுகுமுறைகளைக் கட்டியெழுப்புவதில் முன்னோடியாக விளங்குதல்
- கருத்திட்ட இருப்பு தயாரித்தல்
- திட்டமிடலுக்கான வழிகாட்டல்களைத் தயாரித்தல்
- பிராந்திய மட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினை முகாமைப்படுத்துவதற்குரிய தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
- அபிவிருத்திப் பங்காளர் குழுக்களை முகாமை செய்தல்
- விசேட பணிகளை நிறைவேற்றுதல்
- ஊழியர்களின் திறன் அபிவிருத்தி செயற்பாடுகள்
- பொது நிர்வாகம்

### 3.10.4 பொதுவான முன்னேற்றம்

- பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (பொ.மு.நி 2017-2020) இற்றைப் படுத்தப்படுகின்றது
- பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் (பொ.மு.நி 2017-2020) மொத்தமாக உள்ள 354 கருத்திட்டங்களில் 200 புதிய கருத்திட்டங்கள் அமுலாக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டன.
- "ஒருங்கிணைக்கப்பட்ட சிங்கராஜா கிராமிய அபிவிருத்தித் திட்டம் 2018 - 2020" தயாரிக்கப்பட்டுள்ளது
- 2018 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களமானது கீழ்வரும் உலக வங்கி நிதியளிக்கும் கருத்திட்டங்களிற்கு கருத்திட்டங்களைத் தயாரிப்பதற்கு வசதியளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆயத்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றது;
    - அடிப்படை சுகாதார கவனிப்பு முறைமைகள் வலுப்படுத்துதல் கருத்திட்டம்
    - காலநிலைத்திறனான நீர்ப்பாசன விவசாயக் கருத்திட்டம்
    - உள்ளூர் அபிவிருத்திக்கு உதவியளிக்கும் கருத்திட்டம்
    - நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தி கருத்திட்டம்

### 3.10.5 31.12.2018 இல் உள்ளவாறான துறை சார்ந்த முன்னேற்றம்

#### 3.10.5.1 விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை மற்றும் மீன்பிடித்துறை

- நுகர்வுக்கும் ஏற்றுமதிக்கானதுமான சுகாதாரமான உணவு உற்பத்தி செய்தலை சிறந்த விவசாயப் பயிற்சி முறைகளை விருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்ட (GAP) மூலோபாயம் மூலம் ஊக்குவிக்கப்படவேண்டும்.

- தரப்பட்ட நேரத்தில் நெல் / அரிசியின் பங்கு நிலைமையை அறிந்து கொள்ளக்கூடியதாக நெற்பயிருக்கான முகாமைத்துவ தகவல் முறைமையானது (MIS) நிறைவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும் கமத்தொழில் திணைக்களத்தின் "Crop- Look Net" online கணனி நிகழ்நிலை தகவல் தொழில்நுட்ப முறைமையுடன் MIS முறைமையை ஒன்றாக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

- விவசாயத்துறைக்கான அதிகப்படியான கொள்கை உருவாக்கத்திற்காக சகல தொடர்புடைய அக்கறை தாரர்களுடன் ஒன்றாகக் கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குவதில் சம்பந்தப்பட்டமை.

- திறைசேரியின் பிரதிச் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு அமைய தேயிலை மற்றும் இறப்பர் ஆகிய துறைகளினை அபிவிருத்தி செய்வதற்கான மூலோபாய அறிக்கை அமைச்சரவை உப குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டது.

- உலக உணவு விவசாய அமைப்பு (FAO) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) ஆகியவற்றின் அனுசரணையுடன் விவசாயத் துறைக்கான நிலையான அபிவிருத்தி இலக்குகளை உள்நாட்டுக்கு ஏற்றவகையில் மாற்றுவதற்கான ஆய்வினை தொடர்புடைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து நிறைவு செய்தமை.

- புதிய " மீன் வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்புக் கொள்கை" இன் உருவாக்கத்திற்காக சகல தொடர்புடைய அக்கறை தாரர்களுடன் ஒன்றாகக் கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குவதில் சம்பந்தப்பட்டமை.

- நடைமுறையிலிலுள்ள மற்றும் பிரதான கிராமிய அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் பிரதான கருத்திட்டங்கள் ஆகியவற்றிற்கான மூலதன வரவு செலவுத்திட்டத்திற்குரிய இட ஒதுக்கீடு ஆய்வு செய்யப்பட்டு வரைபடமாக்கப்பட்டது.

- சிறுகுளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் புனரமைத்தலை விரைவுபடுத்துவதற்கும் ஏற்கனவே உள்ள பெறுகை முறைத் தாமதங்களைத் தவிர்ப்பதற்குமான பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டது.

- வெள்ளக்குறைப்பு, அனர்த்தத் தடுப்பு மற்றும் நீர்வள அபிவிருத்தி (2019 – 2024) ஆகியவற்றிற்கான கருத்திட்ட இருப்புக்கள் கையேடு தயாரிக்கப்பட்டது.

### 3.10.5.2 கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் முதலீடு

- கொழும்பு – திருகோணமலைக்கான பொருளாதார நடை அபிவிருத்தி (Economic Corridor Development) தொடர்பான பயிற்சிப் பட்டறையொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து சகல பங்குதாரர்களுக்கும் நடாத்தப்பட்டதுடன் ஆய்வு விடயங்களுக்கு தொழில்நுட்ப உதவியும் இறுதி அறிக்கைக்கான வெளியீட்டிற்கு உயர்மட்ட அதிகாரிகளின் உதவியும் வழங்கப்பட்டது.
- “2025 தூரநோக்கு – வளமான நாடு” இனை அமுல்படுத்துவதற்கான வழிமுறைக்குரிய துறை சார் கொள்கை உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
- தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தினை தயாரித்தலில் உயிர்ப்புடன் செயற்பட்டதுடன் பங்கு பற்றியமை.

### 3.10.5.3 கல்வி மற்றும் உயர் கல்வி, திறன் அபிவிருத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், தொலைத் தொடர்புகள், தபாற் சேவைகள்

- மாவட்ட ரீதியிலான கிராமியக் கருத்திட்டங்களினைத் தயாரிப்பதற்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட்டன
- இலத்திரனியல் கிராம அலுவலர் கருத்திட்டத்திற்கான வினாக்கொத்து ஒன்றினைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்ப உள்ளீடுகளை தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டன
- ஆனி மாதம் 8 ஆம் திகதி திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான நான்காவது அமைச்சுக்களுக்கான வழிகாட்டல் குழு கூட்டம் நடாத்தப்பட்டது
- சினிமாத் துறையினை டிஜிட்டல் மயமாக்கி விநியோகிக்கும் குழுவிற்காக தொழில்நுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன
- ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து தென் ஆசிய உப பிராந்தியங்களிற்கான பொருளாதாரக் கூட்டு வர்த்தக வசதிகள் (SASEC) செயற்படு திட்டம் தயாரிக்கப்பட்டது

### 3.10.5.4 பேரண்ட பொருளாதார அபிவிருத்தித் துறை

- நாட்டின் கிராமியப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான விசேட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் 2018-2019 தயாரிக்கப்பட்டது
- மூலதனச் செலவீனத்திற்கான வரவு செலவுத்திட்ட வரையறைகளைத் தயாரித்தலும் எதிர்வு கூறலும் (2019 – 2021)

### 3.10.5.5 உட்கட்டமைப்பு வசதிகள் துறை

கீழ்வரும் போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய தேசிய கொள்கைகளை தயாரிப்பதில் பங்கு பற்றியதுடன் தொழில்நுட்ப உதவிகளும் வழங்கப்பட்டன.

- தேசிய வீதிக் கொள்கை
- தேசிய போக்குவரத்துக் கொள்கை
- தேசிய துறைமுக மற்றும் கடல்சார் கொள்கை

### 3.10.5.6 சமூகப் பாதுகாப்பு துறை

- “இலங்கையில் பிள்ளை பராமரிப்பு வசதிகளினை விரிவு படுத்தலினை ஆய்வு செய்யும் குழுவின் பரிந்துரைகள்” எனும் குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டது
- இலங்கையில் பால்நிலைப் பொறுப்பு வரவு செலவுத்திட்டத்திற்கான (GRB) கலந்துரையாடல்களில் பங்கு பற்றியமை
- இலங்கை அரசிற்கும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் இடையிலான 2018-2020 காலப்பகுதிக்கான நாட்டின் மூலோபாயத்திட்டத்திற்குரிய புரிந்துணர்வுக் கடிதத்திற்கான (LOU) அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

#### 3.10.5.7 சுகாதாரம் துறை

- தேசிய திட்டமிடல் திணைக்களமானது “இலங்கையின் போசாக்கிற்கான அரசாங்கத்தின் செலவினது மீள்பார்வை” என்பதன் செயற்படு குழுவிற்கு அரசாங்கத்தின் ஒருங்கிணைக்கும் பகுதியாகச் செயற்பட்டது. தேசிய திட்டமிடல் திணைக்களமானது இவ் மீளாய்வு நோக்கத்திற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் கூட்டம் ஒன்றினை பல அக்கறைதாரர்களுடன் 5 ஆம் திகதி ஐப்பசி மாதம் 2018 ஆம் ஆண்டு மிலோதாவில் ஒழுங்கு படுத்தியது.
- சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கு அடிப்படைச் சுகாதார கவனிப்புக் கொள்கையினை உருவாக்குவதற்குரிய உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

### 3.10.6 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் சகல தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு சம்பந்தமான முகாமைப்படுத்துவதற்குரிய தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டது. சகல தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காகவும் 290 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன (பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 10 மில்லியன்). 2018 புரட்டாதி 30 ஆம் திகதியில் ரூபா278,770,881 பெறுமதியான 1806 கருத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான அனுமதி இத்திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

#### 3.10.7 நிர்வாகம்

#### 3.10.7.1 ஆளணி விபரம்

31.12.2018 இல் உள்ளவாறான ஆளணி விபரம்

| சேவை மட்டம் | 31.12.2018 இல் உள்ளவாறான அனுமதிக்கப்பட்ட ஆளணி | 31.12.2018 இல் உள்ளவாறான சேவையிலுள்ள ஆளணி | 31.12.2018 இல் உள்ளவாறான வெற்றிடம் | 31.12.2018 இல் உள்ளவாறான மிகை ஆளணி |
|---|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 59 | 47 | 12 | - |
| மூன்றாம் மட்டம் | 02 | - | 02 | - |
| இரண்டாம் மட்டம் | 27 | 13 | 14 | - |
| ஆரம்ப மட்டம் | 29 | 25 | 04 | - |

அட்டவணை இலக்கம் 3.15 : 31.12.2018 இல் உள்ளவாறான ஆளணி விபரம்

**3.10.7.2 31.12.2018 இல் உள்ளவாறான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்**




வுரைபட இலக்கம் 3.7 : 31.12.2018 இல் உள்ளவாறான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

| துறை | 31.12.2018 இல் கருத்திட்ட மதிப்பீடு | | 31.12.2018 இல் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் | |
|---|---|---|---|---|
| | கிடைக்கப் பெற்ற கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | கிடைக்கப்பெற்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களின் எண்ணிக்கை |
| விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை மற்றும் மீன்பிடி | 65 | 65 | 36 | 36 |
| கைத்தொழில்கள் மற்றும் வர்த்தகம், மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை சுற்றுலாத் துறை, சர்வதேச வர்த்தகம், மற்றும் தொழிலாளர் | 178 | 178 | 12 | 12 |
| வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து | 29 | 28 | 11 | 11 |
| வீடமைப்பு, நகர அபிவிருத்தி ,நீர் விநியோகம், சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் | 390 | 313 | 26 | 26 |
| பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி | 45 | 45 | 01 | 01 |
| சுகாதாரம், சுதேசவைத்தியம், மதங்கள் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் விளையாட்டுக்கள் | 90 | 64 | 06 | 06 |
| கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி தகவல் தொழில்நுட்பம் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் | 79 | 79 | 14 | 14 |
| பிராந்திய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு | 84 | 84 | 21 | 21 |
| பொது முகாமைத்துவம் | 98 | 83 | 11 | 11 |
| மொத்தம் | 1058 | 939 | 138 | 138 |

அட்டவணை இலக்கம் 3.16 கருத்திட்ட மதிப்பீடு மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கான அவதானிப்புக்கள் சமர்ப்பித்தல் ஆகியவற்றின் முன்னேற்றம்

### 3.10.7.3 நிதிச் செயலாற்றுகை – 2018

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதி அறிக்கைகளின் படி, கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மொத்தச் செலவுகள், நடைமுறை மற்றும் மூலதனச் செலவுகள் ஆகியன சாராம்சப்படுத்திக் கீழே தரப்பட்டுள்ளன.

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | உப கருத்திட்டம் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த ஒதுக்கீடு (ரூபா.) | உண்மையான செலவு (ரூபா.) | செலவின் சதவீதம் (%) | மொத்த ஒதுக்கீடு (ரூபா.) | உண்மையான செலவு (ரூபா.) | செலவின் சதவீதம் (%) |
| | | | | | | | |
| நடைமுறை | | 85,222,000 | 82,820,601 | 97.18 | 97,000,000 | 88,462,086 | 91.20 |
| மூலதனம் | | 10,223,000 | 6,273,910 | 61.37 | 12,000,000 | 6,523,012 | 54.36 |
| உப மொத்தம் | | 95,445,000 | 89,094,511 | 93.35 | 109,000,000 | 94,985,098 | 87.14 |
| மூலதனம் | 17 | | | | | | |
| (PPPF) வெளிநாட்டுக்கடன் (12)<br>(PPPF) உள்ளூர் நிதி (17) | | - | - | - | 100,000,000<br>2,000,000 | 25,713,327<br>1,375,948 | 25.71<br>68.80 |
| உப மொத்தம் | | | | | 102,000,000 | 27,089,275 | 26.56 |
| | | | | | | | |
| மொத்தம் | | 95,445,000 | 89,094,511 | 93.35 | 211,000,000 | 122,074,374 | 57.86 |

அட்டவணை இலக்கம் 3.17 நிதிச் செயலாற்றுகை – 2018

# அத்தியாயம் 4
# மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, மற்றும் வடமாகாண அபிவிருத்தி பிரிவினது செயலாற்றுகை

## 4.1 சுருக்கமாக மீள்குடியேற்ற செயற்திறன்

கடந்த மூன்று தசாப்த காலமாக நாட்டில் நிலவிய மோதல் நிலைவரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, விடுவிக்கப்பட்ட மக்களை மீள்க்குடியேற்றும் நடவடிக்கைகள் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பமாயின. இதற்கு மேலதிகமாக, சுமார் 20,000 பேருக்கு யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த நலன்புரி நிலையங்களில் இருப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டது. இவ்வேளை அளவில், இடம்பெயர்ந்த மக்களின் மொத்த எண்ணிக்கை 83,000 அளவிலானதாகக் காணப்பட்டது. இந்த 83,000 அளவிலான குடும்பங்களின் மனிதாபிமானத் தேவைகளையும் ஏனைய விடயங்களையும் இந்திய அரசாங்கம், ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள் மற்றும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து நிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. அதேபோல் கூரைத்தகடுகள், சீமெந்து, விவசாய உபகரணங்கள், சமையலறை உபகரணங்கள் என்பவற்றை இந்திய அரசாங்கம் வழங்கி உதவியது. தற்காலிக குடிசைகள், குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகள், சிறுவர் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் என்பவற்றுக்கு அவசியமான உதவிகளை ஐக்கிய நாடுகள் முகவராண்மைகளும் அரச சார்பற்ற அமைப்புகளும் நலன்புரி நிலையங்களுக்கு வழங்கின. மீள்குடியேற்ற அமைச்சினால் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளின் பண்புத்தரம் சர்வதேச தரங்களுக்கு ஏற்றதாக இருந்தது. 2009 ஆம் ஆண்டில் இலங்கைக்கு விஜயம்செய்த ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் திரு. பான்கி மூன் அவர்களும் இதனை உறுதிப்படுத்தியிருந்தார். உணவு, துப்புரவேற்பாட்டு வசதிகள், கல்வி, மருத்துவ வசதிகள், தொடர்பாடல் வசதிகள், வங்கி வசதிகள் உள்ளிட்ட ஏனைய அனைத்து மனிதாபிமான உதவிகளும் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு கௌரவமாகவும் கண்ணியமான முறையிலும் அவர்கள் கவனிக்கப்பட்டனர். 04 வருடங்கள் போன்ற ஒரு குறுகிய காலத்தில் மீள்குடியேற்ற அமைச்சு 222,313 குடும்பங்களை மீள்குடியேற்றியதைத் தொடர்ந்து 2012 செப்டம்பர் மாதம் 25 ஆந் திகதி மெனிக்பாம் நலன்புரி முகாமை மூடிவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2018 டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியளவில் வடமாகாணத்தில் 167,371 குடும்பங்களைச் சேர்ந்த 546,100 ஆட்களையும் கிழக்கு மாகாணத்தில் 91,275 குடும்பங்களைச் சேர்ந்த 337,085 ஆட்களையும் மீள்குடியேற்றுவதற்கு அமைச்சு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தது. முழுமையானதாக நோக்கின், இவ்வமைச்சினால் 2018 டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அளவில் 258,412 குடும்பங்களைச் சேர்ந்த 883,185 ஆட்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றப்- பட்டுள்ளனர்.

30 வருட கால உள்நாட்டு மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் சுமார் 97மூ சதவீதமானவர்களை மிகக் குறுகிய ஒரு காலப்பகுதியில் (03 வருடங்களில்) மீள்குடியேற்ற முடிந்தமை இலங்கை அரசாங்கத்தின் ஒரு சிறப்பான சாதனை அடைவாகும். அதேபோல், இன்று இலங்கையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாத்திரமே நலன்புரி நிலையங்கள் காணப்படுகின்றன. 2018 டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அளவில் 10,509 குடும்பங்களைச் சேர்ந்த 35,926 ஆட்களை மாத்திரமே இன்னும் மீள்குடியேற்ற வேண்டியுள்ளது.



### 4.1.1 மீள்குடியேற்றம் - வடக்கு, கிழக்கு மாகாணங்கள்

2018 செப்டம்பர் மாதம் 31 ஆந் திகதியளவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த 258,412 குடும்பங்களைச் சேர்ந்த 883,185 ஆட்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

| தொ. இல. | மாகாணம் | மீள்குடியேற்றம் | |
|---|---|---|---|
| | | குடும்பங்கள் | ஆட்கள் |
| 01 | கிழக்கு | 91,275 | 337,085 |
| 02 | வடக்கு | 167,137 | 546,100 |
| | மொத்தம் | **258,412** | **883,185** |

**அட்டவணை இல. 4.1: வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றம் (2018 டிசெம்பர் 31 அன்றுள்ளவாறு)**

### 4.1.2 வடமாகாணம்

வடமாகாணத்திற்கு உட்பட்ட மாவட்டங்களில் 2018 டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களும் ஆட்களும் பற்றிய விபரம் பின்வரும் உருவரைகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

கீழ்க்காணும் உருவரை 4.1 மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட 34,391 குடும்பங்களைச் சேர்ந்த 109,678 ஆட்கள் பற்றிய தரவுகள் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக காட்டப்பட்டுள்ளது.




**உருவரை இல. 4.1: மீள்குடியேற்றம் - யாழ்ப்பாணம் மாவட்டம் (2018 டிசெம்பர் 31)**

கீழ்க்காணும் உருவரை 4.2 மூலம் மன்னார் மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட 27,668 குடும்பங்களைச் சேர்ந்த 100,126 ஆட்கள் பற்றிய தரவுகள் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக காட்டப்பட்டுள்ளது.




**உருவரை இல. 4.2: மீள்குடியேற்றம் - மன்னார் மாவட்டம் (2018 டிசெம்பர் 31)**

கீழ்க்காணும் உருவரை 4.3 மூலம் வவுனியா மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட 15,397 குடும்பங்களைச் சேர்ந்த 55,203 ஆட்கள் பற்றிய தரவுகள் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக காட்டப்பட்டுள்ளது.




**உருவரை இல. 4.3: மீள்குடியேற்றம் - வவுனியா மாவட்டம் (2018 டிசெம்பர் 31)**

கீழ்க்காணும் உருவரை 4.4 மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட 44,120 குடும்பங்களைச் சேர்ந்த 136,623 ஆட்கள் பற்றிய தரவுகள் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக காட்டப்பட்டுள்ளது.




உருவரை இல. 4.4: மீள்குடியேற்றம் - முல்லைத்தீவு மாவட்டம் (2018 டிசெம்பர் 31)

கீழ்க்காணும் உருவரை 4.5 மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட 45,561 குடும்பங்களைச் சேர்ந்த 144,470 ஆட்கள் பற்றிய தரவுகள் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக காட்டப்பட்டுள்ளது.




உருவரை இல. 4.5: மீள்குடியேற்றம் - கிளிநொச்சி மாவட்டம் (2018 செப்டம்பர் 31)

### 4.1.3 கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த 37,096 குடும்பங்களைச் சேர்ந்த 127,226 ஆட்களும், அம்பாறை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த 18,310 குடும்பங்களைச் சேர்ந்த 71,286 ஆட்களும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த 35,869 குடும்பங்களைச் சேர்ந்த 138,573 ஆட்களும் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதி அளவில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் 2018 டிசெம்பர் 30 ஆந் திகதியளவில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களும் நபர்களும் பற்றிய தரவுகளை கீழ்க்காணும் உருவரைகளில் காணலாம்.

கீழ்க்காணும் உருவரை 4.6 மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட 37,096 குடும்பங்களைச் சேர்ந்த 127,226 ஆட்கள் பற்றிய தரவுகள் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக காட்டப்பட்டுள்ளது.




**உருவரை இல. 4.6: மீள்குடியேற்றம் - மட்டக்களப்பு மாவட்டம் (2018 டிசெம்பர் 31)**

கீழ்க்காணும் உருவரை 4.7 மூலம் திருகோணமலை மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட 35,869 குடும்பங்களைச் சேர்ந்த 138,573 ஆட்கள் பற்றிய தரவுகள் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக காட்டப்பட்டுள்ளது.




**உருவரை இல. 4.7: மீள்குடியேற்றம் - திருகோணமலை மாவட்டம் (2018 டிசெம்பர் 31)**

கீழ்க்காணும் உருவரை 4.8 மூலம் அம்பாறை மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட 18,310 குடும்பங்களைச் சேர்ந்த 71,286 ஆட்கள் பற்றிய தரவுகள் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக காட்டப்பட்டுள்ளது.




**உருவரை இல. 4.8: மீள்குடியேற்றம் - அம்பாறை மாவட்டம் (2018 டிசெம்பர் 31)**

### 4.1.4 மீள்குடியேற்ற உத்தேசிக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களும் நபர்களும்

2018 டிசெம்பர் 31 ஆந் திகதி அளவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட செயலகங்களினால் அறிக்கையிடப்பட்டுள்ள தரவுகளின்படி இன்னும் தமது உறவினர், நண்பர்களுடனும் நலன்புரி நிலையங்களிலும் தங்கி இருக்கின்ற 10,509 குடும்பங்களைச் சேர்ந்த 35,926 ஆட்கள் மீள்குடியேறும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். மாவட்டவாரியாக மீள்குடியேறும் எதிர்பார்ப்புடன் இருக்கின்ற குடும்பங்கள் பற்றிய விபரங்களை உருவரை இல.1.2.1 இல் காணலாம்.

| மாகாணம் | மாவட்டம் | இடம் | இடம் | | | குடும்ப-ங்கள் | நபர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம் | | |
| **வடக்கு** | யாழ்ப்பாணம் | நலன்புரி நிலைங்களில் | -- | 627 | -- | **627** | **2216** |
| | | உறவினர், நண்பர்களுடன் | -- | 7"523 | 1"465 | 8"988 | 31"101 |
| | **மொத்தம்** | | -- | **8,150** | **1,465** | **9,615** | **33,317** |
| | கிளிநொச்சி | உறவினர், நண்பர்களுடன் | - | 440 | -- | 440 | 1367 |
| | மன்னார் | -மேற்படி- | - | -- | - | - | - |
| | வவுனியா | -மேற்படி- | -- | 15 | -- | 15 | 44 |
| | முல்லைத்தீவு | -மேற்படி- | -- | 68 | -- | 68 | 188 |
| **வடமாகாண முழுமொத்தம் - (1)** | | | - | **8,673** | **1,465** | **10,138** | **34,916** |
| **கிழக்கு** | திருகோணமலை | நலன்புரி நிலைங்களில் | -- | -- | -- | - | - |
| | | உறவினர், நண்பர்களுடன் | 17 | 46 | 177 | 240 | 557 |
| | மட்டக்களப்பு | உறவினர், நண்பர்களுடன் | 36 | 77 | 18 | 131 | 453 |
| | அம்பாறை | | -- | -- | -- | 0 | 0 |
| **கிழக்கு மாகாண முழுமொத்தம் - (2)** | | | 53 | **123** | **195** | **371** | **1010** |
| **முழுமொத்தம் (1,2)** | | | 53 | **8,796** | **1,660** | **10,556** | **35,926** |

**அட்டவணை இல. 4.2: மீள்குடியேற்ற உத்தேசிக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களும் நபர்களும்**

### 4.1.5 இந்தியாவில் தங்கியிருக்கின்ற இலங்கை வம்சாவளி அகதிகள் மீண்டும் நாடு திரும்பல் (2018.10.31 அன்றுள்ளவாறு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல் நிலைவரம் காரணமாக இலங்கையி- லிருந்து வெளியேறி இந்தியா சென்ற அகதிகள் தமது சொந்த விருப்புடன் மீள்குடியேற்ற அமைச்சின் தலையீட்டின் பேரில் மீண்டும் இலங்கை திரும்பி வருகின்றனர். 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதி அளவில் 3,001 அகதிக் குடும்பங்களைச் சேர்ந்த 7,818 ஆட்கள் மீண்டும் இலங்கை திரும்பியுள்ளனர்.

அவர்கள் மீண்டும் நாடு திரும்பும்போது கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வசதிகளை வழங்குவதற்கும் அவசியமான வழிகாட்டல்களை மேற்கொள்- வதற்கும் மீள்குடியேற்ற அமைச்சின் உத்தியோகத்தர்களும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகளும் தயார்நிலையில் இருக்கின்றனர்.

இவ்வாறு தமது சொந்த விருப்புடன் நாடு திரும்பும் இலங்கை வம்சாவளி அகதிகளுக்கான கடவுச்சீட்டு, சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயத்தின் ஒத்தாசையுடன் இலவசமாக வழங்கப்படுவதுடன், விமான பயணச் சீட்டையும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, மீள்குடியேறுவதற்காக 18 வயதுக்கு மேற்பட்ட ஆளொருவருக்கு ரூ.10,000.00 தொகையும் 18 வயதுக்குக் குறைந்த ஆளொவருக்கு ரூ.7,500.00 தொகையும் போக்குவரத்துச் செலவுகளுக்கு ரூ.2,500.00 தொகையும் மீள்குடியேறும்போது குடும்பம் ஒன்றுக்கு ரூ.10,000.00 தொகையும் குடும்பத்தில் ஆளொருவர் வருகைதரும் பட்சத்தில் ரூ.5,000.00 தொகையும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் (UNHCR) அனுசரணை-ள யுடன் வழங்கப்படுகிறது.
அதேபோல், அவ்வாறு வருகைதரும் குடும்பமொன்றுக்கு உணவுப் பங்கீடாக ரூ.5,000.00 தொகையும் இவ்வமைச்சினால் வழங்கப்படுகிறது.

இவ்வாறு நாடு திரும்பும் அகதிகளை வரவேற்று அவர்களை கௌரவமான முறையில் மீள்- குடியேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

| தொ. இல. | ஆண்டு | குடும்பங்கள் | நபர்கள் |
|---|---|---|---|
| 01 | 2011 | 557 | 1728 |
| 02 | 2012 | 453 | 1291 |
| 03 | 2013 | 273 | 718 |
| 04 | 2014 | 137 | 338 |
| 05 | 2015 | 208 | 453 |
| 06 | 2016 | 326 | 852 |
| 07 | 2017 | 487 | 1170 |
| 08 | 2018 | 560 | 1268 |
| | **மொத்தம்** | 3இ001 | 7இ818 |

**அட்டவணை இல. 4.3: இந்தியாவில் தங்கியிருக்கின்ற இலங்கை வம்சாவளி அகதிகள் வருகை (2018.10.30அன்றுள்ளவாறு)**

### 4.1.6 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - 2018

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 03 தசாப்தங்களுக்கும் கூடுதலான காரணமாக இடம்பெற்ற உள்ளக மோதல்கள் காரணமாக தமது சொந்தக் கிராமங்களை விட்டகன்று இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்குரிய 2018 ஆம் ஆண்டிற்கு சிபார்சுசெய்யப்பட்ட அபிவிருத்திக் கருத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் மீள்குடி- யேறும் எதிர்பார்ப்புடன் நிவாரணக் கிராமங்களிலும் தமது உறவினர் நண்பர்களின் வீடுகளிலும் தங்கி வாழ்கின்ற மக்களுக்கு அவசியமான நலன்புரிச் சேவைகளை வழங்குவதற்கும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சிற்கு 2018 ஆம் ஆண்டில் 9,000 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு கிடைத்தது.

இங்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் குறித்த கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது இடம்-பெயர்ந்த குடும்பங்களின் தேவைகளை கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் அடையாளம் கண்டு அத்தகைய தகவல்களை அமைச்சினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் அவசியமான பயனாளிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இங்கு மோதல் நிலைவரத்தின்கீழ் வலது குறைந்தவர்கள் இருக்கின்ற குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், குறைந்த வருமானம்பெறும் குடும்பங்கள், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப் பட்டவர்களைக் கொண்ட குடும்பங்கள், நலன்புரி நிலையங்களில் தங்கி இருக்கின்ற குடும்பங்கள், உறவினர் நண்பர்களின் வீடுகளில் தங்கி இருக்கின்ற குடும்பங்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அளவு- கோல்களின் அடிப்படையில் பயனாளிகளின் தெரிவு மாவட்ட செயலாளர்களின் நேரடித் தலையீட்டுடன் கீழ்மட்டத்திலிருந்து இடம்- பெறுகிறது. அவ்வாறு பெறப்பட்ட தகவல்களை அமைச்சின் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் இடம்பெறும் கள அவதானிப்புகள் மூலமும் உறுதிசெய்துகொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், குறித்த கருத்திட்டங்களின் அமுலாக்கம் தொடர்பில் அமைச்சின் உத்தியோகத்தர்களினாலும் சில கட்டங்களில் மேற்பார்வைசெய்யப்படுவதுடன், அடையாளம் காணப்படும் பிரச்சினைகள் அல்லது தடங்கல்கள் ஏதும் இருப்பின், அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



| தொ. இல. | செயற்பாடுகள் | அலகுகள் | நிதிஒதுக்கீடு (ரூ.மி.) | செலவீனம் |
|---|---|---|---|---|
| 01 | சிறிய நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டம் | 59 | 100.00 | 71.72 |
| 02 | வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 1763 | 150.00 | 145.09 |
| 03 | கல்வித்துறை அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 6 | 11.00 | 11.00 |
| 04 | துப்புரவேற்பாட்டு வசதியளிப்புக் கருத்திட்டம் | 5056 | 300.00 | 298.33 |
| 05 | குடிநீர் வழங்கல் கருத்திட்டம் | 2708 | 75.00 | 65.96 |
| 06 | வீடுகளுக்கான மின்னிணைப்பு வழங்கல் கருத்திட்டம் | 3304 | 64.00 | 62.01 |
| 07 | வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (யுத்தம் காரணமாக விதவைகளானவர்களுக்கானது) | 1811 | 178.70 | 173.20 |
| 08 | துப்புரவேற்பாட்டு வசதியளிப்புக் கருத்திட்டம் (யுத்தம் காரணமாக விதவைகளானவர்களுக்கானது) | 637 | 48.05 | 46.73 |
| 09 | குடிநீர் கருத்திட்டம் (யுத்தம் காரணமாக விதவைகளானவர்களுக்கானது) | 674 | 22.00 | 20.57 |
| 10 | இரணைதீவில் மீள்குடியேற்றல் | 03 | 0.90 | 0.90 |
| 11 | உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட சிற்றளவு கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கும் கருத்திட்டம் | | 1000.00 | 430.46 |
| 12 | கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கடன்படுநிலையிலுள்ள குடும்பங்களை கடன் சுமையிலிருந்து விடுவிப்பதற்கு உதவி வழங்கும் கருத்திட்டம் | | 1000.00 | 542.5 |
| 13 | வடகடல் (நோத்சீ) கருத்திட்ட நடவடிக்கைகளுக்காக | | 3.50 | 3.5 |
| 14 | நிலக்கண்ணிவெடி அகற்றல் கருத்திட்டங்கள் | | 26.00 | 26.00 |
| 15 | பலாலி மீள்குடியேற்ற விசேட கருத்திட்டம் | | 42.00 | 51.44 |
| 16 | இந்து வழிபாட்டுத்தலங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் | | 31.50 | 29.75 |
| 17 | மான்குளம் விசேட கருத்திட்டம் | 01 | 5.00 | 5.00 |
| | விசேட மீள்குடியேற்ற திட்டங்கள் | | 71.88 | 70.9 |
| மொத்தம் | | | **3057.65** | **2055.6** |

**அட்டவணை இல. 4.4 (அ)**
**2018 ஆம் ஆண்டின் செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள்**

## 4.2 புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம்

### 4.2.1 தொலை நோக்கு.

தேசிய நல்லிணக்கமும் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த, சட்டத்தை மதிக்கின்ற ஒரு சமூகத்தை நோக்கி

### 4.2.2 நோக்கம்.

வழிதவறிச் சென்ற பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அலகுகளை புனர்வாழ்வுச் செயன்முறை மூலமும் பல்வேறு சிகிச்சை முறைகள் மூலமும் அவர்களின் உரிமைகளையும் கலாசார பெறுமானங்களையும் பேணி பொருளாதார அபிவிருத்

### 4.2.3. அறிமுகம்.

மூன்று தசாப்த கால யுத்தத்தின் பின்னர் அரசிடம் சரணடைந்த மற்றும் நீதிமன்ற உத்தரவின் மூலம் இணைக்கப்படும் வழிதவறிச்சென்ற போராளிகள் மற்றும் அபாயகர ஔடதங்கள் தியை பயனுறுதியாக மாற்றுவதன் மூலம் நற்பிரஜைகளாக சமூகத்தோடிணைத்தல்.

தொடர்பான குற்றவாளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்திற்கு பயனுள்ள நபராக சமூகத்துடன் இணைக்கும் செயற்பாடு இக்காரியாலயத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. வழிதவறிச்சென்ற போராளிகள் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையம் - வவுனியா மற்றும் அபாயகர ஔடதங்கள் தொடர்பான குற்றவாளிகள் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - கந்தகாடு மற்றும் மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வியறிவு பயிற்சி நிலையம் - சேனபுர, வெலிகந்த புனர்வாழ்வு நிலையத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர்.

இப்புனர்வாழ்வு பெறுநர்களின் புனர்வாழ்வு கால எல்லையான ஒருவருடத்தில் முதல் 06 மாத காலத்தினுள் ஆரம்ப புனர்வாழ்வு செயற்பாடு மற்றும் அதற்குப்பின்னர் தொழிற்கல்வி பயிற்சிக்காக ஆற்றுப்படுத்தப்படுவர். இவ்வாறு புனர்வாழ்வளிப்பதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட புனர்வாழ்வு பெறுநர்களுக்கு அவசியமான அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்து, முறையான கால அட்டவணையொன்றின் படி மனநல , ஆன்மீக, வெவ்வேறு பட்ட சிகிச்சை முறைகள், கல்வி மற்றும் தொழில்நுட்ப, தலைமைத்துவ மற்றும் ஆளுமை விருத்தி பயிற்சிகள், அழகியல் பயிற்சிகள், விளையாட்டுகள், வாழ்வாதார முன்னேற்றத்திற்காக சுயதொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான பயிற்சிகள் மற்றும் தொழிற்கல்வியினை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று புனர்வாழ்வு காலம் முடிவடைந்த பின்னர் அவர்களின் மிகுதி வாழ்க்கையினை வெற்றிகொள்வதற்கு தேவையான பின்புலம் இக்காரியாலயத்தின் கீழ் ஸ்தாபித்துள்ள புனர்வாழ்வுக்கு பின்னரான உதவிக்கிளையின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

### 4.2.4 நோக்கம் மற்றும் குறிக்கோள்.

புனர்வாழ்வுபெறுநர்களின் பொருளாதார, சமூக, கல்வி மட்டத்தின் அடிப்படையில் யுத்த மனோநிலையிலிருந்தும் அபாயகர ஔடத பாவனையிலிருந்தும் தூரவிலகுவதற்கு உதவுதல், உளவியல் சிகிச்சையளிப்பு முறைகள் ஊடாக நடத்தைசார் மாற்றமொன்றுக்கு உட்படுத்துதல்.

அவர்களின் வாழ்க்கைச் சூழல் மற்றும் நிலைமையை மாற்றுவதன் ஊடாக போராட்ட குணம் மற்றும் போதைப்பொருள்களுக்கு அடிமையாதலிலிருந்து அவர்களை விடுவித்தல்.

சமூகமயமாக்கப்பட்ட பின் தொழில்வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ளக் கூடியவாறு தொழில்சார் அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

குடும்ப அமைப்பினை வலுப்படுத்துதல், அதன் முக்கியத்துவம், இருதரப்பு பொறுப்புக்களைப் பற்றி புரியவைத்தல், குடும்பக் கட்டுக்கோப்பை பேணிச்செல்வதற்கான பொருளாதார, சமூக, நலன்புரி நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புதல்.

### 4.2.5 புனர்வாழ்வு பெறுவோரை நிலையங்களுக்கு ஆற்றுப்படுத்தல்.

நீதிமன்ற உத்தரவுகள் மூலம் புனர்வாழ்வு செயற்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்ற வழிதவறிச்சென்ற போராளிகளும் அபாயகர ஔடதங்கள் தொடர்பான குற்றவாளிகளும் 2018.01.01 ஆந் திகதியிலிருந்து 2018.12.30 ஆந் திகதி வரை பின்வருமாறு புனர்வாழ்வு நிலையங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டடு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர்

| விபரம் | புனர்வாழ்வளிப்பதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கை | சமூகமயமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வழிதவறிச்சென்ற போராளிகள் | **2** | **7** |
| அபாயகர ஔடதங்கள் தொடர்பான குற்றவாளிகள் | **1848** | **630** |

**4.5 இதுவரையில் பனர்வாழ்வு நிலையத்தில் இருக்கும் புனர்வாழ்வு பெறுநர்களின் எண்ணிக்கை**

| விபரம் | புனர்வாழ்வு நிலையம் | புனர்வாழ்வு பெறுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வழிதவறிச்சென்ற போராளிகள் | ஒருங்கிணைப்ப காரியாலயம்- வவுனியா | **1** |
| அபாயகர ஔடதங்கள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் | சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - கந்தகாடு | **1,317** |
| | மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வியறிவு பயிற்சி நிலையம் - சேனபுர | **482** |

4.6. **தற்போது உள்ளவரை புனர்வாழ்வளிக்கப்பட்டோர்**

### 4.2.6 செயற்பாடுகள்.

**4.2.6.1 வழிதவறிச்சென்ற போராளிகளுக்கான புனர்வாழ்வு செயற்பாடுகள்.**
இப் பயனாளிகளுக்காக இவ் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.




**4.9 புனர்வாழ்வ பெறுநர்கள்க்காக நிகழ்த்தப்பட்ட நிகழ்ச்சிகள்**





**நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய புனர்வாழ்வளிக்கப்பட்டோர்**

**வழிதவறிச்சென்ற போராளிகளுக்கான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான நிதி முன்றேற்றம்**




ஒதுக்கப்பட்ட நிதி - 36,200,000.00

புனர்வாழ்வு செயற்பாட்டிற்கான மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை - 50

மீள் பரிசீலனை நிகழ்வுகளுக்கான மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை - 12182

இவ் ஆண்டு நிலையத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பயனாளிகள் எண்ணிக்கை - 2

சமூகமயப்படுத்தப்பட்ட புனர்வாழ்வு பெறுநர்கள் எண்ணிக்கை - 9

இவ் ஆண்டிற்குள் புனர்வாழ்வு செயற்பாட்டிற்காக செலவிடப்பட்ட தொகை ரூ 35,286,823.85

4.10. ***புனர்வாழ்வுசெயற்பாடுகளின் நிதி முன்னேற்றம்***

### **4.2.6.2** அபாயகர ஔடதம் தொடர்பான குற்றவாளிகளுக்கான புனர்வாழ்வு செயற்பாடுகள்.

இப் பயனாளிகளுக்காக இவ் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.




**4.11** நிகழ்வுகளில் பங்கேற்கும் புனர்வாழ்வ பெறுநர்கள்

தொழில் பயிற்சிக்காக மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வியறிவு பயிற்சி நிலையம் - சேனபுர நிலையத்திற்குள் ஆற்றுப்படுத்தப்படுவதோடு அங்கு புனர்வாழ்வு நிகழ்வுகளுடன் தொழில் பயிற்சி கற்கைநெறிகள் பின்வருமாறு

| இல | தொழில் பயிற்சி கற்கைநெறிகள் | பங்கு பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | NVQ III ஆம் மட்ட கற்கைநெறி ( தச்சு, வெல்டிங்,குழாய் வேலை, வீட்டு மின் தொழில், மேசன் கற்கை நெறி) | 543 |
| 2 | சான்றிதழுக்கான பயிற்சி நெறி ( தையல், கணிணி, உணவக உதவியாளர் கற்கை நெறி) | 80 |
| 3 | **மொத்தம்** | **623** |

**4.7** தொழில் பயிற்சி கற்கைநெறிகள்





நிகழ்வுகளில் பங்கேற்கும் புனர்வாழ்வ பெறுநர்கள்

வழிதவறிச் சென்ற போராளிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான நிதி அறிக்கை.




நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை - ரூ 400,000,000.00

புனர்வாள்விற்காக மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை - 1,000

மீள் பரிசீலனைக்கான பயனாளிகள் எண்ணிக்கை - 1848

இவ்வருடத்திற்குள் நிலையத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட புனர்வாழ்வு பெறுநர் எண்ணிக்கை - 1848

சமூகமயப்படுத்தப்பட்ட பயனாளிகள் எண்ணிக்கை - 630

இவ்வருடத்திற்குள் புனர்வாழ்வு செயற்பாட்டிற்கு செலவிடப்பட்ட தொகை - 390,175,786.15

4.12 சமூகமயப்படுத்தப்பட்ட பயனாளிகளின் மீள்பரிசீலனை நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

## 4.2.7 புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான தொடர்நடவடிக்கை

### 4.2.7.1 வழிதவறிச்சென்ற போராளிகள்

வழிதவறிச் சென்ற போராளிகள் 2009 ஆம் ஆண்டு போரின் பின்னர் அரசிடம் சரணடைந்த மற்றும் நீதிமன்ற உத்தரவின் பெயரில் ஆற்றுப்படுத்தப்பட்ட நபர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக் கொள்வதை இலக்காக கொண்டு

புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களின் பொரளாதார சமூக மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கான மேம்படுத்தல் தொடர்பாக 08 ஒருங்கிணைப்புக் காரியாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

| மாதம் | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாசி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 95 | 180 | 164 | 147 | 137 | 62 | 322 | 490 | 374 | 307 | 334 | 310 | 2922 |

**4.8 வழிதவறிகச் சென்ற போராளிகளின் மீள் பரிசீலனை தொடர்பான விபரங்கள்.**

| இல | ஒருங்கிணைப்புக் காரியாலயம் | பங்குபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 323 |
| 2 | கிளிநொச்சி | 312 |
| 3 | மன்னார் | 500 |
| 4 | திருகோணமலை | 339 |
| 5 | வவுனியா | 167 |
| 6 | மட்டக்களப்பு | 2078 |
| 7 | **எண்ணிக்கை** | **3,719** |

**4.9 : 2018 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் விடயங்கள்**

## 4.2.7.2 அபாயகரமான போதைபொருட்கள் தொடர்பான புனர்வாழ்வு பெற்றோர்.

அபாயகர ஔடதங்கள் தொடர்பான குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயமாக்கப்பட்டதன் பின்னர் அவர்களின் ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்திற்கு அமைய அவர்களின் தொடர் நடவடிக்கை ஒருங்கிணைப்பு அலுவலங்கள் ஆறின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

| ஆறு மாவட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட தொடர் நடவடிக்கைகள் | அபாயகர ஔடதங்கள் பாவனை அற்றோர் | | மீணடும் அபாயகர ஔடதங்கள் பாவனை செய்வோர் | | | அனைப்அசகïÈ லஹ்ழ்மனகமன். ய | | காரியாலய ரீதியாக தொடர் நடவடிக்கை மேற்கொணடுள்ளோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எவ்வித அபாகர ஔடதங்களின் பாவனையும் அற்றோர் | போதைப் பொருள் மற்றும் புகை பாவனை அற்றோர் | மீணடும் அபாயகர ஔடதங்கள் பாவனை செய்வோர் | மீண்டும் சிறைபடுத்தப்பட்டோர் | மீண்டும் புனர்வாழ்டவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டோர் | விலாசத்தில் அற்றோர்/விலாசத்தை கண்டுபிடிக்க முடியாதோர் | இறந்தோர் எண்ணிக்கை | |
| ரங்¿ வட்ஸ்ரீத | 508 | 487 | 672 | 143 | 51 | 243 | 21 | 2125 |
| | 24% | 23% | 32% | 7% | 2% | 11% | 1% | 100% |

**4.10 :** ***ஆபத்தான போதைவாஸ்த்துக்கள் தொடர்பான புளர்வாழ்வு***

சமூகமயப்படுத்தப்பட பயனாளிகள் பொருளாதார சமூக மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேம்படுத்தவதோடு அவர்களின் பாதுகாப்பு மற்றும் பாடநெறி தொடர்பாக தேர்ச்சி பெற்ற அதிகாரிகளின் (சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்கள அதிகாரிகள், தேசிய அபாயகர

ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை அதிகாரிகள், சமூக சேவைகள் திணைக்களத்தின் ஆலோசகர்கள், பொலிஸ் மது ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள்) பங்குபற்றலோடு கிராம சேவகர் மற்றும் பொது மக்களுக்காக சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படுகின்றன. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு.

| இல | ஒருங்கிணைப்புக் காரியாலயம் | பங்குபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கொழும்பு | 482 |
| 2 | குருணாகலை | 1450 |
| 3 | கம்பஹ | 945 |
| 4 | களுத்தரை | 831 |
| 5 | புத்தளம் | 364 |
| 7 | **எண்ணிக்கை** | **4072** |

**4.11 : பின்வரும் விழிப்புணர்வு திட்டம்**

### 4.2.8 சமூகமயப்படுத்தப்பட்ட வழி தவறிச்சென்ற போராளிகளுக்காக வழங்கப்பட்ட உதவிகள்

| இல | பொருள் | மொத்தம் |
|---|---|---|
| 1 | மிதிவண்டி | 376 |
| 2 | மீன்பிடிவலை | 268 |
| 3 | தையல் இயந்திரம் | 139 |
| 4 | தண்ணீர் இறைப்பான் | 150 |
| 5 | கட்டுமான பொருட்கள் | 35 |
| 6 | கூரைத்தகடு | 30 |
| 7 | சலூான் பொருட்கள் | 15 |
| 15 | கமரா பிளாசர் | 1 |
| 16 | அச்சு இயந்திரம் | 1 |
| 17 | எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம் | 1 |
| 18 | சக்கரம் நீக்கும் இயந்திரம் | 1 |
| 19 | பிளொக் கல் இயந்திரம் | 1 |

| இல | பொருள் | மொத்தம் |
|---|---|---|
| 8 | மின் உபகரணங்கள் | 10 |
| 9 | வெல்டிங் உபகரணம் | 9 |
| 10 | மோட்டார் உபகரணம் | 9 |
| 11 | கராஜ் உபகரணங்கள் | 4 |
| 12 | படகு | 3 |
| 13 | கணினி | 2 |
| 14 | கமரா | 2 |
| 20 | பசு மாடு | 35 |
| 21 | ஆடுகள் | 16 |
| 22 | கோழி குஞ்சுகள் | 222 |
| 23 | குழந்தை உபகரணங்கள் | 1 |

**4.12 :** சமூகமயப்படுத்தப்பட்ட வழி தவறிச்சென்ற போராளிகளுக்காக வழங்கப்பட்ட உதவிகள்



சமூகமயப்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு பொருட்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள்

## 4.3 ஆட்களையும் ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை

### 4.3.1 இவ்வதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகள்

1. பாதிப்புக்குள்ளான வணக்கஸ்தலங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கான நிவாரணத் திட்டம்.
2. அரச ஊழியரின் பாதிக்கப்பட்ட ஆதனங்களுக்கான நட்டஈடு வழங்கல்.
3. இறப்பு மற்றும் காயமுற்ற சாதாரண பொது மக்களுக்கான நட்டஈட்டுத் திட்டம்.∴அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான இறப்பு மற்றும் காயங்களுக்கான நட்டஈடு வழங்கல்.
4. பொது மக்களது சொத்தழிவு நட்டஈட்டுத் திட்டம்.
5. சுயதொழில் கடன் திட்டம்.
6. சமூக மயப்படுத்தப்பட்ட பயிலுனர்களுக்கான சுயதொழில் கடன் திட்டம்.
7. பாதிக்கப்பட்ட வீடுகளை நிர்மானம் செய்தல் மற்றும் திருத்துவதற்கான கடனுதவித் திட்டம்
8. தொழில் அபிவிருத்தி தொடர்பாக பயிற்சித் திட்டம்
9. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பொது மக்களை அறிவூட்டும் வேலைத்திட்டங்கள்
10. நடமாடும் சேவை.

### 4.3.2 நட்டஈட்டு நிகழ்ச்சித் திட்டம்

இந்நட்டஈட்டுத் திட்டத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுவது பயங்கரவாத வன்செயல் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்கள் காரணமாக இறந்த மற்றும் காயமுற்ற மற்றும் சொத்துப் பாதிப்பிற்குட்பட்ட குடும்பங்களுக்காகும். இதன் கீழ் பொதுத் திறைசேரியினால் 2018ம் ஆண்டிற்காக ரூபா 1,467,982,670.00 ஆன தொகையொன்று கிடைக்கப் பெற்றதோடு அந்நிதியினால் 16221 பயனாளிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதோடு, அந்நிதியிலிருந்து 1689 ஆட்களுக்காக பயிற்சித் திட்டங்கள் 35 இதன் மூலம் நடாத்தியுள்ளது. அதற்கு மேலதிகமாக நட்டஈட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 14 அமுல்படுத்தியுள்ளது. அதன் முன்னேற்றம் 100% ஆகும்.

| 2018.01.01ம் திகதியிலிருந்து 2018.12.31ம் திகதி வரையான முன்னேற்ற அறிக்கை | | | |
|---|---|---|---|
| **இல** | **நட்டஈட்டுத் திட்டங்கள்** | **பயனாளிகளின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)** |
| 1 | இறப்பு மற்றும் காயமுற்ற சாதாரண பொது மக்களுக்கான நட்டஈடு வழங்கல் (இறந்த அரச மற்றும் சாதாரண பொதுமக்கள்) | 1852 | 155,912,475 |
| 2 | அரச ஊழியரின் பாதிக்கப்பட்ட ஆதனங்களுக்கான நட்டஈடு வழங்கல். | 2731 | 357,294,955 |
| 3 | பாதிப்புக்குள்ளான வணக்கஸ்தலங்களை புனர்நிர்மாணம் செய்வதற்காக நட்டஈடு வழங்கல் | 503 | 95,383,980 |
| 4 | பொது மக்களது சொத்தழிவுக்காக நட்டஈடு வழங்கல் | 11135 | 854,763,957 |
| | **முழுத் தொகை** | **16221** | **1,463,355,367** |

**4.13 நட்டஈட்டு கொடுப்பனவு**




4.13 நட்டஈட்டு கொடுப்பனவு

**MAS – மரண, மற்றும் காயப்பட்டோருக்கான இழப்பீடு வழங்கல் பொதுமக்கள் / அரசாங்க உத்தியோகத்தர்**

**GPC – பொதுமக்களிற்கான சொத்து இழப்பீடு வழங்கல்**

**GSP – அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான சொத்து இழப்பீடு வழங்கல்**

**RLP – வேலைத்தளங்களில் பாதிப்புக்குள்ள இடங்களை மீள்க்கட்டுதல் / புனரமைப்புச் செய்தல்**

### 4.3.3. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள்

இதன் கீழ் பிரதான வேலைத்திட்டங்கள் 03 புனர்வாழ்வு அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்றது.

01. உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டம்
02. கடன் பயனாளிகளின் பயிற்சித் திட்டம்
03. நடமாடும் சேவைகள் மற்றும் நட்டஈடு வழங்கும் வைபவங்கள்

| **2018.01.01ம் திகதியிலிருந்து 2018.12.31ம் திகதி வரையான பயிற்சித் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை** | | | |
|---|---|---|---|
| **இல** | **பயிற்சித் திட்டங்கள்** | **பயிற்சித் திட்டங்கள்** | **வழங்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)** |
| 1 | உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டம் | 242 | 1,276,736 |
| 2 | கடன் பயனாளிகளின் பயிற்சித் திட்டம் | 1562 | 2,202,584 |
| 3 | நடமாடும் சேவைகள் மற்றும் நட்டஈடு வழங்கும் வைபவங்கள் | 12 | 1,147,982 |

4.14 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள்

### 4.3.4. கடன் திட்டங்கள்

புனர்வாழ்வு அதிகார சபையினால் அமுல்படுத்தும் பின்வரும் மூன்று கடன் திட்டங்கள் அவையாவன அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கிகளுடன் இணைந்து செயற்படுத்தப்படுகின்றன. கடன் திட்டங்கள் ஊடாக 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையான காலங்களில் மொத்தமாக 985 கடன்கள் பயனாளிகள் மத்தியில் ரூபா 2,915,000.00 விடுவிக்கப்பட்டுள்ளது.

| புனர்வாழ்வு அதிகார சபையினால் அமுல்படுத்தும் கடன் திட்டம் | | | |
|---|---|---|---|
| தொ. இல | **திட்டம் திட்டம்** | **விடுவிக்கப்பட்ட கடன் எண்ணிக்கை** | **விடுவிக்கப்பட்ட கடன் தொகை** |
| **1** | சாதாரண பொதுமக்களுக்கான சுயதொழில் கடன் திட்டம் | 692 | 144,645,000.00 |
| **2** | புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களுக்கான சுயதொழில் கடன் திட்டம் | 186 | 41,720,000.00 |
| **3** | வீட்டுக்கடன் திட்டம் | 107 | 26,550,000.00 |
| மொத்தம் | | **985** | **212,915,000.00** |

**4.15 கடன் திட்டங்கள்**







**4.14 கடன் திட்டங்கள்**



2018.04.05 ம் திகதி இறந்த மற்றும் காயமுற்றவர்களுக்காக நட்டஈட்டு வைபவம் கிளிநொச்சி மாவட்டம்



2018.04.06ம் திகதி அழிவடைந்த சொத்துக்களுக்காக முல்லைத்தீவில் இடம்பெற்ற நட்டஈட்டு வைபவம்



2018.04.07ம் திகதி அழிவடைந்த வணக்கஸ்தலங்களுக்காக மட்டக்களப்பில் இடம்பெற்ற நட்டஈட்டு வைபவம்



2018.04.05 ம் திகதி அரச ஊழியர்களின் அழிவடைந்த சொத்துக்களுக்காக முல்லைத்தீவில் இடம்பெற்ற நட்டஈட்டு வைபவம்





2018.05.25,26 மற்றும் 2018.08.10,11ம் திகதிகளில் சுயதொழில் கடன் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் இடம்பெற்ற கண்காட்சி





2014 மற்றும் 2017 ஆண்டுகளில் கிந்தோட்டை மற்றும் பேருவளை பிரதேசங்களில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக அழிவடைந்த சொத்துக்களுக்கான நட்டஈட்டு வைபவம்



2018.03.24 ம் திகதி இடம்பெற்ற உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டம்

## 4.4 வரையறுக்கப்பட்ட வடக்கு கிழக்கு

### 4.4.1 தூர நோக்கு

கடலுணவின் மேம்பட்ட அறுவடையினை அடைவதற்கு ஏற்றதாக உள்ளூர் மீனவர்களின் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்காக போதியளவு உயர்தரத்திலான மீன்பிடி வலைகளையும் ஏனைய மீன்பிடி சாதனங்களையும் வழங்கி மீன்பிடித் துறைக்கான சிறந்த பங்காளிப்பாளராக இருத்தல்.

### 4.4.2 நோக்கம்

நாட்டின கடற்றொழில் செயற்பாடுகளையும் கடலுணவு உற்பத்தியினையும் ஊக்குவிப்பதற்காக பருவகால தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஏற்றவகையில் தராதரமுடைய மீன்பிடி வலைகள் ஏனைய மீன்பிடி சாதனங்களை உற்பத்தி செய்தலும் வழங்கல் செய்தலும்.

### 4.4.3 கொள்கை

கம்பனியானது அரசாங்க நிறுவனம் என்ற வகையில் கிராம மட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கான நலனோம்புகையை மனதிற்கொண்டு வியாபாரச் செயற்பாடுகளுக்கு செய்வதற்கு அனைத்து வாய்ப்புக்களையும் வழங்கும் என்பதோடு நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற மீனவர்களின் நலனோம்புகைக்கு முன்னுரிமையும் வழங்கும்.



### 4.4.4 நிறுவனம்

100% திறைசேரி உரிமையுடைய வரையறுக்கப்பட்ட மீன்பிடி உற்பத்திக் கம்பனியான நோத் சீ நிறுவனம் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2001 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டதோடு அது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க புதிய கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டது.

தற்போது தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் (முன்னர் மரபுசார் கைத்தொழில் மற்றும் சிறு தொழில்முயற்சி அமைச்சின் கீழிருந்த) நோக்கெல்லையின் கீழ் வருகின்ற வரையறுக்கப்பட்ட நோத் சீ நிறுவனம் யாழ்ப்பாணம் குருநகரில் ஒரேயொரு மீன்பிடி வலைத் தொழிற்சாலையை மட்டுமே கொண்டிருந்ததோடு அதன் பின்னர் கடற்றொழில் நீரக வள அபிவிருத்தி அமைச்சின் கீழ் வருகின்ற வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்திடமிருந்து லுணுவில மற்றும் வீரவில பிரதேசங்களில் உள்ள மீன்பிடி வலை தொழிற்சாலைகள் வரையறுக்கப்பட்ட நோத் சீ நிறுவனத்திற்கு 2010 ஆம் ஆண்டு நவம்பர் 02 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தின்படி மாற்றப்பட்டன. அத்துடன் வரையறுக்கப்பட்ட நோத் சீ நிறுவனம் மேற்படி இரண்டு தொழிற்சாலைகளையும் பொறுப்பேற்றதோடு 2011 நவெம்பரிலிருந்து அதன்

நடவடிக்கையினைத் தொடர்ந்தது. இவ்வருட காலப்பகுதியின் கம்பனியின் மொத்த தொழில்வாய்ப்பு 259 பேராகும்.

நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட கம்பனியாக இருந்துவருகின்ற கம்பனியானது தொழில்வாய்ப்பு, வருமான உழைப்பு மற்றும் நாட்டின் கடலுணவு உற்பத்தி ரீதியில் ஈடுபட்டு வருகின்றது. மீன்பிடித் துறையானது இலங்கையின் கடல்சார் மற்றும் நன்னீர் தேக்கங்களில் ஈடுபடுத்தப்படுகின்றதோடு இது கரையோரப் பகுதியிலும் உலர்வலய நீர்த்தேக்கங்களை அண்டி வாழுகின்ற மக்களின் வாழ்வாதார செயற்பாட்டின் முக்கிய பங்களிப்பைச் செய்கின்றது. மீன்பிடி செயற்பாடுகளின் தங்கியுள்ள மீனவ மற்றும் அவரது குடும்பங்கிளின் எண்ணிக்கை 150,000 இற்கும் மேற்பட்டதாகும். வருடமொன்றுக்கு மீன்பிடி வலைகளுக்கான தேவை 4200 மெற்றிக் தொன் ஆகும் என்பதோடு இதில் 36 வீதமான மீன்பிடி வலைகள் உள்நாட்டு உற்பத்தியாளர்களால் வழங்கப்படுவதோடு (வருடத்திற்கு 200 - 300 மெற்றிக் தொன் வழங்கக் கூடிய 5 கம்பனிகள்) வரையறுக்கப்பட்ட நோத் சீ நிறுவனமானது வருடத்திற்கு 720 மெற்றிக் தொன் கொள்ளளவுடையதாக இயங்கி மீன்பிடி வலைகளுக்கான தேவையில் 7 வீத பங்களிப்பைச் செய்ய முடியுமாக இருக்கின்றது.

### 4.4.5 முக்கிய துறைகள்

1. மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தலும் மீனவர்களுக்கு சேவைகளை வழங்குதலும்

2. உயர் தரத்திலான மீன்பிடி வலைகள் மற்றும் ஏனைய மீன்பிடி உபகரணங்களை உற்பத்தி செய்வதனூடாக மீனவ சமூகத்தின் பருவகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

3. உற்பத்தி சார் மணித்தியாலங்களை அதிகரிப்பதனூடாக தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்ததல்.

### 4.4.6 பிரதான செயற்பாடுகள்

நாட்டில் மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் தைக்கும் நூல்களை உற்பத்தி செய்து வழங்கல் செய்தல்.

| இல. | விபரம் | குருநகர் | லுணுவில | வீரவில | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01. | மொத்த உற்பத்திக் கொள்ளளவு - தலா வருடத்திற்கு | 300 மெ.தொ. | 240 மெ.தொ. | 180 மெ.தொ. | 720 மெ.தொ |

4.16 தொழிற்சாலைகளின் மொத்த மீன்பிடி வலைகளின் தயாரிப்பு கொள்ளளவு

| இல. | விபரம் | குருநகர் | லுணுவில | வீரவில | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01 | தலா வருடத்திற்கான இலக்கு உற்பத்தி மெ. தொன்னில் | 267 மெ.தொ | 240 மெ.தொ | 168 மெ.தொ | 675 மெ.தொ |

**4.17 2018 ஆம் ஆண்டுக்கான தொழிற்சாலைகளின் உற்பத்தி இலக்கும் பயனாளிகளும்**

தற்பொழுது வரையறுக்கப்பட்ட நோத் சீ லிமிடெட் கட்டிடம் சீரமைப்பு நிறுவனமானது அதன் மீண்டெழும் செலனவினங்களுக்கு திறைசேரியின் மீது தங்கியிருப்பதில்லை. அது மீன்பிடி வலைகளின் விற்பனையிலிருந்தான அதன் சுயமாக உழைக்கப்பட்ட நிதிகளில் செயற்படுகின்றது



### 4.4.7. 2017 டிசம்பர் 31 டில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கை

**மீன்வலைகள் உற்பத்தி – 2017**

| மாதம் | உற்பத்தி - மெட்ரிக். | | | | |
|---|---|---|---|---|---|
| | குருநகர் | லுணுவில | வீரவில | மொத்தம் | கா |
| ஜனவரி | 3.89 | 4.80 | 2.53 | 11.22 | |
| பிப்ரவரி | 4.41 | 6.35 | 3.91 | 14.67 | |
| மார்ச் | 9.01 | 9.25 | 3.19 | 21.45 | 47.34 |
| ஏப்ரல் | 8.27 | 8.63 | 3.60 | 20.50 | |
| மே | 9.03 | 7.30 | 3.90 | 20.23 | |
| ஜூன் | 9.48 | 7.47 | 5.41 | 22.36 | 63.10 |
| ஜூலை | 11.55 | 6.68 | 6.69 | 24.92 | |
| ஆகஸ்ட் | 10.44 | 11.18 | 12.39 | 34.01 | |
| செப்டம்பர் | 7.00 | 11.69 | 13.03 | 31.72 | 90.65 |
| அக்டோபர் | 5.42 | 8.67 | 9.30 | 23.40 | |
| நவம்பர் | 4.80 | 10.67 | 5.76 | 21.23 | |
| டிசம்பர் | 4.63 | 7.93 | 9.55 | 22.10 | 66.73 |
| **மொத்தம்** | **87.91** | **100.63** | **79.27** | **267.82** | |

**4.18 மீன்வலைகள் உற்பத்தி – 2017**

**மீன்வலைகள் விற்பனை - 2017**

| மாதம் | விற்பனை- மில்லியன் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குருநகர் | | லுணுவில | வீரவில | மொத்தம் | கா |
| | கடன் | பணம் | | | | |
| ஜனவரி | 3.854 | 1.020 | 4.152 | 3.500 | 12.526 | |
| பிப்ரவரி | 3.635 | 0.168 | 7.595 | 3.779 | 15.176 | |
| மார்ச் | 8.973 | 0.420 | 9.891 | 6.197 | 25.481 | 53.183 |
| ஏப்ரல் | 6.837 | 0.167 | 8.877 | 2.866 | 18.747 | |
| மே | 7.374 | 0.154 | 9.443 | 4.003 | 20.974 | |
| ஜூன் | 0.100 | 0.170 | 9.192 | 3.213 | 12.676 | 52.397 |
| ஜூலை | 1.088 | 0.206 | 10.049 | 3.171 | 14.514 | |
| ஆகஸ்ட் | 0.439 | 0.088 | 14.784 | 2.490 | 17.801 | |
| செப்டம்பர் | 2.100 | 0.662 | 15.002 | 2.852 | 20.617 | 52.932 |
| அக்டோபர் | 1.245 | 20.120 | 9.852 | 8.329 | 39.546 | |
| நவம்பர் | 2.344 | 26.841 | 28.216 | 3.454 | 60.855 | |
| டிசம்பர் | 1.002 | 10.925 | 12.027 | 7.681 | 31.635 | 132.036 |
| **மொத்தம்** | **38.991** | **60.942** | **139.080** | **51.535** | **290.547** | |

**4.19 மீன்வலைகள் உற்பத்தி – 2017**




**4.15 : மீன்வலைகள் உற்பத்தி - 2017**

| மீன்வலைகள் உற்பத்தி - 2018 | | | | | |
|---|---|---|---|---|---|
| மாதம் | உற்பத்தி - மெட்ரிக். | | | | |
| | குருநகர் | லுணுவில | வீரவில | மொத்தம் | கா |
| ஜனவரி | 7.37 | 10.14 | 9.56 | 27.07 | |
| பிப்ரவரி | 5.31 | 9.11 | 6.75 | 21.17 | |
| மார்ச் | 10.11 | 8.82 | 11.21 | 30.14 | 78.38 |
| ஏப்ரல் | 5.36 | 3.63 | 5.04 | 14.04 | |
| மே | 6.26 | 9.20 | 8.76 | 24.23 | |
| ஜூன் | 6.27 | 10.14 | 11.68 | 28.09 | 66.36 |
| ஜூலை | 5.56 | 7.89 | 10.83 | 24.29 | |
| ஆகஸ்ட் | 9.71 | 8.57 | 9.64 | 27.93 | |
| செப்டம்பர் | 6.40 | 5.60 | 5.68 | 17.68 | 69.89 |
| அக்டோபர் | 4.67 | 7.87 | 9.74 | 22.28 | |
| நவம்பர் | 5.79 | 8.29 | 5.32 | 19.39 | |
| டிசம்பர் | 3.10 | 7.09 | 6.19 | 16.38 | 58.05 |
| **மொத்தம்** | **75.93** | **96.35** | **100.40** | **272.69** | |

**4.20. மீன்வலைகள் உற்பத்தி – 2018**




**4.16 மீன்வலைகள் விற்பனை – 2018**

| மீன்வலைகள் விற்பனை - 2018 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | விற்பனை-மில்லியன் | | | | | |
| | குருநகர் | | லுணுவில | வீரவில | மொத்தம் | கா |
| | கடன் | பணம் | | | | |
| ஜனவரி | 1.446 | 8.777 | 20.438 | 2.829 | 33.490 | |
| பிப்ரவரி | 1.124 | 10.219 | 14.166 | 3.000 | 28.509 | |
| மார்ச் | 2.138 | 7.633 | 10.885 | 3.134 | 23.790 | 85.789 |
| ஏப்ரல் | 2.840 | 5.788 | 6.107 | 4.799 | 19.534 | |
| மே | 0.254 | 11.652 | 18.843 | 6.621 | 37.370 | |
| ஜூன் | 3.721 | 3.194 | 11.123 | 10.770 | 28.808 | 85.713 |
| ஜூலை | 0.752 | 6.285 | 22.579 | 6.586 | 36.202 | |
| ஆகஸ்ட் | 2.434 | 8.454 | 8.857 | 9.636 | 29.381 | |
| செப்டம்பர் | 4.335 | 0.444 | 8.664 | 3.038 | 16.482 | 82.065 |
